# Poisonous Germs of Wahabbism in Tableegh Jamath.

*In Urdu:-* **Allama Abul Jameel Muhammad Rizwanur Rahman (malwa),Indoorcity Kadasallahu Sirrahul Azeez.**

*In Tamil:* **Moulvi As-Shaikh Shaik Abdul Quadir Sufi Hazrath Kahiri Radiallahu Anhu**

# தப்லீக் ஜமாஅத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக் கிருமிகள்.

*உர்துவில்:*அல்லாமா அபுல் ஜமீல் முஹம்மது ரிழ்வானுர் ரஹ்மான் (மால்வா), இந்தூர் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்.

*தமிழில்:* மௌலவி அஷ்ஷெய்க் ஷெய்கு அப்துல்காதிர் ஸூபி ஹஜ்ரத் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

**பதிப்புரை**

**ஏகன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!**

இன்றைக்கு பலராலும் பரவலாகப் பேசப்படுகின்ற ஒரு இயக்கம் தப்லீக் ஜமாஅத். தீன் வழிப் பயணம் செய்திட வழிகாட்டும் ஒரு வழிகாட்டி தப்லீக் ஜமாஅத் என அவ்வியக்கத்தைக் குறித்து அறிமுகம் செய்யப்படுகிறது.

இதன் பெயரினைக்கேட்டு,அதன் வெளி வேஷத்தினைக் கண்டு மயங்கி அதனை உண்மையான இயக்கம் எனக் கருதி அதன் பின்னே செல்ல முற்படுகின்றனர் அப்பாவி முஸ்லீம்கள். ஆனால்……

உண்மையில் வஹ்ஹாபியத்தை இந்தியப் பெருநாட்டில் பரப்பிடத் தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே தப்லீக்!

இவ்வியக்கத்தை உருவாக்கிய இல்யாஸ், அவரது ஆசிரியர்கள் பேசிய பேச்சுக்களும், எழுதிய எழுத்துக்களும் இவ்வியக்கத்தின் அசல் நோக்கம் வஹ்ஹாபியத்தைப் பரப்புவது தான் என்பதை தெளிவுபடுத்துகிறது.

தப்லீக் என்றால் என்ன? அதன் தாத்பரியம் யாது? தப்லீகை ஸ்தாபித்த இல்யாஸின் கொள்கைகள் எவை? என்பன போன்ற வினாக்களுக்கு இதோ உங்கள் கரங்களில் வைத்திருக்கும் தப்லீக் ஜமாஅத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள் என்ற எங்கள் ஷெய்குனா அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டு விளக்கவுரைகள் எழுதப்பட்ட இந்நூல் மிகத் தெளிவான ஆதாரப் பூர்வமான பதில்களை தருகிறது.

தப்லீகின் உண்மைகளைத் தோலுரித்துக் காட்டுகின்ற ஒரு அற்புதமான இதே போன்ற வேறொரு நூல் தமிழில் இதுவரை வெளிவந்ததில்லை. அவ்வியக்கத்தைக் குறித்து மறுக்க இயலாத உண்மை களை அதன் தலைவர்களது நூற்களிலிருந்தே மேற்கோள் காட்டி எழுதப்பட்டுள்ளது இந்நூல்!

ஷெய்குனா அவர்களின் நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவது என்று நாங்கள் வகுத்துக்கொ ண்டுள்ள அடிப்படையில் இந்நூலை வெளியிடுவதில் பேருவகை கொள்கிறோம்.

இந்நூலை வாங்கிப் படித்து தப்லீகின் உண்மை நிலை புரிந்து அதன் தீய வழிகாட்டுதலில் இருந்து விலகி ஸுன்னத் வல்ஜ மாஅத்தின் நேரிய பாதை சென்றிட உங்களை அழைக்கின்றோம்.

இறைவா! இதைப் படிக்கின்ற பெருமக்கள் சீரிய பாதையுணர்ந்து ஸுன்னத் வல்ஜமாஅத்தின் அழ கிய பாதையில் சென்றிட கருணை புரிய உன்னை இரு கரம் ஏந்தி இறைஞ்சுகின்றோம்.

**வஸ்ஸலாம்.**

**இவண்,**

**ஹிஸ்புல்லாஹ் ஸபை**
ஸூபி மன்ஸில்,
காயல்பட்டணம் - 62804.

**குறிப்பு**

*இலங்கை மாத்தறை, கோட்டைக்கரை ஜும்ஆ பள்ளியில் 8.8.65 காலை 10 மணி யளவில் நடைபெற்ற தப்லீக் ஜமாஅத் விவாத மாநாட்டில் நடந்த உண்மை நிலைை ய தப்(பு)லீக் ஜமாஅத்தினர்கள் தங்களுக்கு சாதகமாக தப்பும் தவறுமாக திருத்தி, கள் ளத்தனமாக கையெழுத்து வாங்கி வெளியிட்டு மக்கள் கவனத்தைத் திருப்பிட முய ற்சிகள் செய்த பொழுது உண்மை நிலையை விளக்கிஅதற்கு மறுப்பாக வெளியிடப்ப ட்ட "விவேகமில்லா விவாத மாநாடும் வீணான தீர்ப்புகளும்"என்ற வெளியீட்டை ஐ ந்தாம், ஆறாம் பதிப்பு பின் பகுதியில் விசேஷ இணைப்பாக இணைத்துள் ளோம். பயன் பெறுவீர்களாக!*

بسم الله الرحمن الرحيم

نحمده سبحانه على آلائه ونعمائه ونصلي ونسلم على سيد انبيائه وعلى آله

واصحابه الذين فازوا بنصرته وولائه الى يوم لقائه . اما بعد

*சோதனை நிறைந்த இக்காலத்தில் விகற்பமான கொள்கையுடையவர்களும், விப ரீதக் கூட்டத்தார்களும் தோன்றுவது திகைப்பையும் ஆச்சரியத்தையும் கொடுக்கக் கூ*

*டிய விஷயமல்ல. ஏனென்றால், இன்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னதாகவே ஸெய்யிது ஆலம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இத்தகைய புதுவர்க்கத்தவர்க தோன்றுவார்கள் என்பதைப் பற்றி முன்னறிவிப்பாகக் கூறி எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.*

*அபூஹுரைரா றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது* **:-**

ان رسول الله صلى الله عليه وسلم قال تفرقت اليهود على احدى وسبعين
فرقة او ثنتين وسبعين فرقة والنصارى مثل ذلك وتفترق امتى على
ثلاث وسبعين فرقة ۔ (رواه الترمذى وصححه فى جامعه)

*றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். யூதர்கள் எழுபத்தோரு கூட்டமாக அல்லது எழுபத்திரண்டு கூட்டமாக பிரிந்தார்கள். அப்படியே கிறிஸ்தவர்களும், என்னுடைய உம்மத்துக்கள் எழுபத்தி மூன்று கூட்டங்களாகப் பிரிவார்கள்.*

*இதே கருத்துடைய மற்றொரு ஹதீது இபுனு உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்படுகிறது.*

قال رسول الله صلى الله عليه وسلم ان بنى اسرائيل تفرقت على ثنتين وسبعين ملة
وتفترق امتى على ثلاث وسبعين ملة كلهم فى النار الا ملة واحدة قالوا من هى
يارسول الله قال ما انا عليه واصحابى (رواه الترمذى وحسنه)

*றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். இஸ்ரவேலர்கள் எழுபத்திரண்டு கூட்டங்களாக பிரிந்தார்கள். என்னுடைய உம்மத்துகள் எழுபத்தி மூன்று கூட்டங்களாகப் பிரிவார்கள். ஒரு கூட்டத்தாரைத் தவிர மற்றெல்லாக் கூட்டத்தார்களும் நரகவாதிகள். யாரஸூலல்லாஹ். அந்த ஒரு கூட்டத்தார் எவர் என ஸஹாபாக்கள் கேட்டதற்கு, 'நானும் என்னுடைய ஸஹாபாக்களும் எந்தக் கொள்கையிலிருக்கிறோமோ அந்தக் கொள்கையுடைவர்கள் என்று றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். (இந்த ஹதீதை இமாம் திர்மதி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரிவாயத்துச் செய்து, சிறந்தது என்றும் கண்டிருக்கிறார்கள்.)*

*மேலும் இந்த ஹதீதை மற்றும் இமாம்களான அபூதாவூது, இபுனுமாஜா, அஹ்மதுப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்களும், வேறு முஹத்திதீன்களும் தங்களுடை*

டய கிரந்தங்களில் இதே வாசகத்திற்கு ஒற்றுமையான வாசகங்களைக் கொண்டு பற் பல ஸஹாபாக்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

“நானும் என்னுடைய ஸஹாபாக்களும் இருக்கிற கொள்கையிலிருப்பவர்கள்” என்று றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குறிப்பிட்டிருப்பவர்களைப் பற்றிய வியாக்கியானமாக, மிஷ்காத்து ஷரீபின் விரிவுரையான “மிர்காத்து” என்னும் கிரந்தத்தில் அதன் ஆசிரியர் முல்லா அலி காரீ அவர்கள் சொல்கிறார்கள்:-

لاشك ولاريب انهم اهل السنة والجماعة

“அவர்கள் ஸுன்னத்து வல்ஜமா அத்துக் கூட்டத்தார்கள் என்பதில் எவ்வித சந்தேகமோ, ஐயப்பாடோ கிடையாது”. மேலேக் கண்ட இந்த ஹதீதுகளினால் ஈடேற்றம் பெறுகிறவர்கள் ஸுன்னத்து வல் ஜமா அத்துக் கூட்டம் ஒன்றுதான். மற்றக்கூட்டத்தார்களெல்லாம் நரகவாதிகள் என்று தெரியவருவது போல றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்துகளாகிய உம்மத்து முஹம்மதிய்யாவும் பற்பல வகையாகப் பிரிவார்கள். அவர்களில் பலதரப்பட்ட கொள்கையுடைவர்கள் தோன்றுவார்கள் என்றும் தெரியவருகிறது. மேலும் அந்த சத்திய முன்னறிவிப்பாளராகிய நபிகள் நாயகம் றஸூலுல்லாஹிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தீர்க்கதரிசன முன்னறிவிப்பின் பிரகாரம் ஜப்ரிய்யா, கத்ரிய்யா, முஃதஸிலா, வஹ்ஹாபிய்யா, தேவுபந்தியா, மிர்ஸா இய்யா, சக்டாலவிய்யா என்றும் இன்னும் பேர் தெரியாத வேறு எத்தனையோ கூட்டங்களும் தோன்றின. இக்கூட்டத்தார்கள் ஸுன்னத்து வல்ஜமாஅத்துக் கூட்டத்தில் பாமர மக்களைத் தங்களின் கொள்கைகளில் இழுக்கப் பலவகையான பிரயத்தனங்கள் செய்தனர். அவைகளில் சில கூட்டங்கள் பெயர்மறையும் புதைகுழியில் மறைக்கப்பட்டு இன்று பொதுஜனங்களுக்கு அவற்றின் பெயர்கூடத் தெரியாத அளவுக்கு மாண்டு மறைந்து போயின. இன்னும் சில கூட்டத்தினர் தங்களுடைய இயலாமையை உணர்ந்து தங்களின் பிரச்சாரக் கோட்டை தங்கள் சமூகத்திற்குள்ளாகவே கட்டுப்படுத்திக் கொண்டார்கள். ஸுன்னத்து வல்ஜமாஅத்து மக்களுடன் கொள்கை விவகாரத்தில் குதர்க்கம் செய்வதை விட்டுவிட்டார்கள். ஆனாலும், சில கூட்டத்தார்கள் இன்று வரையும் பொதுமக்களை ஏமாற்றி வழிகெடுக்கக்கூடிய வேலையிலேயே கண்ணும் கருத்து மாயிருக்கிறார்கள். அத்தகைய கூட்டத்தார்களில் **வஹ்ஹாபிய்யாக் கூட்டத்தார்** மிக முக்கியமானவர்கள்.

1. வஹ்ஹாபியாக்களிடத்தில் அல்லாஹுத்த ஆலா பொய் சொல்லலாம் என்ற அகீதா (நிர்ணயம்) உண்டு.

அவர்கள் குறிப்பிடும் அவ் لاشك ولاريب انهم اهل السنة والجماعة வர்ணனையை விட்டும் அல்லாஹ் மிகவும் தூய்மையானவன்.

*அந்த வஹ்ஹாபியாக்களின் இமாம் மௌலவி இஸ்மாயில் திஹ்லவி தனது ‘ஏக்ரோஜி’ என்ற நூலின் (ரிஸாலா) 145 வது பக்கத்தில் சொல்கிறார்:-*

ہم نہیں مانتے کہ اللہ کا جھوٹ بولنا محال ہے

*“அல்லாஹுத்த ஆலா பொய் சொல்லுவது* محال *அசம்பாவிதம் என்று சொல்வதை நாம் ஒப்புக் கொள்ளமாட்டோம்”.*

*இந்தக் கொள்கையைத்தான் தப்லீகு ஜமா அத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் உடைய இரண்டாவது குருவான மௌலவி கலீல் அஹ்மது என்பவர் தனது “பராஹீனே காதிஆ” என்ற நூலின் இரண்டாவது பக்கத்தில் சொல்கிறார்.*

امکان کذب کا مسئلہ تو اب جدید کسی نے نہیں نکالا قدما میں اختلاف ہے

*“அல்லாஹுத்த ஆலா பொய் சொல்லலாம் என்ற மஸ்அலாவை இப்போது புதிதாக யாரும் சொல்லவில்லை. முன்னோர்களிலேயே இதில் அபிப்பிராய பேதமுண்டு”*
.

*ஸுன்னத்துஜமாஅத்துக்களாகிய நம்முடைய கொள்கை யாகிறது. பொய், பித்தலாட்டம், ஏமாற்று இவைகளெல்லாம்* عیب *(ஐபு) வடுக்கள். அல்லாஹு ஸுப்ஹானஹுவதஆலா சகல (ஐபு) வடுக்களை விட்டும் பரிசுத்தமானவன் என்பதாகும்.*

*2. வஹ்ஹாபியாக்களிடத்தில் அல்லாஹுத் தஆலாவுடைய ஸிபத்துக்கள் இஷ்டத்தைச் சேர்ந்ததும் புதிதுமாகும். அவர்களின் இமாம் மௌலவி இஸ்மாயில் திஹ்லவி தனது “தக்வியத்துல் ஈமான்” என்னும் நூலின் 16வது பக்கத்தில் எழுதியிருக்கிறார்.*

غیب کا دریافت کرنا اپنے اختیار میں ہو کہ جب چاہے کر لیجئے یہ اللہ ہی کی شان ہے

*“மறைவான சங்கதிகளை அறிவது அல்லாஹ்வின் இஷ்டத்தைப் பொறுத்ததாகும். எப்பொழுது நாடுவானோ அப்பொழுது விசாரித்துக் கொள்கிறான். இது அல்லாஹ் ஸாஹிபுடைய கருமமாகும்.”*

*அவருடைய இவ்வாசகத்தினால் அல்லாஹுத் தஆலாவின் அறிவு (* علم *) இஷ்டத்தைச் சேர்ந்ததென்று துலாம்பரமாக விளங்குகிறது. இஷ்டத்தைச் சேர்ந்த ஸிபத்துக்களெல்லாம் புதிதானதாயிருக்கும் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும்.*

*“ஷரஹு அகாயிது நஸபீ” என்ற கிதாபில் வருகிறது.*

الصادر عن الشئ بالقصد والاختيار يكون حادثا بالضرورة

*"ஒரு வஸ்துவிலிருந்து நாட்டத்தோடும், இஷ்டத்தோடும் உண்டாகிற செயல் கண்டிப்பாக புதிதானதேயாகும்".*

*அஹ்லுஸ் ஸுன்னத்து வல் ஜமா அத்துக்களாகிய நம்முடைய கொள்கையாகிறது . அல்லாஹுத் தஆலா வின் தாத்தும் ஸிபாத்தும் பூர்வீகமானது என்பதாகும்.*

*3. வஹ்ஹாபியாக்கள் அல்லாஹுத் தஆலாவுக்கு காலம், ஸ்தலம், திசைகளைக் குறிப்பிடுகிறார்கள். அவர்களுடைய இமாம் மௌலவி இஸ்மாயில் தனது "ஈளாஹுல் ஹக்"என்னும் நூலின் 35 வது பக்கத்தில் சொல்கிறார்,*

"تنزیہ او تعالیٰ از زمان و مکان و جہت و اثبات رؤیت بلا جہت از قبیل بدعات است

*"அல்லாஹுத் த ஆலா காலம், இடம், திசைகளை விட்டும் பரிசுத்தமானவ னென்பதும்,திசைகளில்லாது (கியாமத்து நாளில்) அவனைப் பார்க்கப்படுமென்று சொல்வது பிதுஅத்களிலுள்ளதாக இருக்கும்."*

*கருத்தாவது அல்லாஹுத் தஆலா காலம், இடம், திசைகளை விட்டும் பரிசுத்தமானவன் என்றும், அவனுடைய தரிசனம் திசைகளிலல்லாது கிடைக்கும் என்று நம்புவது பித்அத்தாக இருக்கும்.**

---

* மௌலவி இஸ்மாயில் திஹ்லவி தனது தக்வியத்துல் ஈமான் என்னும் நூலின் 45வது பக்கத்தில் சொல்கிறார்:-

اللہ کی شان بہت بڑی ہے کہ سب انبیاء و اولیا اس کے روبرو ایک ذرہ ناچیز سے کمتر ہیں کہ سارے آسمان
و زمین کو عرش اس کا قبہ کی طرح گھیر رہا ہے اور باوجود اس بڑائی کے اس شہنشاہ کی عظمت نہیں تھام سکتا
بلکہ اس کی عظمت سے چرچر بولتا ہے سو کسی مخلوق کی کیا طاقت کہ اس کی بڑائی کا بیان بھی کر سکے.

"அல்லாஹ் உடைய மகிமை மிகப்பெரியது. அன்பியாக்களும் அவுலியாக்களும் அவன் முன்னிலையில் ஒரு அற்பமான அணுவிற்கு கூட குறைந்தவர்கள். ஏனென்றால், சகலவானங்களையும் பூமிகளையும் ஒரு (குப்பா) மண்டபத்தைப் போல் சூழ்ந்து கொண்டிருக்கும் அறுஷு இவ்வளவு பிரமாண்டமாக இருந்துங்கூட அந்த மன்னாதி மன்னனுடைய வலுப்பத்தைச் சுமந்து கொள்ளமுடியவில்லை. அவனுடைய வலுப்பத்தைச் சுமந்து கொள்ள முடியாமல் அது சட சடவென்று சப்தமிடுகிறது. ஆகையால் அவனுடைய வலுப்பத்தை விபரித்துச் சொல்லக்கூட எந்த சிருஷ்டியால் தான் முடியும்?.

---

*ஸுன்னத்து ஜமாஅத்துக்காரர்களாகிய நாம் அல்லாஹுதஆலா காலம் - இடம், திசைகளை விட்டும் பரிசுத்தமானவன் என்று நம்பியிருக்கிறோம்.*

*மேன்மைக்குரிய ஸெய்யித் ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திது திஹ்லவி ரஹிமஹுல்லாஹ் தங்களுடைய "துஹ்பத்து இத்னா அரிய்யா" என்ற கிரந்தத்தில் சொல்கிறார்கள்*

عقیدہ سیزدہم آنکہ حق تعالیٰ را مکان نیست و او را جہتے از فوق و تحت متصور نیست

وہمیں است مذہب اہل سنت وجماعت

*(அகீதாக்கள் சம்பந்தமான பல விளக்கங்களைச் சொல்லிய பின் அதற்கடுத்து) பதிமூன்றாவது அகீதா "அல்லாஹு தஆலாவுக்கு ஸ்தலமில்லை.மேல், கீழ் போன்ற திசைகளும் ரூபமாகாது.இதுதான் ஸுன்னத்து ஜமாஅத்துக்காரர்களின் கொள்கையாகும்".*

*பஹ்ருல் ஹகாயிரு" எனும் கிரந்தத்தில் வந்துள்ளது.*

يكفر باثبات المكان لله تعالىٰ

*"அல்லாஹுத்த ஆலாவுக்கு ஸ்தலம் உண்டென்று தரிபடுத்துவதனால் காபிராகிப் போவான்"*

*இன்னமும் இதே வாசகம்தான் "பதாவா ஆலம்கீரி" எனும் நூலிலும் இருக்கிறது. அதாவது "எவன் அல்லாஹுத்த ஆலாவுக்கு ஸ்தலமிருக்கிறது என்று சொல்வானோ அவன் காபிராகிப் போவான்"*

*4.நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்பு வேறு நபி வரலாம். வேறு நபி வருவதானால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காத்தமுன்னபிய்யீன் (خاتم النبيين) என்பதற்கு மாற்றமாகாது என்பதுவும் வஹ்ஹாபியாக்களுடைய கொள்கையாகும்.*

*இவ்விதமாகவே, தேவுபந்து மத்ரஸா ஸ்தாபகர் மௌலவி முஹம்மது காஸிம் நானூத்தவீ என்பவர் தன்னுடைய "தஹ்தீருன்னாஸ்" என்ற நூலின் 2,3-ம் பக்கத்தில் எழுதியுள்ளார்.*

عوام کے خیال میں تو رسول اللہ صلعم کا خاتم ہونا بایں معنی ہے کہ آپ سب میں آخری نبی ہیں مگر اہل فہم پر

روشن ہے کہ تقدم یا تاخر زمانی میں بالذات کچھ فضیلت نہیں الخ

*சாமானிய ஜனங்களின் அபிப்பிராயத்தில் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காத்தமுன்னபிய்யீன் என்பதற்குப் பொருள், அவர்கள் இறுதி நபியாக இருக்கும். அவர்களுக்குப் பின்பு வேறு நபி இல்லை என்பதாகும். ஆனால் காலத்தில் முந்துவதிலோ, பிந்துவதிலோ தனி விசேமில்லைஎன்பது புத்திமான்களுக்கு விளங்கும்.,*

*அவருடைய இக்கூற்றுக்கு கருத்தாவது: "காத்த முன்னபிய்யீன் என்பதற்கு இறுதி நபி என்று பொருள் கொள்வது சாமானியர்களான மடையர்களுடைய கொள்கையாகும். புத்திமான்களுடைய கொள்கையல்ல. நபி நாயகத்தின் வரிசைக்கும் இந்தக் கருத்திற்கும் ஒரு வகையான சம்பந்தமும் இல்லை. என்பதாகும்".*

*சங்கையான ஸஹாபாக்களும், மேதைகளான இமாம்களும், முன்னோர்களான உலமாக்களும், வரிசையான முஹத்தி தீன்களும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதி நபி. அவர்களுக்குப் பின்பு வேறு நபி இல்லை என்ற கருத்தைத் தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மேற்படி மௌலவி முஹம்மது காசிம் நானூத்தவி எல்லாத் தப்ஸீருடைய உலமாக்களுக்கும் மாற்றமாக தனது சொந்த அபிப்பிராயப்படி வியாக்கியானம் செய்து தன் கருத்தைக் கீழ்வருமாறு 12,13.ம் பக்கத்தில் விபரிக்கிறார்:*

بلکہ اگر بالفرض بعد زمانۂ نبوی صلعم کوئی نبی پیدا ہو تو پھر بھی خاتمیت محمدی میں کچھ فرق نہ آئے گا

*"மேலும் நபி நாயகத்திற்குப் பின் வேறொரு நபி உண்டானார்கள், உண்டாவார்கள் என்று வைத்துக் கொண்டாலும் நாயகம் காத்தமுன்னபிய்யீன் என்பதில் யாதொரு வித்தியாசமும் உண்டாகாது".*

*ஸுன்னத்து ஜமாஅத்துக்களாகிய நம்முடைய கொள்கையாகிறது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லோர்களிலும் இறுதி நபியாக இருக்கும். அவர்களோடு நுபுவ்வத்தின் வாசல் அடைக்கப்பட்டு விட்டது. இனி யாராகிலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப்பின் தான் நபி என்று தாவாச் செய்வானேயானால் அவன் பொய்யனும் தஜ்ஜாலுமாவான் என்பதாக இருக்கும்.*

*ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது: நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள்.*

انا العاقب والعاقب الذی لا نبی بعدہ

*"நான் ஆகிபுவாக இருக்கிறேன். ஆகிபு என்பது அவருக்குப் பின்பு வேறு நபியில்லையே அத்தகைய நபியாகும்."*

*5.வஹ்ஹாபிய்யாக்களிடத்தில், தொழுகையில் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய ஞாபகம், உருவம் மனதில் வருவதாகிறது. மாடு, கழுதை*

*தகளுடைய ஞாபகம், உருவம் வருவைதப் பார்க்கிலும் மிகக் கெட்டதாயிருக்கும் என்பதாம்.*

*அவர்களுடைய இமாம் மௌலவி இஸ்மாயில் திஹ்லவி என்பவர் தன்னுடைய "ஸிறாத்தே முஸ்த்தகீம்" என்ற நூலின் 97வது பக்கத்தில் எழுதியுள்ளார்.*

نماز میں پیر اور اس کے مانند اور بزرگوں کی طرف خیال لیجانا اگرچہ جناب رسالت مآب ہوں کتنے ہی درجوں
اپنے بیل اور گدھے کے تصور میں ڈوب جانے سے بدتر ہے۔

*"தொழுகையில் ஷெய்கு அவர் போன்ற பெரியார்கள் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களானாலும் சரிதான். இவர்களுடைய ஞாபகம் வருவதானது மாடு, கழுதையுடைய உருவத்தை ஞாபகப்படுத்துவதில் மூழ்குவதை விடவும் எத்தனையோ மடங்கு கெட்டதாகும்."**

---

* மேலும் ஸிராதே மூஸ்த்தகீம் 94-வது பக்கத்தில் வருகிறது.

''ஜினா செய்கிற நினைப்பும் தனது மனைவியுடன் சேர்க்கை செய்கிற நினைப்பும் நல்லது ஷெய்கு அல்லது அவரைப் போன்ற மற்ற பெரியார்கள் றஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களானாலும் சரியே. இவர்களின் பக்கம் தன்னுடைய கவனத்தைத் திருப்புவதாகிறது. தனது மாடு , கழுதையுடைய உருவத்தில் மூழ்குவதை விடவும் கெட்டதாகும்.

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் حاضر و ناظر (ஹாளிர், நாளிர்) எங்கும் ஹாளிராவார்கள். உம்மத்துக்களுடைய அமல்களை எல்லாம் பார்க்கிறார்கள் என்று நம்புவதும், அவர்களை யாரஸூலல்லாஹ் யாமுஹம்மது என்று கூப்பிடுவதும் ஷிர்க்கு, ஹறாம் என்று மௌலவி இஸ்மாயீல் திஹ்லவி தனது தக்வியத்துல் ஈமான் எனும் நூலிலும் மௌலவி அஷ்றபு அலி தானவீ, தனது பெஹஷ்தீஸேவர் எனும் நூலின் முதல் பாகம் 45வது பக்கத்திலும் சொல்லி இருக்கிறார்கள். மேலும் தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் தனது மக்தூபாது 90 வது பக்கத்தில்.

الصلوٰۃ والسلام علیک کے اندر بھی یہی بات ہے کہ اگر حضور صلعم کو حاضر و ناظر جان کر یا مبتدعین کے
تشبیہ کی صورت ہونا جائز ہے

''அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க (யாறஸூலல்லாஹி) என்று சொல்வதிலும் இதே பேச்சுத் தான். அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹாளிர், நாளிர் என்று நம்பி

க்கொண்டோ அல்லது பிது அத்துக்காரர்களுக்கு ஒப்பாகிற விதமாக வோ இருந்தால் அது விலக்கப்பட்ட தாகும்'' என்று சொல்கிறார்கள்.

ஸுன்னத்து வல்ஜமா அத்துக்கூட்டத்தார்களாகிய நாம் றஸுலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஹாளிர், நாளிர் என்று நம்புகிறோம்.

அல்லாஹ்வும் அவனுடைய ரஸுலும் உங்களுடைய அமல்களைப் பார்க்கிறார்கள் என்று குர் ஆனில் வந்துள்ளது.

மவாஹிபுல்லதுன்னியா, இரண்டாவது பாகம் 192 வது பக்கத்தில் பின்வரும் ஹதீது அறிவிக்க ப்பட்டுள்ளது.

عن ابن عمر رضی الله تعالیٰ عنہ قال قال رسول الله صلی الله علیہ وسلم ان الله
قد رفع لی الدنیا فانا انظر الیها والی ما هو کائن فیها الی یوم القیمة کانه انظر فی کفی هذا

''இபுனு உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது.அவர்க ள் உரைத்தார்கள்:-

றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். அல்லாஹுத ஆலா எ னக்கு துன்யாவுடைய திரையை நீக்கிக் காட்டினான். நான் அதையும் அதில் கியாமத்து நாள் வரையி லும் ஆகக்கூடிய அத்தனை விஷயங்களையும் என்னுடைய இந்த உள்ளங்கையில் வைத்துப் பார்ப் பது போன்று காண்கிறேன்''.

மேலும் ஸஹீஹு முஸ்லிமில் வந்துள்ளது.

عرضت علی اعمال امتی فوجدت فی محاسن اعمالها الاذی یماط عن الطریق ووجدت
فی مساوی اعمالها النخامة فی المسجد لا تدفن (رواه مسلم)

''எனக்கு என்னுடைய உம்மத்தார்களுடைய அமல்களை எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆகவே, நடைபாதையில் சங்கடப்படுத்தக்கூடிய (கற்கரடு, முள் போன்ற)வைகளை அகற்றிப் போடுவதை அவர்களின் நல்ல அமல்களிலும், பள்ளிவாசலில் புதைக்கப்படாமல் கிடக்கும் காறல், சளியை அவர்களின் தீய அமல்களிலும் காண்கிறேன்''. (என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்).

தப்ஸீர் றூஹுல் பயானில், தபாரகல்லதீ ஸுறாவின் கடைசியில் வருகிறது:-

قال الامام الغزالی رحمة الله والرسول علیه الصلوٰة والسلام له الخیار فی
طواف العالم مع ارواح الصحابة لقد راٰه کثیر من الاولیاء۔

றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தங்களின் ஸஹாபாக்களின் ரூஹுகளோடு உலகமுழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு அதிகாரமுண்டு. (அவ்வாறு) அவர்களை அனேக மான அவ்லியாக்கள் பார்த்திருக்கிறார்கள். என்று இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் சொல்லி இருக் கிறார்கள்.

மேலும், தொழுகையில் அத்தஹிய்யாத்து ஓதும் போது எப்படி நினைப்புக் கொள்ளவேண்டும் என்பதையும் அவர்கள் தங்கள் இஹ்யாவில் சொல்லியுள்ளார்கள்.

واحضر في قلبك النبي صلى الله عليه وسلم وشخصه الكريم وقل سلام عليك ايها
النبي ورحمة الله وبركاته وليصدق املك في انه يبلغه ويرد عليك ما هو اوفى منه (احياء ج اول ص١٤٣)
ويقصد بالفاظ التشهد معانيها مرادة له على وجه الانشاء كانه يحيي الله تعالى ويسلم
على نبيه وعلى نفسه واوليائه لا الاخبار عن ذلك - ذكره في المجتبى (در المختار ج اول ص٣٥٨)

''உன் மனதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைத்து அவர்களின் சங்கையான உருவத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹனபிய்யு வறஹ் மத்துல்லாஹி வபறக்கத்துஹு என்று சொல். நீ சொல்லுகின்ற ஸலாம் அவர்களுக்கு எட்டிவிடும். அவர் கள் அதை (உனது ஸலாமை) விடவும் பரிபூரணமான ஸலாமைக் கொண்டு உனக்கு பதில் சொல்வார் கள் என்று உன் எண்ணத்தை (உறுதிப்படுத்தி) உண்மைப்படுத்திக்கொள்.''

(இஹ்யா பாகம்1, பக்.143)

''தஷஹ்ஹுதின் (அத்தஹிய்யாத்தின்) பதங்களைக் கொண்டு மிஃறாஜில் நடந்த சங்கதியை எடுத் துரைப்பது போலில்லாமல் தானே சொல்லி அல்லாஹ்வுக்குக் காணிக்கை வைப்பது போலும், அவனு டைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவனுடைய அவ்லியாக்களுக்கும் த னக்கும் ஸலாம் சொல்லுவது போலவும், அதில் கருதப்பட்ட பொருளையே நாடுவான்''. முஜ்தபா எனு ம் கிரந்தத்தில் இவ்வாறாகவே சொல்கிறார்கள். (துர்றுல் முக்தார்) பாகம் 1, பக்கம் 358)

---

*முஸ்லீம்களே கவனியுங்கள்! இதுதான் எம்பெருமானார் பரிசுத்த நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தைப் பற்றி வஹ்ஹாபிய்யா க்களின் கொள்கையாகும்.*

*அல்லாஹ் காப்பாற்றவேண்டும் அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.*

معاذ الله ربّ العالمين

*6. ''பரிசுத்தத் திரு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ம வ்த்தாகி மண்ணோடு மண்ணாகி விட்டார்கள் என்பது வஹ்ஹாபியாக்களின் கொள்கை யாகும் .''*

*அவர்களுடைய இமாம் மௌலவி இஸ்மாயில் தக்வியத்துல் ஈமான் என்ற நூலின் 49- ம்பக்கத்தில் சொல்கிறார்:*

یعنی میں بھی ایک دن مر کر مٹی میں ملنے والا ہوں۔

*“நானும் ஒருநாள் மவுத்தாகி மண்ணோடு மண்ணாய்ச் சேர்ந்து போகக்கூடியவனாக இருக்கும்.”*

*ஸுன்னத்து ஜமாஅத்துக்களாகிய நம்முடைய கொள்கை யாகிறது. றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் றவுளா ஷரீபில் ஹயாத்தாக இருக்கிறார்கள் என்பதாகும்.*

*ஹதீது ஷரீபில் வருகிறது.*

ان اللہ حرم علی الارض ان تأکل اجساد الانبیاء وفی روایۃ نبی اللہ حی یرزق۔ (ابن ماجہ)

*“நிச்சயமாக அல்லாஹு தஆலா நபிமார்களுடைய திரேகங்களைத் தின்பதை பூமிக்கு ஹறாமாக்கிவிட்டான்- இன்னுமொரு றிவாயத்தில் - அல்லாஹ்வுடைய நபியவர்கள் ஹயாத்தாக இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு றிஸ்கு கொடுக்கிறான்.” (இப்னுமாஜா)*

*7.வஹ்ஹாபியாக்களிடத்தில் றஹ்மத்துன்லில் ஆலமீன் என்பது **“**உலக ரட்சகர் செய்யிது ஆலம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாத்திரம் சொந்தமான ஸிபத்து அல்ல மற்றவர்களுக்கும் சொல்லலாம்**”** என்பதாகும்.*

*அவர்களின் இமாம்களிலொருவரான மௌலவி ரஷீது அஹ்மது கொங்கோஹி ( இவர்தான் மௌலவி இல்யாஸுடைய முதலாவது குரு) தன்னுடைய பதாவா றஷீதிய்யா 97-ம் பக்கத்தில் எழுதுகிறார்.*

رحمۃ للعالمین صفت خاصہ رسول صلعم کی نہیں ہیں انبیاء علماء بھی موجب رحمت عالم ہوئے ہیں

*“றஹ்மத்துன்லில் ஆலமீன் என்ற ஸிபத்து றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல மற்ற அன்பியாக்களும் உலமாக்களுங்கூட றஹ்மத்துலில் ஆலமீனாக இருக்கிறார்கள்.”*

*8. வஹ்ஹாபியாக்களிடத்தில் சூனியக்காரர்களுடைய சூனியம் நபிமார்களுடைய முஃஜிஸாத்துகளை விட அதிக சக்தி வாய்ந்தது. என்பதாகும்.*

*வஹ்ஹாபியாக்களுடைய (இஸ்மாயில் திஹ்லவி உடைய) “மன்ஸிப் இமாமத்” என்ற நூலின் 31-வது பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது .*

بہت چیزیں کہ مقبولوں کی معجزہ گنی جاتی ہیں ویسی بلکہ قوت وکمال میں ان سے بڑھ کر جادوگر اور طلسمات والے کرسکتے ہیں۔

*“அநேக கருமங்கள் நல்லடியார் (நபிமார்)களுடைய முஃஜிஸாத்துக்கள் என கணிக்கப்படுகின்றன. இம்மாதிரி என்ன? இதைவிட சக்தியிலும் பரிபூரணத்திலும் மேலானதையும் சூனியக்காரர்களும் மந்திரவாதியும் செய்யமுடியும்.”**1.

*9. அல்லாஹு தஆலாவுக்கு தற்போது (இல்முகைப்) மறைவான சங்கதியை அறியும் ஞானம் இல்லை ஆனால் எப்பொழுது விரும்புகிறானோ அப்பொழுது அறியமுடியும் என்பது வஹ்ஹாபியாக்களின் கொள்கையாகும்.*

*அவர்களுடைய கிரந்தமான தக்வியத்துல் ஈமான் என்பதில் 16-வது பக்கத்தில் காணப்படுகிறது.*

غیب کا دریافت کرنا اپنے اختیار میں ہو کہ جب چاہے کر لیجئے یہ اللہ کی ہی شان ہے۔

*“மறைவான சங்கதியை விசாரித்துக் கொள்வது அல்லாஹு தஆலாவுடைய இஷ்டத்திலுள்ளதாகும். எப்பொழுது விரும்புகிறானோ அப்பொழுது செய்து கொள்கிறான். இது அல்லாஹ் சாஹிபுடைய கருமமாகும்.”**2

---

* 1. பதாவா றஷீதிய்யா 171-வது பக்கத்திலும் இதே வாசகம் வருகிறது.

*2.மறைவான சங்கதிகளை விசாரித்துக்கொள்வது என்பதனால் வேறேயாரிடமோ விசாரித்துத் தெரிந்து கொள்கிறான் என்றும் அவனுக்கு அறிவித்துக் கொடுக்க வேறொருவன் இருக்கிறான் அவனிடம் விரும்பிய சமயம் படித்துத் தெரிந்துகொள்கிறான். என்றும் அவனளவில் இவன் தேவைப்படுகிறான். மேலும் அவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும்முன்பு அறிவிலியாக இருந்தான் என்றும் அவர்களுடைய இவ்வார்த்தையிலிருந்து தெரிய வருகிறது.

அநியாயக்காரர்கள் சொல்லும் ஒவ்வா வருணணைகளை எல்லாம் விட்டும் அல்லாஹ் மிகவும் மேன்மையுடையவனாகிவிட்டான்.

---

*10. வஹ்ஹாபியாக்கள் ஷபாஅத்தை மறுக்கிறார்கள்.*

*முன்னர் குறிப்பிட்ட அவர்களுடைய நூலான தக்வியதுல் ஈமான் 24-வது பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது.*

محبت کے سبب سفارش قبول کرے اس قسم کی شفاعت بھی اس دربار میں کسی طرح ممکن نہیں۔ جو کسی کو اس قسم کا شفیع سمجھے ویسا ہی مشرک ہے۔

*“மஹ்பத்தின் காரணத்தால் ஷபாஅத்தை ஒப்புக்கொள்வான் என்பது இத்தகைய ஷபா அத்தும் அந்த சமூகத்தில் எந்த விதமும் செய்ய முடியாத காரியமாகும். ஆகையினால் எவனாகிலும் யாரையாவது எந்தவகையிலும் ஷபா அத்துச் செய்யக் கூடியவர்கள் என்று நம்புவானேயானால் அவன் முஷ்ரிக்காக இருக்கும்.”*

*நாம் இச்சிறிய ரிஸாவில் வஹ்ஹாபியாக்களின் ஒருசில கொள்கைகளைத்தான் சொல்லி இருக்கிறோம். இந்த வஹ்ஹாபியாக்கள் ஸெய்யிது ஆலம், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகாப் பரிசுத்த சமூகத்தைப் பற்றி தங்களுடைய அபத்த நூல்களில் என்னென்ன மரியாதைக் குறைவான அவதூறான வார்த்தைகளை எல்லாமோ சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றி மற்றொரு நூலில் விபரமாகக் கூறுவோம்.*

**வஹ்ஹாபிய்யாக் கூட்டம் மாபெரும்**

**அபாயகரமானதாகும்**

*இந்த வஹ்ஹாபிய்யாக் கூட்டத்தார்கள் எப்பொழுதும் பொதுமக்களை எந்த விதத்திலும் வஹ்ஹாபிய்யாக்களாக ஆக்கித் தங்களுடைய கூட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியிலேயே இருக்கிறார்கள். இதே முயற்சியில் இந்தக் கூட்டத்தார்கள் புதுப்புது திட்டங்களை வகுத்துக்கொண்டும் உபாயங்களை யோசித்துக்கொண்டுமிருக்கிறார்கள். சில சமயம் போர்ப் பிரச்சாரக் கோலத்திலும் தோன்றுகிறார்கள். சில சமயம் பாமர மக்களை ஏமாற்றுவதற்காக ஹனபி மதுஹபின் போர்வையைப் போர்த்திக்கொள்கிறார்கள். இன்னுமொரு சமயம் ஜனங்களைத் தங்கள் கூட்டத்தில் இழுப்பதற்காக மதக் குருக்களாக (ஷெய்குமார்கள்) சமைந்து அவர்களைத் தங்கள் சீடர்களாக (முரீதுகள்) ஆக்கித் தங்கள் கூட்டத்தில் இழுக்கப் பார்க்கிறார்கள். எனினும் வஹ்ஹாபிய்யாக்களுடைய ஒரு உபாயமும் கைகூடி வருகிறதாயில்லை. ஏனென்றால் ஸுன்னத்துவல் ஜமா அத்தையுடைய சங்கையான உலமாக்கள் வஹ்ஹாபிய்யாக்களுடைய கொள்கையைப் பொதுமக்களுக்கு விவரித்துக்காட்டி அவர்களின் குறிப்பான அடையாளங்களை விளக்கி எச்சரிக்கை செய்து கொண்டேயிருக்கிறார்கள். இதனாலேயே பொதுமக்கள் வஹ்ஹாபிய்யாக்களுடைய வஃளுகளைக் கேட்கப் போகிறதுமில்லை. அவர்களுடைய கூட்டங்களுக்குப் போவதுமில்லை.*

*மேலும், அவர்களோடு சகவாசம் பண்ணுவதுமில்லை. அவர்களோடு வார்த்தையாடுவதிலுங்கூட வெறுப்பு உடையவர்களாகவுமிருக்கிறார்கள். எப்பொழுதாகிலும் வஹ்ஹாபிய்யாக்கள் எந்த உருவத்திலும், உடையிலும் வருவார்களேயானால் பொதுமக்கள் ஒரே பார்வையைக் கொண்டே கணித்து*

بہررنگے خواہی جامہ می پوش ⁂ من انداز قدت را می شناسم

*“நீ எந்த நிறமுள்ள உடையைப் போர்த்திக்கொண்டாலும் நான் உன்னுடைய ஸ்தூலத்தின் அளவைக் கணித்துக் கொள்வேன்” என்று சொல்லிவிடுகிறார்கள்.*

**தப்லீகு ஜமாஅத்தின் உருவத்தில் வஹ்ஹாபிய்யாக்களின் கொள்கைப் பிரச்சாரம்**

*தற்காலத்தில் வஹ்ஹாபிய்யாக் கூட்டத்தார்கள் வஹ்ஹாபியத்தைப் பரப்பவும், பிரச்சாரம் செய்யவும் தப்லீகு ஜமாஅத்து என்ற ரூபத்தில் தோன்றியிருக்கிறார்கள். இந்த ஜமாஅத்தின் நபர்கள் பலவிடங்களிலும் பிரச்சாரம் (கஷ்த்து) செய்கிறார்கள். கூட்டமாகவும் போகிறார்கள். பொது மக்களிடத்தில் எங்கள் ஜமாஅத்தின் குறிக்கோளாகிறது. நோன்பு, தொழுகை, கலிமா இவைகளைப் பிரச்சாரம் செய்வதும் அமல்களை சுத்தமாகச் செய்யும்படி சொல்லுவதுமேதான் என்றும், எங்களுக்கு எந்த கொள்கையைப் பற்றி பேசுவதோ, அதைப்பற்றி வாதப் பிரதிவாதம் பண்ணுவதோ நோக்கமில்லை என்றும் சமாதானம் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், அவர்களின் கருத்தோ, தொழுகை, நோன்பு, கலிமா என்ற பசுந்தோப்பைக் காட்டி ஜனங்களை தங்களுடைய ஜமாஅத்தில் அங்கத்தினர்களாக ஆக்கிக்கொண்டு, மெதுமெதுவாக தங்களுடைய (அசல்) நிறத்தைப் போட்டு வஹ்ஹாபிய்யாக்களாக ஆக்கிவிடவேண்டும் என்பதுதான்.*

*அரபி பாஷை தெரியாத பாமரர்கள், குர்ஆன் ஆயத்துக்களுக்கும், ஹதீதுகளுக்கும் பொருள் தெரிந்துகொள்ள முடியாதவர்கள், இது (நாஸிகு) மாற்றியது. இது (மன்ஸூகு) மாற்றப்பட்டது. இது (ஸஹீஹு) பலமான ஆதாரமுள்ள ஹதீது, இது (லயீபு) பலவீனமான ஆதாரமுள்ள ஹதீது என்பதாகப் பகுத்தறிந்து உணரமுடியாதவர்கள் தங்களுடைய (அகீதா) கொள்கை மற்ற மஸஅலாக்களுடைய ஆதாரங்களையும் தெரிந்து கொள்ளாதவர்கள், அந்த தப்லீகுஜமா அத்தில் சேர்வார்களேயானால், அந்த ஜமாஅத்தின் பிரசுரங்களைப் பார்ப்பார்களேயானால் அவர்களுடைய நூல்களை வாசிப்பார்களேயானால் வஹ்ஹாபிமௌலவிகளால் மொழி பெயர்க்கப்பட்டதையும் அவர்களுடைய கட்டுரை களையும் வாசிப்பார்களேயானால் அவற்றில் உள்ள கருத்துக்களுக்கு நல் லெண்ணத்தோடு தங்களின் இதயங்களில் இடங்கொடுப்பார்களேயானால் அதன் பலன் சிறுகச் சிறுக இவர்களும் அந்த வஹ்ஹாபிக் கொள்கையுடையவர்களாகி, அதிலேயே முழுமூச்சும்விடக் கூடியவர்களாகவும் ஆகிவிடுவார்கள்.*

*ஸுன்னத்து ஜமா அத்துக்காரர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தப்லீகுஜமாஅத்து என்ற இயக்கம் எவ்வளவு அபாயகரமான இயக்கம் என்பதையும் சிந்திக்க வேண்டும்.பொதுமக்கள்நேரான மார்க்கத்திலும் சீரான வழியிலும் செல்ல நாடுவார்களேயானால் அவர்கள் இந்த ஜமாஅத் தைவிட்டும் நீங்கி இருக்கவேண்டும். இவர்களுடைய கூட்டங்களை விட்டும் சகவாசங்களை விட்டும் விலகியிருக்கவேண்டும். தங்களுடைய தீனையும் ஈமானையும் காப்பாற்றிக்கொள்வதை விட்டும் பராமுகமாயிருக்கக்கூடாது. கெட்ட கொள்கைக்காரர்களை விட்டுத் தப்பித்துக் கொள்ளவும், அவர்களின் கலைப்பைவிட்டு நம்முடைய தீனையும் ஈமானையும் காப்பாற்றிக்கொள்ளவும்,இதே முறையைத்தான் உலக இரட்சகர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டியிருக்கிறார்கள்.*

முஸ்லிம் ஷரீபில் அபூஹுறைறா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது.

قال النبي صلى الله عليه وسلم يكون في آخر الزمان دجالون كذابون
يأتونكم من الاحاديث بما لم تسمعوا انتم ولا آباؤكم فاياكم واياهم
لا يضلونكم ولا يفتنونكم۔

நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

“கடைசி காலத்தில் பொய்யர்களும், ஏமாற்றுக்காரர்களும் வருவார்கள். நீங்களும் உங்கள் மூதாதைகளும் கேட்டிராத சங்கதிகளையெல்லாம் உங்களிடத்தில் சொல்லிக்காட்டுவார்கள் (முஸ்லிம்களே) நீங்கள் அவர்களை விட்டும் தூரமாகி இருங்கள்.அவர்களை உங்களிடம் வரவிடாதீர்கள். இப்படி இருப்பீர்களேயானால் அவர்கள் உங்களை வழிகெடுக்கவோ, உங்களை அவர்கள்பித்னாவில் போடவோ முடியாது.”

இந்த ஹதீதின் கருத்து யாதெனில் - கெட்ட கொள்கை, கெட்ட மதுஹபு உடையவர்களை விட்டும் தூரமாகி இருப்பதனால், கெட்ட கூட்டத்தாரின் கெட்ட கொள்கை அவர்களை விட்டும்தூரமாகியிருப்பவர்களைத் தங்கடம் செய்யாதென்பதாம்.

ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் இபுனு அஸாகிர் என்ற முஹத்திது அவர்கள் ரிவாயத்துச் செய்கிறார்கள்.

قال النبي صلى الله عليه وسلم اياك وقرين السوء فانك به تعرف (ابن عساكر)

றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்:-

“கெட்டவர் சினேகத்தைவிட்டும் நீங்கியிரும். ஏனென்றால் (அவரோடு சினேகம் வைப்பீராகில்) உம்மையும் கெட்டவருடனேயே கணிக்கப்படும்.”

இந்த ஹதீதைக் கொண்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய உம்மத்துக்களைக் கெட்டவர்களுடைய சகவாசத்தை விட்டும் விலகியிருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

**தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகரான**
**மௌலவி இல்யாஸ் வஹ்ஹாபியேதான்**

தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் வஹ்ஹாபிய்யாக்களான உலமாக்களுடைய சகவாசத்திலும் அவர்களுடைய கண்காணிப்பிலும் இருந்தார். அவர்களுடைய (வஹ்ஹாபிய்யா) மத ஆர்வத்திலேயே வளர்ந்தார். அவர்களுடைய கு

ணங்களையே (கொள்கைகளை) பூண்டார் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வியமாகும்.

அவர் பூரணமாக பத்து வருஷ காலத்தை வஹ்ஹாபிகளுடனேயே கழித்திருக்கிறார். அந்தக் காலத்தில் வஹ்ஹாபிகளுடைய சற்குரு மௌலவி றஷீது அஹ்மது கொங்கோஹி இடத்தில்(முரீதானார்) தீட்சை பெற்றார்.

அப்பால் மௌலவி றஷீது அஹ்மது கொங்கோஹி காலஞ்சென்றபின் மற்றொரு பிரபல்யமான வஹ்ஹாபி மௌலவி கலீல் அஹ்மது இடத்தில் அவர் பைஅத்துச் செய்தார்.

அவருக்கு வஹ்ஹாபிகளுடைய பிரபல்யமான மத்ரஸாவில் ஓதிக்கொடுக்கும் உத்யோகமும் கிடைத்தது. கடைசி காலம் வரையிலும் வஹ்ஹாபிகளுடைய தொடர்புடனேயே இருந்து வந்தார். எதுவரையிலுமென்றால் வஹ்ஹாபி உலமாக்கள் மௌலவி இல்யாஸுடைய உடலிலும் உயிரிலும் ஊடுருவிப் பாய்ந்து உறைந்துவிடுகிற மட்டிலும் அவர் ஆகியிருந்தார்.

இப்பொழுது நாம் மேலே சொன்ன விஷயங்களுக்கு ஆதாரம் மௌலவி இல்யாஸின் தப்லீகு ஜமாஅத்துடைய (முபல்லிகு) பிரச்சாரகர் அபுல் ஹஸன் நத்வீ என்பவரால் எழுதப்பட்ட மௌலவி இல்யாஸின் ஜீவிய சரித்திரமான "(மௌலவி இல்யாஸ் அவ்ர் உன்கீ தீனி தஃவத்" (மௌலவி இல்யாஸும் அவருடைய மார்க்க அழைப்பும்) என்ற நூலிலிருந்து அத்தாட்சி காட்டுகிறோம்.

அந்த நூலின் 43வது பக்கத்தில் அவர் சொல்கிறார்.

گنگوہ اس وقت صلحا وفضلا کا مرکز تھا ان کی خود مولانا رشید احمد صاحب کی صحبت اور مجالس کی دولت
مولانا الیاس صاحب کو شب وروز حاصل تھی

"கொங்கோஹ் அந்தக் காலத்தில் நல்லோர்கள் பெரியோர்களின் உறைவிடமாக இருந்தது. அவர்களுடையவும், மேலும் மௌலானா றஷீது அஹ்மது ஸாஹிபு அவர்களுடையவும் சகவாசமும் அவர்களுடைய மஜ்லிஸுகளில் கலந்து கொள்ளும் பாக்கியமும் மௌலானா இல்யாஸ் ஸாஹிபு அவர்களுக்கு இரவும் பகலும் கிடைத்தது."

இவ்வாசகத்தினால் மௌலவி இல்யாஸ் ஸாஹிபு அவர்கள் வஹ்ஹாபிகளுடைய சகவாசத்திலேயே மூழ்கியிருந்தார் என்று நல்ல துலாம்பரமாக தெரிகிறது. ஏனென்றால் மௌலவி றஷீது அஹ்மது கொங்கோஹி வஹ்ஹாபிகளின் தலைவர்களில் ஒருவராக ஏற்றி எண்ணப்பட்டவராகும்.

மேலும் அவருடைய அந்த தீனி தஃவத் என்ற நூலின் 43-வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.

دینی جذبات کی پرورش نیز دین کی سمجھ اور اس کا سلیقہ پیدا کرنے میں ان کیمیا اثر صحبتوں اور مجالس
کو جو دخل ہے وہ اہل نظر سے پوشیدہ نہیں۔

"மார்க்க அபிலாஷையின் வளர்ச்சி, மார்க்க ஞானம் மார்க்கப் பழக்கத்தை உண்டாக்குவதில் இந்த (கீமியா) அற்புத இரசவாத குணப்பாட்டையுடைய சகவாசத்திற்கும் (மஜ்லிசு) சபைகளுக்கும் எவ்வளவு தூரம் சம்பந்தமிருக்கிறது என்பது நுண்ணறிவாளர்களுக்கு மறந்ததில்லை."

இந்த வாசகத்தினால் மௌலவி இல்யாஸ் ஸாஹிபு அந்த வஹ்ஹாபிகளின் (கீமியா) அற்புத இரசவாதக் குணப்பாடு செய்யும் சகவாசங்களுடைய குணப்பாட்டை விட்டும் பேறு கெடவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. இல்லையானால் நுண்ணறிவாளர்களுடைய அறிவைவிட்டு அந்த அற்புதக் குணப்பாட்டுள்ள சகவாசத்தின் குணப்பாடு மறைந்திருக்கும்.

மேலும் அதே நூலின் அதே (43-வது) பக்கத்தில் வந்துள்ளது.

مولانا الیاس کی دینی اور روحانی زندگی میں اس ابتدائی ماحول کا فیض برابر شامل رہا انسان کی زندگی
مقام اور ماحول کا اثر قبول کرنے کا جو بہترین زمانہ ہو سکتا مولانا الیاس کا وہ زمانہ گنگوہ میں گذرا۔

"மௌலானா இல்யாஸுடைய மார்க்க ஆத்மீக வாழ்க்கையில் அந்த ஆரம்ப சூழ்நிலை அணுக்கிரகம் பூரணமாகப் பொதிந்து கொண்டிருந்தது. மனித வாழ்க்கையில் வாசஸ்தலம் சூழ்நிலைகளின் குணப்பாட்டை ஏற்றுக்கொள்ள எந்தக் காலம் நல்லதாக இருக்கமுடியுமோ - மௌலானா இல்யாஸுடைய அந்தக் காலம் கொங்கோ ஹிலேயே கழிந்தது."

இந்த வாசகத்தினால் மௌலவி இல்யாஸ், அவர்களுடைய (வஹ்ஹாபிய்யாக்களுடைய) மார்க்கக் குணப்பாட்டை மிக நன்றாக ஏற்றுக்கொண்டார் என்பதுவும், அவர்களின் (வஹ்ஹாபிய்யாக்களின் அற்புதக் குணப்பாட்டிற்கு ஒரு நமூனா) எடுத்துக் காட்டான முன்மாதிரியாகவும் ஆகிவிட்டார் என்பதுவும் தெரியவருகிறது.

இன்னமும் அந்த "தீனி தஃவத்" என்ற நூலின் 43-வது பக்கத்தில் வந்துள்ளது.

جب (الیاس) گنگوہ آئے تو دس گیارہ سال کے بچے تھے اور جب ۱۳۲۳ھ میں مولانا گنگوہی نے وفات پائی تو بیس
سال کے جوان تھے گویا دس برس کا عرصہ مولانا کی صحبت میں گذرا۔

*‘‘எப்பொழுது (மௌலவி இல்யாஸ்) கொங்கோஹ் வந்தார்களோ அப்பொழுது அவர் பத்து, பதினொரு வயதுக் குழந்தையாயிருந்தார். எப்பொழுது (ஹிஜ்ரி) 1323-வது வருஷம் மௌலானா கொங்கோஹீ வபாத்தானார்களோ அப்பொழுது இவர்கள் (இல்யாஸ்) இருபது வயது வாலிபராகஇருந்தார். ஆகவே பத்து வருஷகாலம் மௌலானா(றஷீது அஹ்மது கொங்கோஹீ)உடைய சகவாசத்தில் கழிந்திருக்கிறது.’’*

*இந்த வாசகத்தினால், மௌலவி இல்யாஸ் தன்னுடைய இயற்கை அறிவின்மையோடு சுத்தமான மனப்பலகையை எடுத்துக்கொண்டு கொங்கோஹீ போய் நீண்ட பத்து வருஷ காலத்தை வஹ்ஹாபிய்யாக்களுடைய சபைகளிலும், கூட்டங்களிலும் கழித்துத் தன்னுடைய சுத்தமான மனப்பலகையில் (வஹ்ஹாபிய்யத்தின்) வஹ்ஹாபிக் கொள்கையின் சித்திரத்தை வெகு ஆழமாகப் பதியவைத்துக் கொண்டு திரும்பியிருக்கிறாரென்று தெரிய வருகிறது.*

*மேலும் அந்த “தீனி தஃவத் ”தின் 44-வது பக்கத்தில் வருகிறது.*

مولانا گنگوہی بالعموم بچوں اور طالب علموں کو بیعت نہیں کرتے تھے فراغت اور تکمیل کے بعد اس کے اجازت ہوتی

تھی مگر مولانا الیاس کے غیر معمولی حالات کی بنا پر ان کی خواہش اور درخواست پر بیعت کرلیا۔

*‘‘மௌலானா கொங்கோஹீ அவர்கள் பொதுவாகச் சிறு பிள்ளைகளிடத்திலும், மாணவர்(தாலிபுல்இல்மு)களிடத்திலும் வாக்குறுதி(பைஅத்து) வாங்குகிறதில்லை. பூரணமாக ஓதி முடித்த பின்னர் தான் அவர்களுக்கு (சீடனாக வாக்குறுதி கொடுக்க)*

*அனுமதி கிடைக்கும் ஆனாலும் மௌலானா இல்யாஸ் உடைய விஷேச குணத்தின் காரண மாக அவரின் விருப்பத்தின் பேரிலும்,தேட்டத்தின்பேரிலும்,அவர்களிடம் பை அத்து வாங்கிக் கொண்டார்கள்.”*

*இந்த வாசகம் மௌலவி றஷீது அஹ்மது இடத்தில் மௌலவி இல்யாஸ் முரீதானார் என்று குறித்து மௌலவி இல்யாஸ் பேரில் வஹ்ஹாபிய்யத்தின் ஸீல் வைக்கப்பட்டதாகவும் காட்டுகிறது.*

*பின்னர் அதே “தீனி தஃவத்” என்ற நூலின் 49,50-ம் பக்கங்களில் வருகிறது.*

حضرت مولانا رشید احمد صاحب کی وفات کے بعد آپ نے شیخ الہند مولانا محمود حسن صاحب سے درخواست کی

آپ نے مولانا خلیل احمد صاحب سے رجوع کا مشورہ دیا چنانچہ آپ نے مولانا خلیل احمد سہارنپوری دانیٹھی سے


اپنا تعلق قائم کرلیا۔

*‘‘ஹஜ்ரத் மௌலானா றஷீது அஹ்மது ஸாஹிபு* வபாத்தான பின்னர் ஷெய்குல் ஹிந்து மௌலானா மஹ்மூதுல் ஹஸன்*

---

* றஷீது அஹ்மது கொங்கோஹீ கலீல் அஹ்மது அம்பேடி, அஷ்றபு அலி தானவி இவர்கள், தங்கள் தங்களுடைய நூற்களில் பற்பல வகையான குபுரிய்யத்தான வார்த்தைகளை எழுதினதால் இவர்களும், இவர்களைச் சரிகண்டவர்களும் காபிர் முர்த்ததுகள் என்று மக்கா, மதினாவிலிருந்து 35 உலமாக்களின் கையொப்பங்களுடன் ‘‘ஹுஸாமுல்ஹறமைன்’’ என்ற பெயருடன் ஒரு பத்வா கிதாபு ஹிஜ்ரி 1328-ல் அச்சிட்டு வெளியாக்கப்பட்டது. பின்னர் இந்தியாவிலிருந்து பஞ்சாப், பெங்கால், மதறாஸ், பலூஜிஸ்தான் எல்லைப்புரம், குஜராத், சத்தியவார் முதலிய பகுதிகளிலும் பர்மாவிலுமுள்ள 268 உலமாக்களின் கையொப்பங்களுடன் மேலே கூறப்பட்டவர்கள் காபிர்கள்,முர்த்ததுகள் என்று ‘‘அஸ்ஸவாரி முல்ஹிந்திய்யா’’ என்ற நாமத்துடன் ஒரு பத்வா கிதாபு ஹிஜ்ரி 1345-ல் அச்சிட்டு வெளிவந்தது. மேலும், மேலே கூறப்பட்டவர்களின் வாசகங்களைச் சரிகண்டு ஆதரித்து ‘‘ அந்நஜ்மு’’என்னும் மாசிகையின் ஆசிரியர் அப்துஷ்ஷுக்கூர் காக்கூரவி தன்னுடைய ‘‘நுஸ்றத்தே ஆஸ்மானீ’’ என்னும் நூலில் எழுதியிருந்ததனால் இவரும் காபிர், முர்த்தது என்ற 94 உலமாக்களின் கையொப்பங்களோடு ‘‘முபல்லிகே வஹ்ஹாபிய்யா கீஜாரி’’ (வஹ்ஹாபிப் பிரச்சாரகருக்கு ஒப்பாரி) என்ற நாமத்தோடு ஒரு பத்வா கிதாபு 1349-ல் அச்சிட்டு வெளியாக்கப்பட்டது. இந்த மூன்று பத்வாக்களும், இன்னும் வஹ்ஹாபிகளுக்கு மறுப்பாக ஸுனத்து வல் ஜமாஅத்து உலமாக்களால் எழுதப்பட்ட பல கிதாபுகளும் தேவையானவர்கள், இக்பால் அஹ்மது, றஜ்வி குதுபுகானா, பஜார் சந்தல்கான், பறேலி, யூ.பி என்ற விலாசத்திற்கோ அல்லது லக்னோவிலிருந்து வெளிவரும் ‘‘ஸுன்னி’’ என்ற மாசப் பத்திரிகையின் ஆபிசுக்கோ எழுதித் தருவித்துக்கொள்ளலாம்.

‘‘ஹுஸாமுல் ஹறமைன்’’ பத்வாக்களில் ஒரு பத்வாவின் சுருக்கம் வருமாறு


اما بعد فاقول ان هؤلاء الفرق الواقعين فى السؤال غلام احمد القاديانى ورشيد احمد ومن
تبعه كخليل احمد الانبيتهى واشرف على وغيرهم لا شبهة فى كفرهم بلا مجال بل لا شبهة فى من
شك بل فيمن توقف فى كفرهم بحال من الاحوال فان بعضهم منابذ للدين المتين وبعضهم
منكر ما هو من ضروريات المتفق عليه بين المسلمين فتجد بعضهم ينكر اصل الدين وبعضهم يدعى النبوة
منكر الخاتم النبيين وبعضهم يدعى انه عيسى وبعضهم يدعى انا المهدى واهونهم فى الظاهر بل
اشدهم فى الحقيقة هؤلاء الوهابية لعنهم الله وجعل النار مأواهم ومثواهم يلبسون على العوام
بانهم هم المتبعون للسنة وان غيرهم من السلف الصالح الائمة فمن دونهم مبتدعون وللسنة الغراء
تاركون ومخالفون فياليت شعرى اذا لم يكن هؤلاء لنهجه صلى الله عليه وسلم متبعين فمن المتبع
له انتهى ملخصا، قاله بفمه وكتبه بقلمه راجى عفو ربه الجليل حافظ كتب الحرم المكى السيد اسماعيل بن السيد خليل

ஹம்து, ஸலவாத்து, ஸலாமுக்குப்பின்னர் சொல்கிறேன்: இந்த ஸுஆலில் சொல்லப்பட்ட கூட்டத்தார்கள், குலாம் அஹ்மது காதியானி, றஷீது அஹ்மது, இவரைப் பின்பற்றிய கலீல் அஹ்மது அம்பேட்டிய்யி, அஷ்றபு அலி போன்ற ஏனையவர்களும் காபிர்கள் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. மேலும் இவர்கள் காபிர்கள் என்பதில் சந்தேகிக்கிறவன் இல்லை. எந்த வகையாகிலும் இவர்களை காபிர்கள் என்பதில் தயக்கங் கொள்கிறவனுங்கூட காபிர் என்பதில் சந்தேகமில்லை. இவர்களில் சிலர் பரிசுத்த மார்க்கத்தை

த அப்படியே புறமாக வீசிவிட்டார்கள். சிலர் மார்க்கத்தில் மிக முக்கியமானதும், எல்லா முஸ்லிம்களாலும் அங்கீகரிக்கப்பட்ட சங்கதிகளையும் மறுக்கிறார்கள். அவர்களில் ஒருவர் மார்க்கத்தின் அஸ்திவாரத்தையே மறுப்பதையும், வேறொருவர் (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) இறுதி நபி என்பதை மறுத்துத் தான் நபி என்று தாவாச் செய்வதையும், மற்றொருவர் தன்னை ஈஸா (நபி) என்று வாதிப்பதையும், இன்னொருவர் தன்னை மஹ்தீ என்று தாவாப் பண்ணுவதையும் காண்பாய். இவர்கள் யாவரிலும் வெளிக்கு அற்பமானவர்களாகவும் அந்தரங்கத்தில் கடுமையானவர்களாகவும் இருப்பவர்கள் வஹ்ஹாபிய்யாக்கள் கூட்டங்களாகும். அல்லாஹ் அவர்களை (லஃனத்துச் செய்து) சபிப்பானாக. நரகத்தை அவர்களுடைய ஒதுங்குந் தலமாக ஆக்குவானாக. இவர்கள் பொதுமக்களை ஏமாற்றுகிறார்கள். தாங்கள் தான் றஸூல் ஸல்லல்லாஹு அஹைறி வஸல்லம் அவர்களுடைய ஸுன்னத்தைப் பின்பற்றி நடக்கிறவர்கள் என்றும் அவர்களல்லாதவர், இமாம்கள், நல்லோர் பெரியோர்யாவரும் அவர்களைப் பின்பற்றிய யாவரும் பிது அத்துக்காரர்கள் என்றும், மார்க்கத்திற்குப் புறம்பாக நடக்கிறவர்கள் , மார்க்கத்தை விட்டு விட்டவர்கள் என்றும் சொல்கிறார்கள். முன்னோர்களான (ஸலபுஸ்ஸாலிஹீன்களான) அந்த நல்லடியார்கள்றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அஹைறி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி நடக்கவில்லை.அவர்களைத் தொடர்ந்து போகவில்லையென்றால் வேறு யார்தான் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அஹைறி வஸல்லம் அவர்களைப் பின்பற்றித் தொடர்ந்து அவர்களின் வழியில் செல்கிறவர் என்பதை நானறிய வேண்டுமே''

இதை வாயால் மொழிந்து எழுதுகோலால் எழுதியுள்ளேன்.

இப்படிக்கு,

**ஸெய்யிது இஸ்மாயில் இபுனு ஸெய்யிது கலீல்**

இந்த பத்வாவில் சொல்லப்பட்ட றஷீது அஹ்மது கொங்கோஹீ, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்றபு அலி தானவீ முதலிய இவர்கள்தான் தப்லீகு ஜமாஅத்து ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் உஸ்தாதும் ஞான குருவுமானவர்கள்.

இவர்களுடைய சகவாசத்திலேயே தன்னுடைய பூறா வயதையும் கழித்திருக்கிறார். இவர்களைப் பற்றித்தான் இவர்கள் என்னுடைய உடலிலும், உயிரிலும் குடிகொண்டுவிட்டார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். இவருடைய தப்லீகு ஜமா அத்து வஹ்ஹாபிகளோடேயே தொடர்பும் வைத்துக்கொண்டிருக்கிறது. அப்படியே தான் மௌலவி இல்யாஸின் கட்டளையுமாகும்.

**முஸ்லிம்களே! சிந்தித்துப்பாருங்கள்!!**

இவராலும் இவருடைய இயக்கமான தப்லிகு ஜமாஅத்தினாலும் நமக்குத் தீமை உண்டாகாது என்று கவனக்குறைவாக இருக்கமுடியுமா?கண்டிப்பாக இவர்கள் நம்முடைய (ஸுன்னத்து வல் ஜமாஅத்துடைய)அகீதாக்(கொள்கை)களைச் சிறுகச் சிறுகக் கெடுத்து,நம்மையும் வஹ்ஹாபிகளாக ஆக்கிவிடுவார்கள்,ஆகையால் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

திருநபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொல்லிய உபதேசத்தைக் கவனமாக சிந்தித்துப் பாருங்கள். அதன்படி நடவுங்கள். தப்லீகு ஜமாஅத்து மற்றும் கெட்ட கூட்டத்தார்களை வரவிடாது தடுங்கள். அவர்களோடு சேராதீர்கள்.

அல்லாஹுத்த ஆலா எல்லா முஸ்லிம்களையும் வழிகெட்ட கூட்டங்களை விட்டும் காப்பாற்றுவானாக. ஆமீன்.

---

*அவர்களிடத்தில் கேட்க, அவர்கள் மௌலானா கலீல் அஹ்மது ஸாஹிபு அவர்களிடம் போகும் படி யோசனை சொன்னார்கள். அதன்பேரில் அவர்கள் (மௌலானா இல்யாஸ்)ஸஹாரன்பூர் மௌலானா கலீல் அஹ்மது அவர்களுடன் தங்களின் தொடர்பை வைத்துக்கொண்டார்கள். மேலும் அவர்களுடைய கண்காணிப்பின் பேரிலும் போதனையின் பிரகாரமும் இறைவன் பாதையில் தங்குமிடங்களை(ஸுலூக்குடைய மன்ஸில்களை) யெல்லாம் கடந்து சென்றார்கள்.''*

*இந்த வாசகத்தினால் தெரியவருகிறது. மௌலவி இல்யாஸ் சாஹிபு தன்னுடைய குரு(பீர்) மவுத்தான பின் இன்னுமொரு பீரிடம் சேர்ந்தார் அதுவும் வஹ்ஹாபியே தான் கிடைத்தது. இனம் இனத்தையே சேரும்.*

*முன்பு சொன்ன "தீனி தஃவத்" என்ற அதே நூலின் 54-வது பக்கத்தில் காணப்படுகின்ற வாசகத்தினால் மௌலவி இல்யாஸ் ஸாஹிபு சில காலம் ஸஹாரன்பூரில் வஹ்ஹாபிய்யாக்களின் பிரபல்யமான மளாஹிருல் உலூம் என்ற மத்ரஸாவில் (முதர்ரிஸு) ஆசிரியராகவும் இருந்திருக்கும் வியம் தெரியவருகிறது.*

*மேலும் அந்த தீனி தஃவத்தின் 51-வது பக்கத்தை கவனியுங்கள்.*

ایک مرتبہ کاندھلہ میں شاہ عبدالرحیم صاحب رائے پوری مولانا خلیل احمد صاحب سہارنپوری اور مولانا اشرف علی
تھانوی موجود تھے نماز کا وقت آیا تو امامت کیلئے آپ کو بڑھایا۔

*''ஒருநாள் முஹம்மது இல்யாஸுடைய மூதாதைகளின் ஊரான காந்திலேயில் ஷாஹ் அப்துர் றஹீம் றாயப்பூரியும், மௌலானா கலீல் அஹ்மது ஸஹாரன்பூரியும், மௌலானா அஷ்றபு அலி தானவியும் இருந்தார்கள். தொழுகைக்கு நேரம் வந்ததும் இமாமத்துச் செய்ய முஹம்மது இல்யாஸை முற்படுத்திவைத்தார்கள்''.*

*இந்த வாசகத்தினால் மௌலவி இல்யாஸுக்கு வஹ்ஹாபிய்யாக்களான மௌலவிகளுக்கு இமாமாக நின்று தொழவைக்கக் கூடிய பாக்கியம் கிடைத்ததாகத் தெரிகிறது.*

*மேலும் அதே "தீனி தஃவத்"தின் 49-வது பக்கத்தில் மௌலவி மஹ்மூதுல் ஹஸன் தேவுபந்தி, மௌலவி அஷ்ரபு அலி தானவி, அப்துர் றஹீம் றாயப்பூரி முதலிய இவர்களின் விஷயத்தில் மௌலவி இல்யாஸ் சொல்லிய வாசகமிருக்கிறது. பாருங்கள்!*

یہ حضرات جسم و جان میں بسے ہوئے تھے۔

*இந்த மகான்கள்(என்னுடைய) உடலிலும் உயிரிலும் குடிகொண்டிருக்கிறார்கள்.*
''

*முஸ்லிம்களே! சிந்தியுங்கள்! பட்சபாதகமின்றி (இன்ஸாபுடன்) நீதமாகத் தீர்ப்புக் கூறுங்கள்.*

*தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் விஷயத்தில் (அந்த ஜமாஅத்தின்)ஒரு முக்கியமான பிரச்சாரகர் (முபல்லிகு) உடைய எழுத்தினால் அவர் வஹ்ஹாபிய்யாக் களுடைய சகவாசத்தில் இருந்தார். அவர்களிடமே வளர்ந்தார். அவர்களிடமே எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார். அவர்களுடைய மத்ரஸாவில் ஆசிரியராகவும் இருந்தார். அவர்களிடமே எல்லாக் கல்விகளையும் கற்றார். வஹ்ஹாபிய்யா மௌலவிகள் இவருடைய உடலிலும் உயிரிலும் குடிகொண்டிருந்தார்கள். அவர்களிடமே பைஅத்தும் செய்தார் என்ற உண்மை நிரூபணம் ஆன பின்னரும் இப்படிப்பட்ட மனிதர் வஹ்ஹாபிதான் என்பதில் யாருக்காவது சந்தேகம், ஐயம் கொள்ள இடமுண்டா?*

*ஒவ்வொரு அறிவாளியும் கட்டாயம் இவர்(மௌலவி இல்யாஸ்) வஹ்ஹாபிதான் என்ற முடிவுக்கே வருவார்கள்.*

**<u>தப்லீகுஜமா அத்திற்கு வஹ்ஹாபிய்யாக்களுடனும்<br>அவர்களின் மத்ரஸாக்களுடனும்<br>எப்பொழுதும் தொடர்பு இருந்தே வருகிறது.</u>**

*தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் எப்பொழுதும் தன்னுடைய பிரசங்கிகளுக்கு வஹ்ஹாபி களுடைய மத்ரஸாவிலும் அவர்களுடைய கூட்டங்களிலும் கலந்துகொள்ளும்படிகண்டிப்பாக கட்டளை இட்டுக் கொண்டே இருந்தார். நாம் இதற்கு ஆதாரமாக தப்லீகு ஜமா அத்தின் பிரசங்கி மௌலவி அபுல்ஹஸன் நத்வியால் திரட்டித் தரப்படும் மௌலவி இல்யாஸுடைய கடிதத்தை எண்பிக்கிறோம். கவனியுங்கள்!*

*மேற்படி தபால் தொகுப்பு நூல் பக்கம் 40,41-ல் வரையப்பட்டுள்ளது.*

۶ اپریل کو سہارنپور میں مدرسۂ مظاہر العلوم کا سالانہ جلسہ ہے اگر حضرات مبلغین ایسے ایسے موقعوں میں چند دنوں
پہلے اور چند دنوں بعد صحیح اصول کے ساتھ تبلیغی سرگرمیوں کے موقع ڈھونڈتے رہیں تو جنت میں لے جانے والی اسکیم
سرسبز ہو سکتی ہے۔

*"ஏப்ரல் 6-ம் தேதி ஸஹாரன்பூர் மத்ரஸா மளாஹிருல் உலூம் வருடாந்தக் கூட்டம் நடைபெறப்போகிறது. தப்லீகு ஜமாஅத்தின்(முபல்லிகீன்)பிரசங்கிகள் இந்தவிதமான சந்தர்ப்பங்களில்(கூட்டத்திற்கு) முன்பு சில தினங்களும், பின்பு சில தினங்களும் இருந்து நல்லவிதமாக தப்லீகு செய்கிறதற்கான முறைகளைத் தேடுவார்களேயானால் சுவன லோகத்திற்குக் கொண்டுபோகக்கூடிய பசுமையான திட்டங்களெல்லாம் கிடைக்கக்கூடும்."*

*ஒரு சமயம் மௌலவி இல்யாஸுடைய தப்லீகு ஜமாஅத்து லக்னோ போயிருந்தது. தற்செய லாக அங்கு மௌலவி அப்துஷ்ஷகூர் காகூரவியோடு சந்திப்பு ஏற்படாமல் போய்விட்டது. அதற்காக மௌலவி இல்யாஸ் எவ்வளவு வருத்தத்தையும் கவலையையும் தெரிவிக்கிறார் பாருங்கள்!*

*முன்பு குறிப்பிட்ட மௌலவி அபுல்ஹஸன் நத்வி திரட்டிய கடிதங்களின் 58-வது பக்கத்தில் வருகிறது.*

مجھے بڑا قلق ہوا کہ وہ مولانا عبدالشکور صاحب سے مل کر نہ آئے۔

*"அவர்கள் (தப்லீகு ஜமாஅத்தார்) மௌலானா அப்துஷ்ஷகூர் சாகிபு அவர்களைச் சந்திக்காமல் வந்தது எனக்கு ரொம்பவும் மனக் கவலையை உண்டுபண்ணிவிட்டது."*

*பிரஸ்தாப மௌலவி அப்துஷ்ஷகூர் ஸாஹிபு வஹ்ஹாபி என்பது முழு இந்தியாவிலும் மிகப் பிரபல்யமானதோர் வியமாகும்.*

*மேலும் மேற்படி கடிதத்தொகுப்பின் 62,63-வது பக்கங்களை பாருங்கள்.*

آج یہ بندہ اس دعوت کو لے کر مدرسۂ امینیہ گیا تھا جس میں اللہ کے فضل اور لطف اور رحمت نے
بہت امید افزا صورت پیدا کر فرمادی۔

*"இன்று இந்த அடிமை இந்த அழைப்பை மத்ரஸா அமீனிய்யாவுக்கு கொண்டுபோயிருந்தேன். அதில் அல்லாஹுத ஆலாவுடைய வரிசை, கிருபை அனுக்கிரகம் ரொம்ப நம்பிக்கைக்குரிய தோற்றத்தைக் கொடுத்தது.*

*இச்சம்பவங்களினால் தப்லீகு ஜமாஅத்துக்கு வஹ்ஹாபி மத்ரஸாகக்களுடைய தொடர்பு இருந்து கொண்டே வருகிறது என்று தெளிவாகிறது.*

**வஹ்ஹாபிய்யாக் கூட்டங்கள்**
**நஜ்திலிருந்து தோன்றினார்கள்**

**நஜ்தின் எல்கையும் வழிகேடும்!**

*நஜ்து எல்கைக்கு வழிகேட்டோடும், ஷைத்தானிய்யத் தோடும் இருக்கும் சம்பந்தம் புத்திமான்களுக்கு மறைந்ததில்லை.*

*இமாம் பக்ருத்தீன் ராஸீரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களுடைய தப்ஸீர் கபீர் எனும் கிரந்தத்தில் நக்லு செய்கிறார்கள்.*

كان رسول الله صلى الله عليه وسلم يرى ابليس في صورة الشيخ النجدي

*“றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்லீஸை நஜ்து க் கிழவருடைய உருவத்தில் காண்பவர்களாக இருந்தார்கள்.”*

*இஸ்லாமின் சூரியன் தன்னுடைய ஒளிப் பிரகாசத்தைக் கொண்டு மனிதர்களுடைய இதயத்தினுள் பிரகாசிக்கத் தொடங்கியதும், சத்தியத்தின்பால் மெய்யான தேட்டமுடைய மக்களெல்லாம் கூட்டம் கூட்டமாக இஸ்லாம் மார்க்கத்தை தழுவ ஆரம்பித்தபோது மக்காவிலுள்ள காபிர்கள், முஷ்ரிக்குகள் அகில உலக இரட்சகர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அபாயம் விளைவிக்கும் எண்ணத்தோடு தாருன்னத்வா என்னும் ஆலோசனை மண்டபத்தில் சதியாலோச னை செய்வதற்காக வேண்டி குறைஷித் தலைவர்களையெல்லாம் ஒன்று கூட்டினார்கள். அச்சமயம் ஷைத்தான் ஷெய்கு நஜ்தியுடைய (நஜ்து தேசத்துப் பெரியாருடைய) ரூபத்தில் தோன்றி குறைஷிக் காபிர்களின் ஆலோசனையில் பங்குபற்றினான். அந்த ஜனங்கள் தங்கள், தங்கள் ஆலோசனைகளைச் சொல்லும்போது ஷெய்கு நஜ்தி ஒவ்வொருவருடைய யோசனையையும் “ஓய் இன்னாரே! உமது யோசனை சரியில்லை”!* بئس رايك يا فلان

*என்று சொல்லிச்சொல்லி மறுத்துக்கொண்டேயிருந்தான். கடைசியாக அபுஜஹ்லு எழும்பி நின்று உலக ரட்சகர் ஸெய்யிது ஆலம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஷஹீதாக்குவதற்கு யோசனை சொன்ன அப்பொழுதும் ஷெய்கு நஜ்தி இருந்தான். அபூஜஹ்லுடைய யோசனையை அவன் வரவேற்று ஆதரித்து*

*“யூகத்தின் பிதாவே உம்முடைய யோசனையே மிகச்சிறந்தது” என்று கூறினான்.*

نعم ما قلت يا ابا الحكم

*இந்த ஒரு ரிவாயத்தினால் ஷைத்தானுடைய கூட்டங்களை வெளிப்படுத்துவதற்கு ஹக்கு தஆலாவின் குத்ரத்து(வல்லமை) நஜ்து தேசத்தையே தெரிந்தெடுத் திருக்கிறதாக தெரிய வருகிறது.*

**ஷைத்தானுடைய கூட்டங்களைப் பற்றி தீர்க்கதரிசன முன்னறிவிப்பு**

*ஸஹீஹு புகாரி ஷரீபில் ஹஜ்ரத் அப்துல்லாஹி இபுனு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்படுகிறது.*

قال النبي صلى الله عليه وسلم اللهم بارك لنا في شامنا اللهم بارك لنا في يمننا
قالوا يا رسول الله وفي نجدنا فاظنه قال في الثالثة هناك الزلازل والفتن وبها يطلع
قرن الشيطان۔

*“றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்; ஆண்டவா! எங்கள் ஷாம் தேசத்திற்கு பரக்கத்துச் செய்வாயாக ஆண்டவா! எங்கள் யமன் தேசத்திற்கு பரக்கத்துச் செய்வாயாக (என்று துஆக் கேட்டார்கள்) ஸஹாபாக்கள், யாரஸூலல்லாஹ் எங்களு டைய நஜ்து தேசத்திற்கும் என்றார்கள். (ராவீ சொல்கிறார்கள்) றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூன்றாவது முறையாக “அங்கு அதிர்ச்சிகளும் கொந்தளிப்புகளும் பித்னாக்களும் உண்*

*டாகும்.அங்கு ஷைத்தானுடைய கூட்டங்கள் வெளிக்கிளம்பும் என்று சொன்னதாக எனக்கு ஞாபகப்படுகிறது.”*

*இந்த ஹதீதினால் நஜ்த் தேசத்திலிருந்து ஒருகூட்டம் வெளிப்படும். அது பரிசுத்த அல்லாஹுˉ தஆலாவிடத்திலும் திருநபி ஸெய்யிது ஆலம், ஸல்லல்லாஹுˉ அலைஹி வஸல்லம் அவர்களிடத்திலும் ஷைத்தானின் கூட்டமாகும். அவர்கள் முஸ்லிம்களை வழிகெடுப்பார்களென்றும் பட்டபகல் போல் தெரிகிறது.*

*முஸ்லிம்களே! சிந்தித்துப் பாருங்கள்! ஆழ்ந்து கவனியுங்கள்! நாயகம் ஸல்லல்லாஹுˉ அலைஹி வஸல்லம் அவர்கள் எந்த தேசத்திற்காக துஆக் கேட்கவில்லையோ மேலும் ஸஹாபாக்கள் துஆக் கேட்கும்படி சொன்னபொழுதும் அங்கு ஷைத்தானுடைய கூட்டங்கள் வெளிப்படுவார்கள் என்று சொன்னார்களோ, அத்தகைய தேசத்திலிருந்து உங்களுக்கு நல்வழி ஊற்று கிடைக்குமென்று நீங்கள் ஆதரவு வைக்கமுடியுமா?*

*எவன் அகிலலோக தயாளர் நாயகம் ஸல்லல்லாஹுˉ அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறானோ அவர்கள் திருவாயிலிருந்து உண்மையே தான் வரும் என்று விசுவாசம் கொண்டிருக்கிறானோ அவன் அங்கு (நஜ்து தேசத்தில்) ஷைத்தானுடைய கூட்டத்தார் தோன்றுவார்கள் என்று நாயகம் ஸல்லல்லாஹுˉ அலைஹி வஸல்லம் அவர்களுடைய தீர்க்க தரிசன முன்னறிவிப்பை தெரிந்த பிறகு அந்த நஜ்திகளைத் தன்னுடைய மத குருவாகவும் வழிகாட்டியாகவும் ஆக்கிக் கொள்ள முன்வர மாட்டான் என்பதே என்னுடைய நம்பிக்கை.*

**ஷைத்தானின் கூட்டத்தார்களுடைய சில அடையாளங்கள்**

*1.ஹதீதின் படி அமல் செய்கிறோமென்று தாவாச் செய்வார்கள்.*

قال النبي صلى الله عليه وسلم يأتي في آخر الزمان قوم حدثاء الاسنان سفهاء الاحلام يقولون
من قول خير البرية يمرقون من الاسلام كما يمرق السهم من الرمية - (اخرجه البخاري)

*“றஸுˉலுல்லாஹி ஸல்லல்லாஹுˉ அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்:கடைசி காலத்தில் ஆற்றல் அனுபமில்லாத மடையர்கள் வருவார்கள். அவர்கள் தங்களுடைய (எண்ணத்தில் நபியவர்களுடைய சொல்லை) ஹதீதை ஆதாரமாக எடுத்துக் கொள்வதாக நினைத்துப் பேசுவார்கள். *அவர்கள் வில்லை விட்டு அம்பு புறப்படுவதுபோல் இஸ்லாம் மார்க்கத்தை விட்டும் புறப்பட்டுவிடுவார்கள். ”*

*இந்த ஹதீதை ஸஹீஹுˉபுகாரியில் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.*

*2.*

*வெளித்தோற்றத்தில் வெளிரங்கமான அமல்கள், நோன்பு, தொழுகையில் மிகவும் பேணுதலாக இருப்பார்கள். ஆனால் கெட்ட கொள்கையுடையவர்களாகவும் பிசகான நம்பிக்கை பூண்டவர்களாகவும் இருப்பார்கள்.*

قال النبی صلعم تحقرون صلوتکم مع صلوتهم وصیامکم مع صیامهم وعملکم مع عملهم
ویقرءون القرآن لا یجاوز حناجرهم یمرقون من الدین کما یمرق السهم من الرمیة
(رواه البخاری عن ابن سعید الخدری رضی الله عنهما)

"றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

திருவுளமானார்கள்: அவர்களின் தொழுகைக்கு முன்னால் உங்கள் தொழுகையும், அவர்களின் நோன்புக்கு முன்னால் உங்கள் நோன்பையும் அவர்களின் அமல்களுக்கு முன்னால் உங்கள் அமல்களையும் அற்பமாகக் காண்பீர்கள். (கருத்தாவது:அவர்கள் உங்களை விடவும் அதிகமாக அமல்செய்வதாகத் தோன்றும்)அவர்கள் வில்லை விட்டு அம்பு புறப்படுவது போல் இஸ்லாம் மார்க்கத்தை விட்டு புறப்பட்டு விடுவார்கள்."

இந்த ஹதீதை புகாரீ இமாம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூஸயீதுல் குத்ரி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

3.

அந்தக் கூட்டத்தார்களில் அநேகர் தலையை மொட்டையாக்குவார்கள் சிரைப்பார்கள்.

قیل سیماهما التحلیق (اخرجه البخاری)

"அவர்களுடைய அடையாளம் தலை சிரைப்பதாகும்."

மேலே எடுத்துக் காட்டப்பட்ட இந்த மூன்று ஹதீதுக்களுடைய கருத்து யாதெனில் நஜ்து தேசத்திலிருந்து வெளிப்படக்கூடிய ஷைத்தானின் கூட்டத்தார்கள் வெளித்தோற்றத்தில் ஹதீதின் படி அமல் செய்ய வேண்டியது அவசியம் என்று சொல்வார்கள். பேச்சுக்குப் பேச்சு ஹதீதை எடுத்துச் சொல்வார்கள். மேலும் தங்களுடைய எண்ணத்தில் அவர்களுடைய தாவாவின் பேரில் அந்த ஹதீதைக் கொண்டு ஆதாரம் தேடுவதற்கு முயற்சிப்பார்கள் மற்றவர்களிடத்திலும் பேச்சுக்குப் பேச்சு ஹதீதை ஆதாரமாகக் காட்டும்படியும் தேடுவார்கள். தங்களுடைய தலையை மொட்டையாக்குவார்கள். கருத்தாவது அந்தக் கூட்டத்தில் சேர்ந்ததற்காக தலையைச் சிரைப்பார்கள். வெளித்தோற்றத்தில் இவர்கள் மற்ற முஸ்லிம்களை விடவும் தொழுகை, நோன்பு மற்றும் வெளிரங்கமான அமல்களில் அதிகமான பேணுதலாக இருப்பார்கள் - குர்ஆன் ஓதுவதிலும், இஷ்ராகு, தஹஜ்ஜுது தொழுவதிலும் ஏனைய முஸ்லிம்களைவிட பேணுதலாக இருப்பார்கள் - இவர்கள் இப்படி எல்லாமிருந்தும் இவர்களுக்கு மார்க்கத்தில் ஒருவகையான சம்பந்தமும் இல்லை, ஏனெனில் இவர்களுடைய கொள்கை கெட்டதாக இருக்கும், அசுத்தமானதாக இருக்கும்.

يقولون من خير قول الناس (ابن ماجه)

---

*நல்லோர்களுடைய வார்த்தைகளை சொல்லிக்காட்டுவார்கள். (இபுனுமாஜா)

அறிந்து கொள்! தலையைச் சிரைப்பது மார்க்கத்தில் விலக்கப்பட்டதல்ல முஸ்லிம்களில் அநேகர் தலையைச் சிரைத்துக் கொள்வது வழக்கமாக இருக்கிறது. ஹதீது ஷரீபில் தலையைச் சிரைப்பது என்று வந்தததற்குக் கருத்து அவர்கள் தங்கள் கூட்டத்தில் சேர்ந்தததற்கு அடையாளமாகத் தலையைச் சிரைத்து விடுவார்கள் என்பதாகும்.

''துரருஸ்ஸனிய்யா'' என்ற கிதாபில் அல்லாமா ஸெய்யிது அஹ்மது ஸெய்னித் தஹ்லானீ, மக்கா முப்தீ அவர்கள் சொல்கிறார்கள்.

தலையைச் சிரைப்பது அவர்களின் அடையாளம் என்று வந்தது, வஹ்ஹாபிய்யாக்களையே குறிக்கிறது. இவர்கள் தங்களைப் பின்பற்றுகிறவர்களைத் தலையைச் சிரைக்கும் படியாகச் சொல்வார்கள். தலையை சிரைக்கும் மட்டிலும் தங்களை விட்டுப் பிரிய விட மாட்டார்கள். பெண்களானாளும்கூட தலையைச் சிரைக்காது விடமாட்டார்கள். இப்படித் தலையைச் சிரைக்கும் படி இவர்களுக்கு முன் சென்ற வழிகெட்டக் கூட்டங்களில் யாருமே சொன்னதில்லை. இவர்கள் தாங்கள்தான் முஸ்லிம்கள், மற்றெல்லோர்களும் முஷ்ரிக்குகள் என்றும், இவர்களின் கூட்டத்தில் சேருவதற்கு முன்னதாக இருந்த ரோமம் முஷ்ரிக்காக இருக்கும் போது முளைத்த ரோமம். ஆகவே அதை சிரைத்துப் போடவேண்டும் என்றும் கருதுகிறார்கள்.

---

*ஷைத்தானின் கூட்டத்தார்களைப் பற்றிய முன்னறிவிப்பு பூரணமாகிவிட்டது. வஹ்ஹாபீ நஜ்திக் கூட்டத்தார்கள் நஜ்து தேசத்திலிருந்தே தோன்றினர்.*

*ஏறக்குறைய 1200 (ஆயிரத்து இருநூறு) வருஷத்திற்குப் பிறகு தீர்க்கதரிசன முன்னறிவிப்பு நிறைவேறியது.*

*சத்திய முன்னறிவிப்பாளர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சத்திய வாக்குப்பிரகாரம் நஜ்து தேசத்திலிருந்து வஹ்ஹாபிய்யாக் கூட்டத்தார்கள் தோன்றினார்கள். இக் கூட்டத்தின்ஸ்தாபகர் அப்துல் வஹ்ஹாபு,நஜ்து தேசத்துடையவர். இதன் விபரமாவது.*

*ஹிஜ்ரி 1203-ல் துருக்கியரசர் ஸுல்தான் அப்துல் ஹமீதுகான் இறந்து போனார். அது சமயம் அரசருடைய சகோதரரின் மகன், மூன்றாவது ஸுல்தான் ஸலீம் அரசரின் மக்களை சிறையில் அடைத்து சிற்றப்பனுடைய அரச பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டார். மேலும் அரசரின் மந்திரிமார்களையும் மற்றும் தலைவர்களையும் அவர்கள் தனக்கு விரோதமாக அரசரின் மக்களுக்கு உதவி செய்யக்கூடும் என்ற எண்ணத்தில் அவர்களை எல்லாம் வெட்டிக் கொன்று போட்டார். இரவு பகலாக பிரஜைகளுக்குச் சொல்லொண்ணா துன்பங்களை கொடுத்தார். அதனால் துருக்கி அரசாங்கம் பிளவுண்டு போனது. துருக்கி அரசருக்கு கப்பம் கட்டிக் கொண்டிருந்த சுற்றுப்புற மாகாண அதிபதிகள் (துருக்கி பாஷையில் இவர்களுக்கு பாஷா என்று சொல்லப்படும்.) துருக்*

கி அரசாங்கம் சீர்கெட்டுப் பலவீனமாய் இருப்பதைப் பார்த்து கொள்ளையடித்துச் சூரையாட ஆரம்பித் விட்டார்கள். கட்டுப்பாடிழந்த அரசாங்கமாகி, அங்கு சண்டை - சச்சரவுகள், வெட்டுக் குத்துக்களாயின. வலியவரெல்லாம் இளைத்தவருடைய அரசாங்கத்தை பறித்தெடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். முடிவாகத் துருக்கி அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டிருந்த பிரதேச அரசாங்கமெல்லாம் பலவீனமாயின. யார்யாருக்கு அரசாட்சியின் ஆசை வந்ததோ அவனெல்லாம் தன்னோடு ஓர் கூட்டத்தைத் திரட்டி எந்தப் பகுதியை வேண்டுமானாலும் கைப்பற்றி ஒவ்வொருவரும் தன்னு டைய ஆட்சியை நடத்தத் தொடங்கிவிட்டார்கள்.

அந்தக் காலத்தில் ஹிஜாஸில் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினரின் ஆட்சியே நடந்து கொண்டிருந்தது. அங்கு அரசு புரிபவருக்கு ''ஷரீபுமக்கா'' என்று பெயர் விளங்கி வந்தது. அந்த (ஹிஜாஸ்) மாகாணத்தின் வருமானம் அதனுடைய அரச நிர்வாகத்தை நடத்தப் போதியதாக இல்லாமலிருந்தது, துருக்கி அரசர் அதற்கு ஆள் உதவியும் பண உதவியும் செய்து கொண்டிருந்தார்.

மேலும் (ஹறமைனி ஷரீபைனி) புனித மக்கா, மதீனா ஆகிய இரு புண்ணிய ஸ்தலங்களும் எல்லா முஸ்லிம்களாலும் கண்ணியமாக நன்கு மதிக்கப்பட்டு வந்ததினால் துருக்கி அரசாங்கத்திற்குக் கீழுள்ள மற்ற எல்லா அரசாங்கங்களும் அதற்கு (ஹிஜாஸுக்கு) உதவி செய்யத் தயங்கவில்லை. அல்லாமலும் எல்லாவற்றிற்கும் பிரதானமாக ஹிஜாஸின் பேரில் எந்த தேசமாவது படையெடுத்தால் ஹிஜாஸ் அதிபதி ஷரீபின் உத்திரவுக்கிணங்கி துருக்கி அரசாங்கம் பட்டாளங்களை அனுப்பி வேண்டிய உதவிகளையும் செய்து வந்தது. துருக்கி அரசாங்கமும் மற்றும் சுற்றுப்புற அரசாங்கங்களும் ஹிஜாஸுக்கு எல்லா வகையிலும் பக்கபலமாக உதவி செய்யத் தயாராயிருந்தன. இந்த சக்திகளின் உதவியினால் "மக்கா ஷரீபு" நிம்மதியாக வாழ்க்கையை நடத்தி வந்தார். துருக்கி அரசாங்கம் சீர்கெட்டுப் பலவீனமானதும், அதன் கீழுள்ள அரசாங்கங்களும் சீர்குலைந்து தங்களுக்குள் வெட்டு குத்துக்களானதும் அதன் குணப்பாடுஹிஜாஸையும் தாக்கியது. ஹிஜாஸுக்குப் பக்கபலமாக- உதவியாக இருந்த அரசாங்கங்களெல்லாம் பலவீனமானதைத் தங்களுக்கு நல்ல சந்தர்ப்பமாகக் கருதி துஷ்டர்கள் புதுப்புது பித்தனாக்களை உண்டாக்கினார்கள். அவையனைத்திலும் பெரியது நஜ்தியா வஹ்ஹாபிய்யாக் களுடைய பித்னாவாகும். ஹிஜாஸ், தேசத்தவர்கள் யஸீது ஹஜ்ஜாஜு (இபுனு யூசுபு) உடைய அக்கிரமச் செயல்களைக் கேள்விப்பட்டிருப்பார்கள். அவைகளை எல்லாம் நஜ்தியாக்களின் மூலம் அனுபவித்துக் கண்ணாலும் கண்டுகொண்டார்கள். அதாவது, வஹ்ஹாபிய்யாக் கூட்டத்திற்கு இமாமான அப்துல் வஹ்ஹாபு நஜ்தியினால் கண்ணாரக் கண்டு கொண்டார்கள்.

அவர், நஜ்தில் ஊக்கமான ஓர் தலைவராக இருந்தார் மேலும் அவருடைய மூதாதைகள் வெளிரங்கமான கல்வியில் நஜ்துதேசத்தார்களுக்கெல்லாம்இமாம்களாக இருந்தார்கள்.வஹ்ஹாபிய்யாக் கூட்டத்தாரின் தலைவரான அப்துல் வஹ்ஹாபு நஜ்தி, தான் ஓர் அரசராக ஆக வேண்டும் என்ற கனவு கண்டு அதை நனவாக்கப் பிரயத்தனப்

*பட்டார். மார்க்கத்தின் பெயரால் ஒரு கூட்டத்தைத் தாயார் செய்து மக்கா, மதீனா ஹிஜாஸின் மற்றப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு முயற்சிகள் செய்தார். இந்த அடிப்படை நோக்கத்திலேயே அப்துல் வஹ்ஹாபு நஜ்தி அக்கம் பக்கம் கிராமங்களுக்குச் சென்று தவ்ஹீது, தொழுகைபற்றி உபதேசம் (வஃளு) செய்ய ஆரம்பித்தார். "இக்காலத்தில் முஸ்லிம்களெல்லாம் ஷிர்க்கில் (இணை வைப்பதில்) பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். தவ்ஹீதை மறந்து விட்டார்கள்". என்றெல்லாம் அவர் ஜனங்களுக்குப் போதிக்க ஆரம்பித்தார். பொதுமக்கள் தவ்ஹீத்தின் பக்கமும், தொழுகையின் பக்கமும் அழைக்கும் மேல்பகட்டைப் பார்த்து மயங்கி அப்துல்வஹ்ஹாபு நஜ்தியைத் தொடரவும் பின்பற்றவும் அவரது சீடர்களாகவும் முற்பட்டார்கள். சிறுகச் சிறுக அந்தக் கூட்டத்தின் தொகையும் ஆயிரமாயிரமாகியது. தனக்கு வலு ஏற்பட்டதைக் கண்ட அப்துல் வஹ்ஹாபு ஜனங்களைப் பார்த்து முஸ்லிம்களுக்கு ஓர் தலைவர் வேண்டும் என்று சொன்னதும் ஜனங்களெல்லாம் ஏகோபித்து இந்தப் பதவிக்கு உங்களைப் போல் தகுதியானவர் வேறு எவர் இருக்க முடியும்? என்று சொன்னார்கள். அப்துல்வஹ்ஹாபு தன்னுடைய கூட்டத்தார்களிடத்தில் தன்னைத் தலைவர் என்று ஒப்புக்கொண்டுஉறுதிப் பிரமாணம் (பைஅத்து) வாங்கினார். ஜுமுஆ குத்பாவில் அரசருடைய பெயருக்குப் பகரமாக தன்னுடைய பெயரை சேர்த்தார். தனது ஊராகிய நஜ்தை இராஜதானியாக்கினார். மேலும் தன்னுடைய மக்களையும் சொந்தக்காரர்களையும் அதிகாரிகளாக நியமித்துக்கொண்டு தன்னுடைய புதிய மார்க்கத்தை (வஹ்ஹாபிய்யாக் கொள்கையை) பரப்புவதில் கவனத்தை செலுத்தினார். ஸுன்னத்து ஜமாஅத்துக் கூட்டத்தார்களை முஷ்ரீக்கீன் (இணை வைப்பவர்கள்) என்று ஆக்குவதற்காக முஃதஸிலாக்களுடைய சில கொள்கைகளையும், காரிஜிய் யாக்களுடைய கொள்கைகளையும், ளாஹிரியாக் களுடைய சில கொள்கைகளையும், தனதிஷ்டப்படி சில கொள்கைகளையும் சேர்த்து ஒரு கிதாபு எழுதினார்.*

*அப்பால் அவருடைய மகன் முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபு என்பவர் அதில் மேலும் சிலவற்றைச் சேர்த்து, அதற்கு கிதாபுத் தவ்ஹீத் என்று பெயரும் வைத்தார். அதில் உம்மத்து முஹம்மதிய்யாக்கள் எல்லோரும் காபிர்கள் என்றும், குறிப்பாக மக்கா, மதீனாவிலுள்ளவர்களை முஷ்ரிக்குகள் என்றும் அவர்களை வெட்டுவதும் அவர்களின் பொருட்களைக் கொள்ளையடிப்பதும் ஹலால் என்றும் சொல்லி இருக்கிறார்.*

*அதற்குப் பிறகு ஹிஜ்ரி 1221-ல் பெரும்பட்டாளங்களுடன், மூன்றாவது ஸுல்த்தான் ஸலீமின் கடைசி காலத்தில் சண்டை செய்தார். ஜனங்கள் எல்லாம் மக்கா ஷரீபிடத்தில் துருக்கிப்பட்டாளங்களை மிஸ்ரு, ஷாமிலிருந்து தருவியுங்கள். அல்லது அக்கம் பக்கத்தில் உள்ள அரபிக் கூட்டத்தார்களை எல்லாம் ஒன்று திரட்டி நஜ்திகளுடன் போர் புரியுங்கள் என்று யோசனை சொன்னார்கள். மக்கா ஷரீபு முஸ்லிம்களை ஹறம் ஷரீபுக்கு வரவிடாமல் அவர்களை எப்படித் தடுக்கிறது என்ற இந்த நினைப்பிலேயே அவர்களைத் தடுப்பதைச் சரிகண்டாரில்லை.ஹிஜாஸ் மக்கள் எவ்வளவோ செ*

*ால்லியும் மக்கா ஷரீபு நஜ்திகளுடைய விஷயத்தில் நல்லெண்ணமே வைத்துவிட்டார்.கொஞ்சமும் சிந்தித்தாரில்லை.*

*கடைசியாக நஜ்திகள் கர்னுல்மனாஸில் என்ற இடம் வரையிலும் வந்துவிட்டார்கள். அங்கிருந்து முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபு மக்காவை விட்டுவிட்டு தாயிபின் பேரில் போர் தொடுத்தான்.நாலா பக்கங்களிலும் வளைந்து கொண்டு தாயிபு வாசிகளையெல்லாம் வெட்டிக் கொன்று குவித்தான். அவர்களுடைய பொருட்களை எல்லாம் கொள்ளையடித்தான். சிறுவர்களையும் விட்டானில்லை. பெரியவர்களையும் விட்டானில்லை. வாலிபர்களையும் விட்டானில்லை.வயோதிகர்களையும் விட்டானில்லை. பெண்கள் என்றும் பார்த்தானில்லை. ஆண்கள் என்றும் பார்த்தானில்லை. யாராயிருந்தாலும் கண்டவர்களை யெல்லாம் வெட்டித் தள்ளினான்.*

*ஹஜ்ரத் அப்துல்லாஹ் இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பள்ளி யை அவன் உடைத்துத் தரைமட்டமாக்கிவிட்டான். புண்ணிய ஸ்தலங்களை எல்லாம் அழித்துவிட்டான். இவ்வாறாக கொலை, நாசம் முதலிய பழிபாதகச் செயல்களைப் புரிந்து அங்குள்ள எல்லாப் பொருள்களையும் சாமான்களையும் சூரையாடி கைவசப் படுத்திக் கொண்டான்.*


*இந்த சமாச்சாரம் மக்கா ஷரீபுக்கு எட்டியது. மேலும், நஜ்திகள் இனிமேல் மக்காவின் மீது தாக்குதல் புரியவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரியவந்தது.ஒரு நாளைக்கு முன்பு கிதாபுத் தவ்ஹீத் என்ற கிதாபு மக்கா உலமாக்களுடைய கைக்குக் கிட்டியது.அதைப் பார்த்து மக்கா உலமாக்கள் அந்த வஹ்ஹாபிய்யாக் கூட்டத்தார்கள் பேரில் குப்ரு பத்வாவைக் கொடுத்தார்கள். ஆனால், ஷரீபு மக்காவுக்கு இப்பொழுது என்ன அவகாசமிருக்கிறது? அவர் மக்காவை விட்டு ஓடிப்போவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே மக்கா ஷரீபு சில அடிமைக ளைத் தன்னோடு கூட்டிக் கொண்டு ஜித்தா போய் அங்குள்ள கோட்டையில் அடைக்கலம் புகுந்து கொண்டார். நஜ்திகள் மாபெரும் பாதகத் தன்மையோடும், அழிச்சாட்டிய எண்ணத்தோடும் மஸ்ஜிதுல்ஹராம்(கஃபாவின்)புனித பள்ளியினுட்பக்கமும் புகுந்து அங்கு சங்கையான ஹறம் ஷரீபில் அபயம்தேடி மறைந்து கொண்டிருந்த மக்களை எல்லாம் ஈவிரக்கமின்றி கொன்று குவித்தார்கள். ஹறம் ஷரீபுடையவும், மக்கா மாநகர வாசிகளுடையவும் பெரும் பொருள்களையெல்லாம் சூரையாடினார்கள்.*

*பின்பு மக்காவில் புரிந்த அட்டூழியம் போலவே மதீனா முனவ்வராவிலும் அவர்கள் கொஞ்சமும் இரக்கமின்றி முஸ்லிம்களை வெட்டி வீழ்த்தினார்கள்.இவர்கள் இவ்விதமாக வெட்டவும் கொள்ளையடிக்கவும் காரணம் முஹம்மதுப்னு அப்துல் வஹ்ஹாபு நஜ்தியுடைய மதுஹபின் பிரகாரம் எல்லா முஸ்லிம்களும் முஷ்ரிக்குகள், பிதுஅத்துக்காரர்கள் என்று இருப்பதுவேதான்.*

*இவ்வாறகவே, சொற்ப நாள் இந்த துஷ்டக் கூட்டத்தாரின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.*

*அப்பால் ஸுல்த்தான் அப்துல் ஹமீதுகானின் மகன் ஸுல்த்தான் மஹ்மூதுகான் ஆட்சிக்கு வந்தார். இவர் உத்தமர். அல்லாஹ்வைப் பயந்தவர் இவர் முதலில் தன்னுடைய அரசாங்கத்தை சீர்படுத்திக் கொண்டு பின்னர் மிஸ்ரின் அதிபதியாக இருந்த முஹம்மது அலி பாஷாவை நஜ்திகளுடன் போர் புரியும்படி கட்டளையிட்டார். அவர் இபுறாஹீம் பாஷாவை ஹிஜாஸ் தேசத்திற்கு அனுப்பிவைத்தார். அவர் வந்து ஹிஜாஸை விட்டும் நஜ்தி வஹ்ஹாபிய்யாக்களை விரட்டி ஓட்டினார். இந்தக் கெட்ட கொள்ளைக்காரர்களை விட்டும் ஹிஜாஸை சுபீட்சமடையச் செய்தார்.*

*இந்தச் சங்கதிகளில் சிலவற்றை அல்லாமா இபுனு ஆபிதீன் ஷாமீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் துர்ருல் முக்தாரின் விரிவுரை ரத்துல் முஹ்தார் என்னும் கிதாபின் மூன்றாவது பாகம் கிதாபுல் ஜிஹாத் - பாபுல் புகாத் என்னும் பாடத்தில் காரிஜிய்யாக்களைப் பற்றிப் பேசுமிடத்தில் பின்வருமாறு சொல்லுகிறார்கள்.*


كما وقع في زماننا في اتباع عبد الوهاب الذين خرجوا من نجد وتغلبوا على الحرمين وكانوا
ينتحلون مذهب الحنابلة لكنهم اعتقدوا انهم هم المسلمون وان من خالف اعتقادهم
مشركون واستباحوا بذلك قتل اهل السنة وقتل علمائهم حتى كسر الله تعالى شوكتهم
وخرب بلادهم وظفر بهم عساكر المسلمين عام ثلاثة وثلثين والف ومائتين -

*“காரிஜிய்யாக்கள் நம் காலத்தில் தோன்றிய அப்துல் வஹ்ஹாபின் கூட்டத்தார்களைப் போல வே இருந்தார்கள். இவர்கள் நஜ்து தேசத்திலிருந்து (ஹறமைனீ, ஷரீபனீ) மக்கா, மதீனா ஆகிய இரு புண்ணியஸ்தலங்கள் பேரில் போர் புரிந்து அடர்ந்தேறினார்கள்.வெளிரங்கத்தில் இவர்கள் தங்களை ஹன்பலி மதுஹபுக்காரர்களென்று சொல்லிக் கொள்வார்கள். அந்தரங்கத்தில் இவர்கள் தாங்கள் தாம் முஸ்லிம்கள் என்றும், தங்களுடைய கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையுடைய மற்ற முஸ்லிம்களை எல்லாம் முஷ்ரிக்குகள் என்றும் கண்டிருந்தார்கள். இதனாலேயே இவர்கள் ஸுன்னத்து ஜமாஅத்துக்காரர்களையும், ஸுன்னத்து ஜமா அத்து உலமாக்களையும் வெட்டுவது ஆகுமெனவும் முடிவு செய்திருந்தார்கள். (முஸ்லிம்களை கொலை செய்தார்கள் அவர்களுடைய பொருட்களை கொள்ளையடித்தார்கள்) கடைசியாக அல்லாஹு தஆலா அவர்களுடைய கொட்டத்தை அடக்கியொடுக்கி அவர்களின் தேசத்தை நாசமடையச் செய்து பாழாக்கினான். முஸ்லிம்களுடைய பட்டாளங்களுக்கு அந்த வஹ்ஹாபிய்யாக்களின் பேரில் (ஹிஜ்ரி) 1233-வது ஆண்டில் வெற்றியைக் கொடுத்தான்.”*

## இந்தியாவில் வஹ்ஹாபியாக் கொள்கை பரவியது

*பதிமூன்றாவது நூற்றாண்டில் பிரக்யாதி பெற்ற டில்லி மாநகரில் கல்வியில் பேரும், புகழும் வாய்ந்த அஸீஸிய்யாக் குடும்பத்தில் (ஷெய்குனா மௌலானா*

ாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திது திஹ்லவிய்யி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் குடும்ப த்தில்) முஹம்மது இஸ்மாயீல் என்றொருவர் தோன்றினார் அவர் இயற்கையிலேயே புத்திக் கூர்மையானவர் வெளிரங்கமான (இல்மு) கல்விகளைக் கற்றுமுடித்தபின் அவருக்கு பிரதேசம் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஹஜ்ஜுக்குப் போக நாடி ஹிஜாஸ் போனார்.

சில சமயம் புத்திக் கூர்மை ஈமானையும், மார்க்கத்தையும் நாசப்படுத்தவும் செய்கிறது.மௌ லவி இஸ்மாயீலுக்கு வஹ்ஹாபிய்யாக்களுடைய பிரபல்யமான "கிதாபுத் தவ்ஹீத்" என்ற நூல் கிடைத்தது. அவருடைய சுபாவம் புதியதை விரும்பக் கூடியதாக இருந்தது. அவர்தானே அந்தக் கிதாபை மொழிபெயர்த்து அதற்கு "தக்வியத்துல் ஈமான்" என்று பெயர் வைத்தார். இந்த கிதாபு இப் பொழுதும் ஒவ்வொரு வஹ்ஹாபியரின் வீட்டிலும் இருக்கிறது. அவர்களுடைய நூல் நிலையத்திலும் இருக்கிறது.

மௌலவி இஸ்மாயில், அப்துல் வஹ்ஹாபு நஜ்தியைப் பின்பற்றி மக்கா முஷ்ரிக்கீன்கள் விஷயத்தில் இறங்கிய ஆயத்துகளை எல்லாம் முஸ்லிம்கள் பேரில் சுமத்தி ஷிர்க்கைப் போட்டு எல்லா முஸ்லிம்களையும் முஷ்ரிக்குகள் என்று முடிவு செய்தார். நபிமார்கள், அவ்லியாக்கள் சன்மார்க்கப் பெரியோர்களை எல்லாம் பற்றிக் கடுமையாகத் தூஷணித்திருக்கிறார்.அவற்றை எழுதுவதானால் தனியாக ஓர் பெரிய நூல் தேவைப்படும். அன்பியாக்கள்,அவ்லியாக்களை ஓரிடத்தில் கேவலம் செம்மானைவிட மிகவும் தாழ்ந்தவர்கள் என்றும் மற்றுமோர் இடத்தில் அற்பமான அணுவுக்கும் குறைந்தவர்கள் என்றும் சொல்லிக் காட்டுகிறார். உலக இரட்சகர் ஸெய்யிது ஆலம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி (அல்லாஹ் காத்துக் கொள்வானாக) அவர்கள் மவுத்தாகி மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டார்கள் என்றும் எழுதியிருக்கிறார்.

முடிவாக செருப்புக்கேற்ற ஜோடிச் செருப்பு வாய்ந்தது என்பதற்கொப்ப முந்தின வஹ்ஹாபிய்யான இமாம் ஷெய்கு நஜ்தி கிதாபுத் தௌஹீதில் எவ்வெவற்றை எழுதியிருந்தாரோ அவைய னைத்தையும்-இல்லை அதற்குமேலும் இந்த மௌலவி இஸ்மாயீல் தன்னுடைய தக்வியத்துல் ஈமானில் எழுதிவிட்டார். மேலும் வஹ்ஹாபிய்யாக் கொள்கையைப் பரப்புவதில் இவரின் போக்கும் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாபு கையாண்ட வழியாகவே இருந்தது.

நஜ்தி தன்னைப் பின்பற்றிய எல்லோரிடமும் பிரமாண வாக்கு (பைஅத்து) எடுத்துக்கொண்டு மார்க்கத்தின் பெயரால் ஒரு கூட்டத்தைத் திரட்டி (ஜிஹாத்) மத யுத்தத்தின் பெயரால் புறப்பட்டார். மௌலவி இஸ்மாயில் தன்னுடைய குரு ஸெய்யிது அஹ்மது பரேலீ இடத்தில் (பைஅத்து) பிரமாண வாக்குக் கொடுத்து ஜிஹாதின் பெயரைச் சொல்லி ஒரு கூட்டத்தை உண்டாக்கினார். மார்க்க யுத்த வீரராக (முஜாஹிதாக) மைதானத்தில் வந்தார்.

என்னென்ன திட்டங்களை எல்லாம் சமர்ப் போர்வையில் மறைத்துக்கொண்டு இவர்கள் போர் புரியக் கிளம்பினார்களோ அல்லாஹுத ஆலாதான் அறிவான். கைே

*சதம்,மன அபிலாஷைகளெல்லாம் மனதுக்குள்ளேயே கிடந்து போய்விட்டது.குருவி னுடையவும்,சீடருடையவும் வழிகேடான கனவு நனவாகவில்லை. யாரோ ஒருவர் குரு, சீடன் (ஸெய்யிது அஹ்மது பரேலீ, மௌலவி இஸ்மாயில்) இருவரையும் வெட்டி வீழ்த்தினார்.*

*பிற்பாடு இந்தியாவில் வஹ்ஹாபிய்யாப் பிரச்சாரம் வெளிரங்கமாக எங்கும் தலைகிளம்பியதாகக் காணப்பட வில்லை. யாருமே வஹ்ஹாபிய்யாக் கொள்கையை ஏறிட்டுப் பார்க்கவுங்கூட விரும்பாதிருந்தனர்.*

*சில காலங்கழித்து வஹ்ஹாபிய்யாக் கொள்கையின் பால் அபிமானமுள்ள ஒரு சிலர் கிளம்பி அக்கொள்கையின் வீட்டைப் பராமரிக்க முயற்சி செய்தார்கள். வெளிரங்கத்தில் ஹனபி மதுஹபின் மஸ்அலாக்களை போதிக்கவும் அந்தரங்கத்தில் வஹ்ஹாபிய்யாக் கொள்கைகளைப் பரப்பவும் திட்டமிட்டு அதற்காக ஒரு மத்ரஸாவை நிர்மாணிக்கவும் நாட்டங் கொண்டனர். அப்படியே ஒரு மத்ரஸாவும் ஏற்படுத்தப்பட்டது.இம்மத்ரஸாவின் ஆசிரியர்கள்,அதிபதிகளுடைய முதல்வேலை வஹ்ஹாபிக் கொள்கையை சிலாகித்துப் பேசுவதும், அழகுபடுத்திக் காட்டுவதுமாக இருந்தது. சைக்கினையாகத் தங்களுடைய கொள்கைகளையும் எடுத்துக்காட்டி, தங்களுடைய கொள்கை அந்த வஹ்ஹாபிய்யாக் கொள்கைதான் என்பதையும் முஸ்லிம்களுக்கு மறைமுகமாக அறிவித்தார்கள்.*

*சாமானியமான முஸ்லிம்கள் சிலர் இவர்களால் ஏமாற்றமடைந்தனர். ஸுன்னத்து ஜமாஅத்து உலமாக்கள் இவர்களின் கொள்கைகளைத் துலாம்பரமாக வெளிப்படுத்தி கொள்கையில் இவர்களும் வஹ்ஹாபிகளேதான் என்பதை முஸ்லிம் மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். உண்மையை உணர்ந்த முஸ்லிம்கள் இவர்களை விட்டும் வெருண்டோடினர். இவர்களுக்கு ஸுன்னத்து ஜமாஅத்தார்களுடைய பள்ளிவாசல்களில் இமாமத்து வேலையோ, மத்ரஸாக்களில் ஓதிக்கொடுக்கும் வேலையோ கிடைக்கிறதில்லை. ஸுன்னத்து ஜமாஅத்தார்கள் வஹ்ஹாபிகளு டைய (வஃளு) பிரசங்கங்களைக் கேட்கிறதுமில்லை.அவர்களின் கிதாபுகளைப் பார்க்கிற வழக்கமும் இல்லை. முடிவாக வஹ்ஹாபிக் கொள்கை முஸ்லிம்களில் ஒப்புக்கொள்ளப் படாமல் போய்விட்டது.*

*இவ்வாறாக ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டாகியும் (இந்தியாவில்) வஹ்ஹாபிய்யாக்களு டைய முயற்சிகளெல்லாம் பலனற்றுப் போய்விட்டது. இதைப் பார்த்து வஹ்ஹாபிய்யாக் கூட்டத்தார்களில் மௌலவி இல்யாஸ் என்ற பெயருடையவர் ஒரு கூட்டத்தை உற்பத்தி செய்து அதற்கு தப்லீகு ஜமாஅத்து என்று பெயர் வைத்தார். வஹ்ஹாபி உலமாக்களையும், பிரசங்கிகளையும் ஒன்று கூட்டினார். வஹ்ஹாபிக் கொள்கையைப் பிரச்சாரம் செய்வதற்குத் தடங்கல் ஏற்படாதவாறும், பொது ஜனங்கள் இக்கொள்கைகளைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளக்கூடியவாறும் சில திட்டங்களை ஏற்படுத்தினார்.*

*இக்கூட்டம் இப்பொழுது கலிமா, தொழுகையைப் பற்றி உபதேசம் செய்து ஸுன்னத்து ஜமாஅத்துப் பொதுமக்களைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். எங்களுக்கு எந்தக் கொள்கைகளைப்பற்றியும் வாதிக்கிற நோக்கமில்லை என்று இவர்கள் வெளியில் சொல்லிக் கொள்ளவும் செய்வார்கள். ஆனாலும் நீங்கள் இந்தத் தப்லீகு ஜமாஅத்தை உண்டாக்கியமௌலவி இல்யாஸின் வார்த்தைகளையும், எழுத்துக்களையும் கேட்ட பின் பார்த்த பின் இவர்களுடைய நாட்டம் கலிமா, தொழுகைகளைச் சரியாகச் செய்யும்படி போதிப்பது மட்டுமில்லை. அத்துடன் பொதுமக்களைத் தங்களுடைய கொள்கையில் கொண்டு திருப்பி வஹ்ஹாபிய்யாக் கொள்கையைப் பரப்புவதுதான் அவர்களுடைய குறிக்கோள்(நோக்கம்) என்பதை நீங்களே நன்றாக உணர்ந்துகொண்டிருப்பீர்கள்.**

---

*முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபு தானும் தன்னைப் பின்பற்றியவர்களும் தான் முஸ்லிம்கள் என்றும் மற் றும் அவருடைய காலத்திற்கு 600 வருஷங்கள் வரையில் முற்காலத்திலிருந்தவர்கள் யாவரும் முஷ்ரிக்குகள் என்றும் தனக்கு தனது மார்க்கம் வஹியே இல்ஹாமியினால் கிடைத்தது என் றும் சொன்னார்.

மக்கா முப்தி ஸெய்யிது அஹ்மது ஸெய்னீ தஹ்லானி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் (அத்துரருஸ் ஸனிய்யா) என்னும் நூலின் 43-வது பக்கத்தில் வருகிறது.

وقال له رجل آخر مرة هذا الدين الذي جئت به متصل أم منفصل فقال له حتى مشايخي
ومشايخهم إلى ستمائة سنة كلهم مشركون فقال له الرجل إذن دينك منفصل لا متصل فعمن أخذته
فقال وحي إلهام كالخضر فقال له إذن ليس ذلك محصورا فيك كل أحد يمكنه أن يدعي وحي الإلهام.

இபுனு அப்துல் வஹ்ஹாபிடத்தில் நீவிர் கொண்டு வந்திருக்கும் இந்த மார்க்கம் முன்னோர்களிலிருந்து தொடர்ச்சியாக வந்ததா? அல்லது தொடர்பின்றி வந்ததா? என்று வேறொரு மனிதர் கேட்டார். அதற்கவர் என்னுடைய ஷெய்கு மார்களும் அவர்களுடைய ஷெய்குமார்களும் இன்றையிலிருந்து 600 வருஷங்கள் வரையில் முன்புள்ளவர்கள் அத்தனை பேர்களும் முஷ்ரிக்குகளாக இருக்கும் என்றார். அந்த மனிதர் அப்படியானால் உம்முடைய மார்க்கம் (முன்னோர்களுடன்) தொடர்பில்லாததாகும். ஆகவே நீவிர் இதனை எவரிடமிருந்து எடுத்தீர் என்று வினவ கிளுரு(நபி)க்குக் கிடைத்தது போன்று எனக்கு இல்ஹாமிய்யானவஹ்யு கொண்டு கிடைத்தது. என்று இபுனு அப்துல் வஹ்ஹாபு சொன்னார். அதற்கு அந்த மனிதர் அவ்விதமானால் இது உமக்கு மாத்திரம் சொந்தமல்லவே நீவிர் தாவாச் செய்வது போலவே ஒவ்வொரு மனிதரும் தனக்கு இல்ஹாமிய்யான வஹ்யு இருப்பதாக தாவாப் பண்ணமுடியுமே என்று கூறினார்.

இதே போலத்தான் மௌலவி இல்யாஸும் தனக்கு இந்த தப்லீகு முறை கனவில் அருளப்பட்டது என்று சொல்கி றார். அவருடைய மல்பூளாத்து 40-வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

آپ نے فرمایا کہ اس تبلیغ کا طریقہ بھی مجھ پر خواب میں منکشف ہوا اللہ تعالیٰ ارشاد کنتم خیر امتہ
اخرجت للناس تامرون بالمعروف وتنہون عن المنکر وتؤمنون باللہ کی تفسیر
خواب میں یہ القاء ہوئی کہ تم مثل انبیاء علیہم السلام کے لوگوں کے واسطے ظاہر کئے گئے ہو۔

அவர் (இல்யாஸ்) சொன்னார் இந்தத் தப்லீக்கின் முறையும் எனக்கு கனவில் வெளியாயிற்று அல்லாஹ்வின் திருவசமான குன்தும்கைற உம்மதின்.........ஜனங்கள் அளவில் அனுப்பப் பட்ட விஷேச உம்மத் தாக நீங்கள் ஆகிவிட்டீர்கள் நீங்கள் நல்லவற்றைக் கொண்டு ஏவவும், கெட்டவற்றை விட்டு விலக்கவும் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ளவும்... என்ற திருமறை வசனத்திற்கு வியாக்கியானம் நீவிர் நபிமார்களைப் போன்றவர் உம்மை ஜனங்களுக்காக வெளியாக்கப்பட்டது என்பதாக கனவில் எனக்கு அறிவிக்கப்பட்டது.

இன்னமும் அதே மல்பூளாத்து 32-வது பக்கத்தில் அவர் சொல்கிறார்.:-

فرمایا لوگ میری تبلیغ کے برکات دیکھ کر یہ سمجھتے ہیں کہ کام ہو رہا ہے حالانکہ کام اور چیز ہے
اور برکات اور چیز دیکھو رسول اللہ صلی اللہ علیہ وسلم کی ولادت شریفہ ہی سے برکات کا ظہور ہونے لگا
مگر کام بہت بعد میں شروع ہوا اسی طرح یہاں بھی سمجھو میں سچ کہتا ہوں کہ ابھی تک اصلی کام شروع
نہیں ہوا جس دن کام شروع ہو جائے گا تو مسلمان سات سو برس پہلے کی حالت کی طرف لوٹ جائیں گے

''ஜனங்கள் என்னுடைய தப்லீக்கின் பறக்கத்துகளைப் பார்த்துவிட்டு வேலை (நன்றாக) நடக்கிறது என நினைக்கிறார்கள்.வேலை என்பது ஒன்று பறக்கத்து என்பது வேறொன்று பாருங்கள்:றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்பான ஜனனத்திலிருந்தே பறக்கத்துகள் வெளியாக ஆரம்பித்துவிட்டன.ஆனால் வேலையோ றொம்பப் பின்னால்தான் ஆரம்பமானது. அதேவிதமாகவே இங்கும் நினையுங்கள் மெய்யாக நான் சொல்கிறேன். இதுவரையிலும் அசல் வேலை ஆரம்பமாகவில்லை.என்றைக்குவேலை ஆரம்பமாகுமோ அன்றைக்கே முஸ்லிம்கள் (இற்றைக்கு) 700 வருஷங்களுக்கு முன்னுள்ள நிலைக்கு மீளுவார்கள்.'' என்று அவர்(இல்யாஸ்) சொன்னார்.

சகோதரர்களே சிந்தித்துப் பாருங்கள். இபுனு அப்துல் வஹ்ஹாபு ஹிஜ்ரி 1111-ல் பிறந்து 1206-ல் இறந்தார்.அவர் இறந்து 97வருஷங்களுக்குப் பின்பு 1303ல் இல்யாஸ் பிறந்தார். இபுனு அப்துல் வஹ்ஹாபு அவருடைய காலத்திலிருந்து 600 வருஷங்கள் வரையிலுமுள்ளவர்களை எல்லாம் முஷ்ரிக்குகள் என்று சொன்னார். இல்யாஸ் தனது காலத்திலிருந்து 700 வருஷங்கள் வரையிலுமுள்ளவர்களை எல்லாம் முஷ்ரிக்குகள் இவர்களை எல்லாம் மாற்றி அமைப்பதற்காக வேண்டி ஆரம்ப வேலைகள் செய்து கொண்டிருந்ததாகவும் சரியானபடி வேலை செய்யத் தொடங்கியதும் ஜனங்களெல்லாம் ஷிர்க்கை விட்டும் நீங்கி 700 வருஷங்களுக்கு முன்னுள்ள நிலைக்கு மாறிவிடுவார்கள். முஃமின்களாக முவஹ்ஹிதுகளாக ஆகிவிடுவார்கள் என்றும் இல்யாஸ் நினைப்பதாக அவருடைய வாசகத்திலிருந்து விளங்கவில்லையா? இதற்காக தான் அவர் முஸ்லிம்களுக்கு கலிமா சொல்லிக் கொடுக்கச் சொல்கிறார்கள் போலும்.

மேலும், இல்யாஸ் தன்னுடைய கனவில் ''குன்தும் கைர உம்மத்தின்''என்ற திருமறை வசனத்தின் வியாக்கியானம்; ''நீவிர் நபிமார்களைப் போன்றவர், உம்மை ஜனங்களுக்காக வெளியாக்கப்பட்டது''. என்று அறிவிக்கப் பட்டதாக சொல்வதனால் அவரும் நபித்துவத்தை தாவாச் செய்ய ஆசிக்கிறார். உன்னிப் பார்க்கிறார் என்பதும் விளங்கவில்லையா? ஏன் அவருக்கு மாத்திரம் அந்த ஆசை வராதிருக்கும்? அவருடைய ஆசிரியரும் குருவுமான றஷீது அஹ்மது கொங்கோஹிக்கு அந்த ஆசை வரவில்லையா? அவரின் தத்கிறதுர்றஷீது இரண்டாம் பாகம் 17வது பக்கத்தில்

اس زمانہ میں ہدایت ونجات موقوف ہے میرے اتباع پر

"இக்காலத்தில் நேர்வழியும் ஈடேற்றமும் என்னைப் பின்பற்றுவதின் பேரிலேயே தரிப்பட்டிருக்கிறது'' என்று சொல்கிறார்.

இன்னமும் இல்யாஸுடைய ஆசிரியரான தேவுபந்தி, ஹகீமுல் உம்மத்து என்று அழைக்கப்படும் அஷ்றபு அலி தானவியைத்தான் அந்த ஆசைவிட்டதா? அவரின் முரிதுகளிலொருவர் கனவிலும், அப்பால் விழிப்பிலும்

لا الہ الا اللہ اشرف علی رسول اللہ اللہم صل علی سیدنا ونبینا ومولینا اشرف علی

என்று பலமுறை ஓதிக்கொண்டிருந்ததைப் பற்றி குரு தானவிக்கு எழுதிக் கேட்க ''உம்முடைய இச்சம்பவத்தில் நன்மாராயமிருக்கிறது. நீவிர் எவர் பக்கம் மீளுகிறீரோ அவர்(தானவி) மார்க்கத்தைத் தொடர்ந்தவராக இருக்கும்''
என்று மாத்திரமே பதில் எழுதி சீடரின் அச்செய்கையை சரிகண்டாரா இல்லையா?

இதற்காகத்தான் இவர்களின் ஆசிரியப் பெரியார் முஹம்மது காசிம் நானுத்தவி என்பவர் நபிகள் நாயகம் அவர்களை (காத்த முன்னபிய்யீன்) அவர்களுக்குப் பின்பு வேறு நபி இல்லை. அவர்களோடு நபித்துவத்தின் வாசல் அடைபட்டுவிட்டது என்பதற்கு மாற்றமாக அவர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பின்பு வேறு நபி வந்தாலுங்கூட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு வித்தியாசம் ஏற்படாது என்று சொல்லி நபித்துவத்தின் கதவைத் திறந்துவைத்தார் போலும். நவூது பில்லாஹி மின்ஹா نعوذ باللہ منہا

சகோதரர்களே பாருங்கள்.

றஷீது அஹ்மது கொங்கோஹியின் பதாவா ரஷீதிய்யா 237-வது பக்கத்தில் பின்வருமாறு வரையப்பட்டுள்ளது.

سوال محمد ابن عبدالوہاب نجدی کیسے شخص تھے الجواب محمد بن عبدالوہاب کو لوگ وہابی کہتے ہیں وہ اچھا آدمی تھا سنا ہے کہ مذہب حنبلی رکھتا تھا اور عامل بالحدیث تھا بدعت وشرک سے روکتا تھا مگر تشدد اس کے مزاج میں تھی۔

**கேள்வி**: அப்துல் வஹ்ஹாபு நஜ்தி எத்தகைய மனிதர்?

**விடை**:

முஹம்மது இபுனு அப்துல்வஹ்ஹாபை ஜனங்கள் வஹ்ஹாபி என்று சொல்வார்கள் அவர் நல்ல மனிதர் ஹம்பலி மதுஹபைப் பின்பற்றியவர் என்று கேள்விப்படுகிறேன். ஹதீதின் பிரகாரம் அவர் அமல் செய்கிறவர். பிது அத்தையும் ஷிர்க்கையும் தடுத்துக்கொண்டிருந்தார். ஆனாலும் அவரின் சுபாவத்தில் தீவிரமும் கடுமையும் உண்டு. அல்லாஹ் மிக அறிந்தவன். மேலும் அந்த கிதாபில் 235-ம் பக்கத்தில் வருகிறது.

سولہواں سوال وہابی کون لوگ ہیں اور ابن عبدالوہاب نجدی کا کیا عقیدہ تھا اور وہ کیسا شخص تھا

اور اہل نجد کے عقائد میں اور سنی حنفیوں کے عقائد میں کیا فرق ہے۔

''**16வது கேள்வி**:- வஹ்ஹாபி என்பவர்கள் எந்த ஜனங்கள்? இபுனு அப்துல் வஹ்ஹாபு நஜ்தியுடைய கொள்கை என்ன? அவர் எத்தகைய மனிதர்? நஜ்திகாரர்களுக்கும், ஹனபிகளுக்கும் கொள்கையில் என்ன வித்தியாசம்?''

الجواب محمد بن عبدالوہاب کے مقتدیوں کو وہابی کہتے ہیں ان کے عقائد عمدہ تھے اور مذہب ان کا حنبلی

تھا البتہ انکے مزاج میں شدت تھی مگر وہ اور انکے مقتدی اچھے ہیں مگر ہاں جو حد سے بڑھ گئے ہیں ان میں

فساد آگیا ہے اور عقائد سب کے متحد ہیں اعمال میں فرق حنفی شافعی مالکی حنبلی کا ہے۔

''**பதில்**: முஹம்மதிபுனு அப்துல்வஹ்ஹாபை துயர்ந்தவர்களுக்கு வஹ்ஹாபி என்று சொல்வார்கள். அவரின் கொள்கை நல்லது. அவரின் மதுஹபு ஹம்பலியாகும் நிச்சயமாக அவரின் சுபாவத்தில் கடுமை இருந்தது. ஆனாலும் அவரும் அவரை துயர்ந்தவர்களும் நல்லவர்கள் மெய்தான் எவர்கள் எல்லையை மீறினார்களோ அவர்களில் பஸாதுவந்துவிட்டது. எல்லாவர்களும் கொள்கையில் ஒற்றுமையானவர்களேயாகும். செயலில் வித்தியாசம் ஹனபி, ஷாபிஈ, மாலிகி, ஹம்பலிக்குள்ளது போன்ற வித்தியாசமேதான்.''

மேலும் அந்த கிதாபின் 41-வது பக்கத்தில் வருகிறது

اس کا یعنی تقویۃ الایمان کا رکھنا اور پڑھنا اور عمل کرنا عین اسلام اور موجب اجر ہے

''அதை (தக்வியத்துல் ஈமானை) வைத்திருப்பதும், அதைப்படிப்பதும் அதன்படி அமல் செய்வதும் இஸ்லாம் (ஐனுல் இஸ்லாம்) தானாகவேயிருக்கும்''

இன்னும் அதே கிதாபு 41-வது பக்கத்தில் வருகிறது.

‘‘**விடை**:-தக்வியத்துல் ஈமான் எனும் நூல் ரொம்ப விஷேமான உண்மையான நூலாகும். மேலும் ஈமானை சரிபடுத்த கூடியதும் ஈமானுக்கு வலுவை கொடுக்க கூடியதுமாகும். குர்ஆன் ஹதீதின் கருத்துக்கள் பூராவும் அதில் இருக்கிறது.’’

மேலும் அதே கிதாபு 42-வது பக்கத்தில் வருகிறது.

‘‘தக்வியத்துல் ஈமான் என்னும் நூல் ரொம்ப நல்ல நூல் ஷிருக்கையும், பிதுஅத்தையும் மறுப்பதில் நிகரில்லாதது அதன் ஆதாரங்கள் முற்றிலும் கிதாபு ஹதீதைக் கொண்டுள்ளவை களேயாகும். அதை வைத்து இருப்பதும் அதை படிப்பதும் அதன்படி அமல் செய்வதும் இஸ்லாம்தானாகும். மேலும் நற்கூலி கிடைக்க காரணமுமாகும். அதை வைத்து இருப்பது குபுர் என்று எவன் சொல்வானோ அவன் தானே காபிர் அல்லது பிதுஅத்துகார பாஸிக்காக இருக்கும்.’’

மேலும் அதே பத்வாக் கிதாபு 42-வது பக்கக்தில் வருகிறது.

ان اولیاءہ الا المتقون کوئی نہیں اولیاء حق تعالیٰ کا سوائے متقیوں کے بموجب اس
آیت کے مولوی اسماعیل دہلوی ولی ہے۔

‘‘முத்தகீன்களைத் தவிர வேறு யாரும் அல்லாஹ்வுடைய அவ்லியாக்களாக இல்லை என்ற ஆயத்தின் பிரகாரம் மௌலவி இஸ்மாயில் திஹ்லவி ஒலியாக இருக்கிறார்’’.

மௌலவி இல்யாஸின் மல்பூளாத்து 114-வது பக்கத்தில் காணப்படுகிறது.

فرمایا حضرت گنگوہی اس دور کے قطب ارشاد اور مجدّد تھے

‘‘ஹளரத்து கொங்கோஹி இக்காலத்தில் நேர்வழிகாட்டும் குத்பாகவும், முஜத்திதியாகவும் இருக்கும் என்று இல் யாஸ் சொன்னார்.’’

அருமைச் சகோதரர்களே!

உண்மை விசுவாசிகளான முஸ்லிம்களை எல்லாம் காபிர்கள் முஷ்ரிக்குகள் என்று சொல்லி அநியாயமாக பெண்டு பிள்ளைகள் வியாதியஸ்தர்கள், வயோதிகர்கள் என்றும் பாராது பரிசுத்த ஹறம் ஷரீபில் அபயம் தேடி ஒளிந்தவர்களையும்கூட ஈவிரக்கமின்றி ஹறம் ஷரீபின் கண்ணியத்தையும் நினைத்துப் பார்க்காமல் புனித மக்காவிலும் மதீனாவிலும் உள்ள முஸ்லிம்களை எல்லாம் கொன்று குவித்த மாபாவி இபுனு அப்துல் வஹ்ஹாபையும் இந்தியாவில் அந்த வஹ்ஹாபிய்யஸ்சத்தைப் பரப்பிய சண்டாளன் இஸ்மாயில் திஹ்லவியையும் தான் மௌலவி றஷீது அஹ்மது கொங் கோஹி வாயாரப் புகழ்கிறார். அச்சண்டாளனுடைய நஜீஸான குப்ரிய்யத்துக்களால் நிறப்பப்பட்ட ஆபாசக் களஞ்சியமான தக்வியத்துல் ஈமான் என்ற நூலைத்தான் வீட்டில் வைப்பதும் அதைப் படிப்பதும் அதன் படி அமல் செய்வதும் இஸ்லாம் தானாகும் ஐனுல் இஸ்லாமாகும் என்றும் இவர் சொல்கிறார். இந்த றஷீது அஹ்மது கொங்கோஹிதான் தப்லீகின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் பிரதான ஆசிரியரும் ஞான குருவுமாவார். இவரைத்தான் இல்யாஸ்குத்பு என்றும் முஜத்திது என்றும் சொல்கிறார். நவூதுபில்லாஹி மின்ஹா

சகோதரர்களே! இவ்வுண்மையை நன்கு சிந்தித்துப் பாருங்கள். இல்யாஸுடைய தப்லீகு இயக் கத்தை விட்டும் விலகிவிடுங்கள். எவர் எப்படி இருந்தாலும் நாங்கள் நன்றாகத்தானே இருக்கிறோம். நா ங்கள் ஸுன்னத்து ஜமாஅத்துக் கொள்கைகளுக்கு முறணாக நடக்கவில்லையே என்று வெறும் போக் குச் சொல்ல முற்படாதீர்கள். ஏனெனில் ஒரு இயக்கத்தின் ஸ்தாபகரின்(லீடரின்) கொள்கை அவரால் தே ாற்றுவிக்கப்பட்ட இயக்கத்திற்கு ஆன்மாவைப் போன்றதாகும். அவ்வியக்கத்தில் சேர்ந்தவர்களிலெல் லாம் அது ஊடுருவிச் செல்லவே செய்யும் என்ற உண்மை புத்திமான்களுக்கு மறைந்தல்ல. இயக்க த்தில் சேர்ந்தவர்களெல்லாம் கண்டிப்பாக அது ஊடுருவிப் பாய்ந்து சென்று அவர்களை எல்லாம்இயக் கத் தலைமைக் கர்த்தாவின் கொள்கையுடையவர்களாகவே ஆக்கிவிடும். அதற்காகவே தான் நாயக ம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

اياكم واياهم الخ

''கெட்ட கொள்கைகாரர்களுடன் சேராதீர்கள் அவர்களை உங்களிடம் வரவும் விடாதீர்கள் அப்படிய ானால்தான் உங்களை அவர்கள் வழிகெடுக்கவோ பித்னாவிலாக்கவோ முடியாது.'' என்று உபதே சித்துள்ளார்கள்.

ஆகவே அருமைச் சகோதரர்களே!

என்றென்றும் நம்மவரின் பேரிலும் கிருபையும் உள்ளன்பும் உள்ள رؤف رحيم றஊபுர் றஹீமான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உபதேசத்தையுணர் ந்து வஹ்ஹாபியப் பிரச்சாரத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ள இந்த இல்யாஸித் தப்லீகு ஜமாஅத் தை விட்டும் விலகிவிடுங்கள். அவர்களின் தொடர்பை நீக்கி விடுங்கள். அவர்களோடு சேராதீர்கள்.

சகல கெட்ட கொள்கைகாரர்களின் சகவாசத்தை விட்டும் எல்லா முஸ்லிம்களையும் அல்லாஹு த ஆலா காப்பாற்றிக் கொள்வானாக. ஸுன்னத்து ஜமா அத்துக்களான உத்தமக் கூட்டத்தார்களிலேயே நம்மனைவரையும் ஈமான் உறுதியுடன் ஸ்திரம் பெற்று நிலைக்க செய்து அந்த உறுதியான ஈமானுடே னயே உண்மை முஸ்லிம்களாகவே நம்மைமவுத்தாக்குவானாக. அல்லாஹ்றஸூலின் அருளன்பு க்குப் பாத்தியமான சான்றோர்களின் ஜெயசீலர்களின் கூட்டத்திலே யே நம்மை எழுப்பியருள்வானக ஆ மீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

---

**தப்லீகு ஜமாஅத்துடைய மூல (அசல்) நோக்கத்தை மறைத்துக் கொள்ளவேண்டும் என் று போதனை**

*எந்தக் கூட்டமும் தங்களின் கொள்கை, நோக்கங்களை மறைத்து வெளியில் க ாட்டாமலிருப்பதானது அக்கூட்டத்தின் கொள்கை சரியில்லை என்பதற்குத் தெளிவ ானதோர் ஆதாரமாகும். நாம் இந்த அடிப்படையில் தப்லீகு ஜமாஅத்தின் வேலைக ளைப் பார்ப்போமானால் நன்கு தெளிவாக புலப்படுகிறது. அக்கூட்டத்தார்கள் அன் னியவிடத்திற்குப் போவார்களேயானால் தங்களுடைய குறிப்பான மூலக்கொள் கை களையும், நோக்கங்களையும் கொஞ்சமும் வெளிப்படுத்துகி றார்களில்லை. மேலும் ஸுன்னி (ஸுன்னத்து ஜமா அத்துக்காரர்)கள் (முஸ்தஹப்பு) ஸுன்னத்து(ஜ ாயிஸ்)ஆகும். என்று கண்டதும் ஸுன்னிகளுக்கும் வஹ்ஹாபிகளுக்கும் இடையில்*

*பிரித்தறிய காரணமுமாகியதும் வஹ்ஹாபிகள் அதை (ஹறாம்) ஆகாது, விலக்கப்பட்டது (பிதுஅத்து) நூதன அனுஷ்டானம் என்று பகிரங்கமாகச் சொன்னதுமான அமல்களிலும் இவர்கள் சில சமயங்களில் சேர்ந்தும் கொள்கிறார்கள்.*

*மேலும் தாங்கள் ஆகாது ஹறாம் என்று நம்பியிருக்கும்படியான பாத்திஹா, மவ்லிது ஷரீபு போன்றவைகளின் விருந்துச் சாப்பாட்டையும்*

*இவர்கள் சமயம் பார்த்து அருந்தவும் செய்கிறார்கள். பொதுமக்களைத் தங்கள் பக்கம் திருப்பித் தங்களோடு மருகுதலாக்குவதில் சித்தியடைந்த பின்பு கொஞ்சங் கொஞ்சமாகத் தங்களுடைய குறிப்பான கொள்கை நோக்கத்தின் குடிப்பை அவர்களுக்குக் குடிப்பாட்டி மயக்கிவிடுகிறார்கள். பின்னால் இவர்களின் கொள்கையைப் பற்றி யோசிக்கவும் சிந்திக்கவுங்கூட அவர்களுக்கு உணர்ச்சியும் வருகிறதில்லை.*

*நாம் இது சம்பந்தமாக தப்லீகு ஜமாஅத்தின் குறிப்பான (முபல்கீன்) பிரசங்கிகளுடைய நூற்களைப் பார்க்கும்போது தப்லீகு ஜமாஅத்தில் தங்களின் கொள்கைகளை மறைத்துக் கொள்வதும், வெளிப்படுத்தாதிருப்பதும் அவர்களில் முறையல்ல என்கிலும் அவர்களுக்கு அக்கூட்டத்தின் ஸ்தாபகரிடமிருந்தே அதன் யதார்த்தக் கொள்கையை மறைக்க வேண்டுமென்று கற்பிக்கப்படுவதாகவே தெரிகிறது.*

*அவர்கள் எங்கள் நோக்கம் கலிமா தொழுகை இவற்றைச் சரியாகச் செய்யும்படி சொல்வது தான் இதுவே தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் போதனையுமாகும் என்று சொல்கிறார்கள்.ஆகையால் உண்மைநிலையைப் பொதுமக்களுக்கு விபரித்துக்காட்டப்படுகிறது.அந்த ஜமாஅத்தின் தலைவராகிய மௌலவி இல்யாஸ் எழுதியிருப்பதைக் கவனியுங்கள்.*

*மௌலவி அபுல் ஹஸன் நத்வியால் திரட்டித் தொகுக்கப்பட்ட மௌலவி இல்யாஸின் கடிதங்கள் என்ற நூலின் 113-வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது. மௌலவி இல்யாஸ் எழுதுகிறார்.*

تمام ملک کے جامعوں اور مجامع میں اس مضمون کی اشاعت کا اہتمام کر لیا جائے کہ جو قوم کلمہ طیبہ
اور نماز کے اندر کی چیزوں کی تصحیح اور کلمہ شہادت کے مضمون پر اب تک پوری طرح مطلع نہ ہوئی جو
اسلام کی بنیادی چیز ہے تو بنیادی چیز کو چھوڑ کر اوپر کی چیزوں میں مشغول ہونا سخت غلطی ہے

*“எந்த ஜனங்கள் இஸ்லாத்தின் அடிதளமாக உள்ள கருமங்களான கலீமாதையிபா , தொழுகை இவைகளுக்குள்ளிருக்கும் அம்சங்களையும் கருத்துக்களையும் கலிமா ஷஹாதத்தின் பொருளை யும் எதுவரையிலும் நல்லவிதமாகத் தெரிந்து கொள்ளவில்லையோ அவர்கள் இஸ்லாத்தின் அஸ்திவாரமாகிய இவ்விஷயங்களைவிட்டு விட்டு இதற்கு மேற்பட்ட விஷயங்களின் பறாக்காகிறது.சுத்த தவறாகும் என்ற கருத்தை எல்லாத் தேசங்களின் பள்ளிவாசல்களிலும் கூட்டங்களிலும் பிரச்சாரம் செய்வதிலேயே கவனமாக இருக்க வேண்டும்.”*

*இந்த வாசகத்தினால் தெரிய வருகிறது. தப்லீகு ஜமாஅத்தின் வெளிரங்கமான விளம்பரங்களும் அறிக்கைகளும் எல்லாவற்றிற்கும் முதன்முதலாக கலிமாவும் தொழுகையும் தான். அவைகளைச் சரிவரச் செய்ய வைப்பது தான் எங்களுடைய நோக்கமுமாம் என்பதாகும்.*

*இதே வார்த்தைதான் தப்லீகு ஜமாஅத்தின் பொதுமக்கள் வாயிலும் வருகிறது. மேலும் எங்களுக்கு யாருடைய கொள்கைகளையும் பற்றி வாதிப்பது நோக்கமில்லை; நாங்கள் கலிமா தொழுகையைச் சரியாக நடத்த வேண்டும் என்று மாத்திரமே நாடுகிறோம் என்று சொல்கிறார்கள் ஆனால் இது வெறும் ஏமாற்றும் வேலையாகும். அவர்களுடைய கருத்து, நோக்க வேறு பெரிய விசாலமான திட்டமாகும்.*

*மௌலவி மன்ளூர் நுஃமானி என்பவரால் திரட்டப் பட்ட "மௌலவி இல்யாஸின் வார்த்தைகள்" என்ற நூலின் 21-வது பக்கத்தை கவனியுங்கள்.*

ہماری جماعت کا اصل مقصد یہ ہے کہ مسلمانوں کو حضور صلی اللہ علیہ وسلم کا لایا ہوا دین پورا پورا سکھا دیں
یہ تو ہمارا اصل مقصد ہے رہی قافلوں کی چلت پھرت تو یہ اس مقصد کے لئے ابتدائی ذریعہ ہے اور کلمہ و نماز کی
تلقین گویا ہمارے پورے نصاب کی الف بے تے ہے

*"நம்முடைய இந்த இயக்கத்தின் அசல் நோக்கம் நபியவர்கள் கொண்டு வந்தது அத்தனையையும் கற்பிக்கிறதாக இருக்கும் இப்படிப் போவதும் திரிவதும் இன்னமும் கூட்டங் கூட்டமாக தப்லீகு கஷ்த்து செய்வதும் இவையெல்லாம் அந்த நோக்கத்திற்கு ஆரம்ப வழியாகும். மேலும் கலிமா தொழுகையைப் படித்துக்கொடுப்பதும் போதிப்பதும் நம்முடைய பூரணத்திட்டத்திற்கு அலிப், பே தே போன்றதாகும்".*

*மேலும் அந்த நூலின் 65-வது பக்கத்தைப் பாருங்கள்.*

ہماری اس تحریک کا اصل مقصد اس وقت بس دین کی طلب و قدر پیدا کرنے کی کوشش کرنا ہے نہ کہ صرف
کلمہ اور نماز وغیرہ کی تعلیم و تلقین۔

*"நம்முடைய இந்த இயக்கத்தின் அசல் நோக்கம் இது சமயம்தீனுடைய தேட்டத்தையும், ஆர்வத்தையும் உண்டுபண்ணிக் கொள்வதற்காக முயற்சி செய்வதாகும். கலிமா தொழுகை மற்றவைகளைக் கற்றுக்கொடுப்பது சரியாகச் செய்விக்கிறது மாத்திரமில்லை."*

*சந்தேகமில்லாமல் வஹ்ஹாபியாக்களிடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்தது அடங்கலும் என்றதில் அவர்களுடைய கொள்கையும்* (جمیع ما جاء به النبی)

இருக்கிறது. அவர்களிடத்தில் (தீன்) மார்க்கம் என்பது அவர்களுடைய கொள்கைதான். மேலும் அவர்களிடத்தில் பொதுமக்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டும்.

என்பதன் கருத்தும் அவர்களைத் தங்களுடைய (வஹ்ஹாபிய்யா) வர்ணத்தில் ஆக்கவேண்டும் என்பதுவேயாகும் ஏனென்றால் பொதுமக்கள் எதுவரையிலும் தங்களுடைய (வஹ்ஹாபிய்யா) கொள்கையில் நம்பிக்கையுடையவர்களாக ஆகவில்லையோ அதுவரையிலும் அவர்கள் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள் என்பதுவும் அவர்கள் முடிவாகும்.

அப்பால், மௌலவி அபுல்ஹஸன் நத்வியால் திரட்டப்பட்ட மௌலவி இல்யாஸ் எழுதிய கடிதங்கள் என்ற நூலின் 143-வது பக்கத்தைப் பாருங்கள்.

بہرکیف تقریر و تحریر میں نہ ایسے الفاظ نکلیں جن سے اندیشہ و خطرہ ہو فساد کا اور نہ ایسے خیالات کا اظہار

ہو جن سے بدگمانی اور بدظنی بڑھے۔

“எப்படியானாலும் பிரசங்கங்களிலோ எழுத்துக்களிலோ பஸாது உண்டாகுமென்று சந்தேகத்திற்குரிய வார்த்தைகள் வரக்கூடாது. மேலும் தீய எண்ணமும் தப்பபிப்பிராயமும் வளரக் கூடிய கொள்கைகளையும் வெளிப்படுத்தக்கூடாது.”

இந்த வாசகம் தெளிவாக இருக்கிறது. ஒவ்வொரு புத்திமானும் சிந்தித்துப் பார்க்கவும் எந்தக் கொள்கைகளை வெளிப்படுத்தக் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறது? வெளிப்படுத்துவதனால் பொது மக்களிடத்தில் கெட்ட எண்ணமும் தப்பபிப்பிராயமும் உண்டாகும் என்று சந்தேகிக்கக் கூடிய அந்தக் கொள்கைகள் தான் என்ன என்று சித்திக்கவும்.

முஸ்லிம்களே! பாருங்கள்! இதுதான் ஏமாற்றுப் போதனை கருத்தாவது:-
நீங்கள் நம்முடைய குறிப்பான கொள்கைகளைப் பொதுமக்களிடத்தில் ஆரம்பத்திலேயே வெளிப்டுத்து வீர்களேயானால் ஜனங்கள் சந்தேகப்பட்டு விடுவார்கள். அதனால் வஹ்ஹாபிய்யத்தின் கோட்டை இடிந்து போய்விடும். ஆகையால் நம்முடைய கொள்கையை ஆரம்பத்தில் வெளிப்படுத்துவது சரியல்ல என்பதே அவர்களுடைய வார்த்தையின் கருத்தாகும்.

## தப்லீகு ஜமாஅத்தில் சேருவது கொடிய அபாயகரமாகும்

ஸுன்னத்து ஜமாஅத்துச் சகோதரர்கள் மிகவும் எச்சரிக்கையுடனும் ஜாக்கிரதையுடனும் இருக்கவேண்டும். நம்முடைய தீனுல் இஸ்லாமின் நற்பாக்கியத்தைப் பற்றிக் கவனமாக இருந்து கொள்ளவேண்டும்.

தப்லீகு ஜமா அத்தில் சேருவது பொதுமக்களுக்குப் பெரும் தங்கடமும், அபாயகரமுமாகும். இந்தக் கூட்டத்தார் புதுப்புது முறைகளைக் கொண்டு பொதுமக்களை வ

ஹ்ஹாபிய்யாக் கொள் கையின் வேட்டைப் பொருளாக ஆக்குவதற்காகத் தெண்டிப்பு, பிரயாசையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தார்களோடு சேர்ந்த பிற்பாடு ஸுன்னத்து ஜமா அத்தின் கொள்கைகள் எஞ்சி இருக்காது என்றே பயப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே மார்க்கத்தின் மஸ்அலாக்களையும் மதுஹபின் கொள்கைகளின் ஆதாரங்களையும் அறியாத - குர்ஆன் ஹதீதை விளங்கமுடியாத - (நாஸிக்) மாற்று வசனம். (மன்ஸூகு) மாற்றப்பட்ட வசனம், (ஸஹீஹு) ஆதாரம் பலமான ஹதீது (ளயீபு) ஆதாரம் பலவீனமான ஹதீது இவைகளுக்கிடையில் விபரம் அறிய முடியாத-அறபிப் பாஷை தனக்குத் தெரியாமலும் மற்றவர்கள் பொருள் சொல்லிக்காட்டவேண்டிய தேவையுடையவரும், மேலும் மொழிபெயர்ப்பாளர் சரியாகத்தான் மொழிபெயர்த்தாரா அல்லது தவறாக மொழி பெயர்த் திருக்கிறாரா என்று தெரிந்து கொள்ளமுடியாத இத்தன்மையிலுள்ளவர்களான பொதுமக்கள் வஹ்ஹாபிய்யாக் கூட்டங்களுடன் இரவு பகலாக சகவாசத் திலிருப்பார்களேயானால், வஹ்ஹாபிய்யாக்களின் விஷக் கிருமிகள் நிறைந்த அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட பிரசுரங்களையும் கட்டுரைகளையும் வாசித்து வருவார் களேயானால், அவர்கள் விவரித்த கருத்துகளுக்கு நல்லெண்ணத்தோடு தங்கள் மனதில் இடங்கொடுப்பார் களேயானால் அவர்களுடைய நூல்களைப் பார்ப்பார்களேயானால் அவர்களின் பிரசங்கங்களைக் கேட்பார்களேயானால் சந்தேகமில்லாது வஹ்ஹாபியத்தின் அந்த நச்சுக் கிருமிகள் அவற்றின் விஷத் தன்மையை இவர்களின் இருதயங்களிலும் ஏற்றிக் கெடுத்துப் பரப்பிவிடும். இவர்கள் சிறுகச் சிறுக வஹ்ஹாபிய்யாக் கொள்கைகளுக்கு வேட்டைகளாக ஆகிவிடுவார்கள்.

என்னுடைய இந்தக் கருத்தை மெய்ப்பிக்க தப்லீகு ஜமாஅத்தில் சேர்ந்தவர்களைக் கொஞ்சம் கவனித்து நோட்டமிட்டுப்பாருங்கள். இவர்கள் முதலில் சுன்னத்து ஜமாஅத்தார்களாகத் தான் இருந்தார்கள். இவர்களுடைய கொள்கையும் ஸுன்னத்து ஜமாஅத்தின் கொள்கையாகத்தான் இருந்தது. இவர்களின் பழக்க வழக்கங்கள் எல்லாம் ஸுன்னத்து ஜமாஅத்தார்களின் பழக்க வழக்கமாகவே தானிருந்தன. தப்லீகு ஜமாஅத்தில் சேர்ந்த பிறகு இவர்களின் எண்ணங்கள் மாறிவிட்டன. கொள்கைகள் பேதகப்பட்டுவிட்டன. இவர்கள் தப்லீகு ஜமாஅத்தில் சேருவதற்கு முன்பு ஸுன்னத்து ஜமாஅத்துடைய உலமாக்களின் கிதாபுகளை பார்த்துக் கொண்டிருந்தார்கள்; அவர்களின் பிரசங்கங்களை ஆசையோடும் ஆவலோடும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் மஸ்அலாக்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தப்லீகு ஜமாஅத்தில் சேர்ந்தபின்பு இவர்கள் ஸுன்னத்து ஜமாஅத்துடைய உலமாக்களின் பிரசங்கங்களைக் கேட்கிறார்களுமில்லை. மேலும் தங்களுடைய பழைய (ஸுன்னத்து ஜமாஅத்து) கொள்கையின் மீது வெறுப்பாகவும் வெருட்சியாகவும் இருக்கிறார்கள். தங்களுடைய மூதாதைகளை (ஸுன்னத்து ஜமாஅத்துக்காரர்களை) பிது அத்துக்காரர்கள், முஷ்ரிக்குகள் என்று உரைக்கவும் கூடத் தயாராக இருக்கிறார்கள்.

ஆகவே இந்த நிலைமையைப் பார்க்கும் போது இந்தத் தப்லீகு ஜமாஅத்தில் சேருவது அபாயகரமானது என்றே ஒவ்வொரு ஸுன்னத்து ஜமாஅத்து விசுவாசியும் முடிவுக்கு வரவேண்டியவராக இருக்கிறார்.

**தப்லீகு ஜமாஅத்தை விட்டு விலகி இருக்கவேண்டும்**

உலக இரட்சகர் ஸெய்யிது ஆலம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கெட்ட கூட்டத்தினரையும் வழிகேடான வர்க்கத்தினரையும் விட்டுத் தூரவிலகி இருக்கும்படி சொல்லி இருக்கிறார்கள். அப்படி விலகி இருப்பதன் மூலமாகத்தான் நம்முடைய ஈமானைப் பாதுகாத்துக்கொள்ளவும் தீனுல் இஸ்லாமைப் பேணிக் கொள்ளவும் முடியும்.

இரு ஸஹீஹுகளான புகாரீ ஷரீபிலும் முஸ்லிம் ஷரீபிலும் வந்துள்ளது.

ان النبي صلى الله عليه وسلم قال فاياكم واياهم لا يضلونكم ولا يفتنونكم (رواه مسلم)

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளம்பற்றி யுள்ளார்கள். "நீங்கள் அந்த வழிகெட்ட கூட்டங்களை விட்டும் தூர விலகி இருங்கள்; அவர்களை உங்களிடம் வரவிடாதீர்கள். அப்படியானால் அவர்கள் உங்களை வழிகெடுக்கவோ உங்களை பித்னாவில் ஆக்கவோமுடியாது."

இந்த ஹதீதின் கருத்தாவது:கெட்ட கூட்டங்கள், தீய கொள்கைக்காரர்கள் உடைய தீங்கு பாதிக்காமல் நீங்கள் உங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் உங்களை அவர்களின் சகவாசத்தை விட்டு அகற்றித் தடுத்துக்கொள்ளுங்கள் என்பதாகும்.

இரண்டாவதாக மற்றொரு ஹதீதையும் பாருங்கள்.

عن ابي موسى الاشعري رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال انما مثل الجليس الصالح
وجليس السوء كحامل المسك ونافخ الكير فحامل المسك اما ان يحذيك واما ان تبتاع منه واما ان تجد
منه ريحا طيبة ونافخ الكير اما ان يحرق ثيابك واما ان تجد منه ريحا خبيثة (بخاري ومسلم)

அபூமூஸல் அஷ்அரிய்யி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.

நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள்:-

நல்ல சினேகத்திற்கும் கெட்ட சினேகத்திற்கும் உவமையாகிறது கஸ்தூரி வைத்திருப்பவனையும் கொல்லன் உலை ஊதுபவனையும் போன்றாகும்.

கஸ்தூரியை வைத்திருப்பவன் ஒன்று உனக்கு கஸ்தூரியைத் தருவான். அல்லது நீ அதை அவனிடத்தில் (கிரயத்திற்கு) வாங்குவாய் இல்லாவிட்டாலும் கஸ்தூரியின் நல்ல வாடையையாவது பெற்றுக்கொள்வாய். கொல்லன் உலையை ஊதுபவனோ உன்னுடை

டய ஆடையைக் கரித்துப் போடுவான். இல்லாவிடில் அதிலிருந்து துர்வாடையையா வது பெற்றுக்கொள்வாய்."

இந்த ஹதீதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓர் உவ மானம் கூறி உபதேசம் செய்திருக்கிறார்கள். நல்ல குணம் நல்ல கொள்கையுடையவ ர்களின் நேசம், சகவாசம் மனிதனுக்கு எந்த விதத்திலும் பிரயோசனம் செய்யக்கூடிய தாக இருக்கிறதோ அதேபோல கெட்டவர்களின் கெட்ட கொள்கையுடையவர்களு டைய நேசமும், சகவாசமும் மனிதனுக்கு எந்த வகையிலும் தங்கடம் செய்யக்கூடிய தாகவே இருக்குமென்பதைத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

மேலும், ஸஹீஹான ஹதீதுகளைப் பாருங்கள்:-

عن انس رضى الله عنه قال قال رسول الله صلى الله عليه وسلم مثل جليس

السوء كمثل صاحب الكير ان لم يصبك من سواده اصابك من دخانه (اخرجه ابوداؤد)

"அனஸ் ரலியல்லாஹு அன்ஹு ரிவாயத்துச் செய்துள்ளார்கள்:-
நாயகம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமா னார்கள்: கெட்டவனோடு சிநேகம் வைப்பவனாகிறவன் கொல்லனுடைய உலைய ண்டையில் இருப்பவனைப் போலாவான். அதன் கரி உன்னைத் தொடாது போனா லும் அதன் புகையாவது உன்னைத் தொடும்."

இந்த ஹதீதை அபூதாவூது நஸஈ ரலியல்லாஹி அன்ஹு ரிவாயத்துச் செய்திருக் கிறார்கள். இதன் கருத்து கெட்டவருடைய சகவாசத்தாலும்,வழிகேடருடைய உற வாலும் மனிதன் வழிகெட்டுப் போகாவிடினும் வழிகேட்டின் குணப்பாட்டையாவ து அவசியம் ஏற்றுக்கொள்ளவும், கொள்கையினால் கெட்டுப்போகவும் நேரும்.

முஸ்லிம்களே! ஸெய்யிது ஆலம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்க ளுடைய குறிப்பு (இஷாறா)க்களையும் உபதேசங்களையும் எடுத்துரைத்தோம். அ வற்றின் கருத்து: கெட்ட கொள்கைக்காரர்களை விட்டு அகன்று தூரமாகுங்கள் - அ வர்களுடைய சிநேகிதத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அவர்களுடைய கூட்டங்க ளில் கலந்து கொள்ளாதீர்கள் அப்படியானால் அவர்களுடைய வழிகேடு உங்களைப் பாதிக்காது என்பதாகும்.*

١. روى الطبراني في المعجم الكبير وابو نعيم في الحلية عن معاذ رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم من مشى الى صاحب بدعة ليوقره فقد اعان على هدم الاسلام.

٢. وابن ماجه عن جابر رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم وان لقيتموهم فلا تسلموا عليهم.

٣. وابوداؤد عن ابن عمر رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم وان مرضوا فلا تعودوهم وان ماتوا فلا تشهدوهم.

* 1. ‘‘கெட்ட கொள்கைக்காரர்களை சங்கை செய்வதற்காக அவர்களோடு நடப்பவன் நிச்சயமாக இஸ்லாம் மார்க்கத்தை உடைத்துத் தகர்த்துப் போடுவதற்கு உதவி செய்தவனாகிறான்’’. என்றும்
2.‘‘அவர்களைக் (கெட்ட கொள்கைக்காரர்களை) சந்திப்பீர்களேயானால் அவர்களுக்கு ஸலாம் சொல்லாதீர்கள்’’என்றும்,
3. ‘‘அவர்கள் வியாதியஸ்தர்களாக இருந்தால் நோய்விசாரிக்கப் போகாதீர்கள், அவர்கள் மரணித்துவிட்டால் அவர்களுடைய ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொள்ளாதீர்கள்’’ என்றும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்துள்ளார்கள்.

‘‘ஹகாயிகுத்தன்ஸீல்’’ என்னும் கிதாபில் ஸஹ்லு இபுனு அப்துல்லாஹித் துஸ்த்தரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்வதாக ‘‘தப்ஸீ அஸீஸீ’’ யில் வந்துள்ளது.

ஸஹ்லு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்களாம்.;-

من صحح إيمانه وأخلص توحيده فإنه لا يؤانس إلى مبتدع ولا يجالسه ولا يؤاكله ولا يشاربه ويظهر له من نفسه
العداوة ومن داهن مبتدعا سلبه الله تعالى حلاوة الإيمان ومن تحبب إلى مبتدع نزع نور الإيمان من قلبه.

‘‘ஈமான் சரியாகத் தரிபட்டிருக்கவும், தவ்ஹீது கலப்பற்றதாக (இக்லாஸாக) இருக்கவும் விரும்புகிறவன் (பிது அத்து) கொள்கைக்காரர்களோடு மனமருவுதலாக இருக்கவோ, அவர்களோடு நெருங்கிப் பழகி இருக்கவோ அவர்களுடன் கூடிப் புசிக்கவோ, குடிக்கவோ மாட்டான். அவர்களோடு தனது வெறுப்பைக் காட்டியே நடக்கவேண்டும் எவனாகிலும் பிதுஅத்துக்காரர்களோடு இன்புறப் பேசி ஒப்பி நடப்பானேயானால் அல்லாஹு தஆலா அவனை விட்டும் ஈமானுடைய இன்பத்தை உரிந்துவிடுவான். எவனாகிலும் பிது அத்துக்காரர்களை உகந்து நேசித்திருப்பானேயானால் அவனுடைய இருதயத்தை (கல்பை) விட்டும் ஈமானுடைய ஒளிவைப் பிடுங்கப்பட்டுவிடும்.’’

‘‘குன்யத்துத் தாலிபீன்’’ என்ற கிதாபில் வந்துள்ளது. புளைல் இபுனு இயாளு ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்:- ‘‘எவனாகிலும் பிது அத்துக்காரனை உகந்து நேசித்தால் அல்லாஹ் தஆலா அவனுடைய(நல்ல) அமலை அழித்துவிடுவான். அவனுடைய கல்பை விட்டும் ஈமானுடைய பிரகாசத்தைப் போக்கப்பட்டுவிடும். எவனாகிலும் பிது அத்துக்காரர்களோடு கோபமாக இருக்கிறதாக அல்லாஹ் அறிந்தால் அவனுக்கு நல்ல அமல்கள் குறைவாக இருந்தபோதிலும் அல்லாஹு தஆலா அவனுடைய பாவங்களை எல்லாம் பொறுத்துவிடுவான் என்றே நான் ஆதரவு வைக்கிறேன். பிதுஅத்துக்காரனை ஒருபாதையில் போகக் காண்பாயேயானால் நீ வேறு ஒரு பாதையில் போ.’’

சகோதரர்களே!

மேலே குறிப்பிட்ட போதனைகளையும் நன்கு சிந்தித்து உண்மையை உணர்ந்து இதயத்தில் பதியவைத்து தீய கூட்டத்தினரின் உறவையும் பந்தத்தையும் அகற்றி நல்லோர்களான ஸுன்னத்து ஜமாஅத்தார்களுடனேயே சகவாசம் பூண்டிருப்பீர்களாக.

அல்லாஹ் நம் அனைவர்களையும் கெட்ட கொள்கைக்காரர்கள் உடைய தீங்கை விட்டும் காப்பற்றுவானாக ஆமீன்.

---

*அல்லாஹு தபாரக்க வதஆலா, அவனுடைய மஹ்பூபு ஸையிது ஆலம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பொருட்டால் நேரான பாதையில் சீரானமார்க்கத்தில் தரிபாடாக இருக்க எல்லா முஸ்லிம்களுக்கும் நல்லுதவி செய்வானாக. எல்லாவிதமான கெட்ட கொள்கைக்காரர்களைவிட்டும் குறிப்பாக வஹ்ஹாபிய்யாக் களுடைய ஆபத்துக்களை விட்டும் பித்னாகளை விட்டும் நம்மைக் காப்பாற்றி நம்முடைய தீனையும் ஈமானையும் காப்பாற்றுவானாக ஆமீன்.*

آمين بجاه النبي الامين سيدنا محمد امام المرسلين صلوات الله وسلامه عليه
وعلى آله وصحبه اجمعين والحمد لله رب العالمين.

## ஒரு விளக்கம்!

*தப்லீக் ஜமாஅத் பற்றிய உண்மைகளை அவ்வியக்கத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள் ஊடுருவிப்புகுந்து விட்டிருப்பதை விளக்கமாக - தப்லீக் இயக்கத்தின் தலைவர்களால் எழுதப்பட்ட நூற்களில் இருந்தும், பேசிய பேச்சுக்களிலிருந்தும் அவர்களின் நடைமுறைக் கொள்கைகளில் இருந்தும் மேற்கோளுடன் ஆதாரங்களைக் காட்டி* **“தப்லீக் ஜமாஅத்தில் வஹ்ஹாபிய்யத்தின் விஷக்கிருமிகள்”** *என்ற இந்த நூலை எங்கள் கண்ணியத்திற்குரிய ஷெய்குனாஸூபி ஹலரத்கத்தஸல்லலாஹுஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் வெளியிட்டதும், தப்லீக் இயக்கத்தினர் தம் சுய உருவம் தோலுரித்துக் காட்டப்படுவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.*

*எனவே இந்நூலுக்கு ஒரு மறுப்புரை வெளியிட்டாக வேண்டுமென்ற எண்ணத்தில் தென்காசி முசல்மான் பத்திரிகையின் ஆசிரியர் மீ.இ.முஹம்மது அப்துல்காதிர் அவர்கள் “தப்லீக் இயக்கத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள் என்ற புத்தகத்தை பற்றிய ஆராய்ச்சி” என்ற ஒரு நோட்டீஸ் வெளியிட்டார்.*

*விரைவில் உலமா பெருமக்களுடைய ஒப்பத்தோடு கூடிய விரிவான மறுப்பு வெளிவரும் என்றும் அந்த நோட்டீஸில் தெரிவித்திருந்தார்.*

*அவர் இவ்வாறு தெரிவித்து ஈராண்டுகளுக்குப் பிறகு காயல்பட்டணம் அம்பலமரைக்கார் தெரு -* **மி.சு. முஹம்மது அப்துல்காதிர் ஆலிம் ஜாவியாசதர் முதர்ரிஸ்,** *அலியார் தெரு -* **மு.க.செய்யிது இப்றாகீம் ஆலிம்,** *சொளுக்கார் தெரு* **சா. சாகுல்ஹமீது ஆலிம்,** *கி.மு.கச்சேரிதெரு* **P.M.S.ஷாதுலி,** *கருத்தம்பி மரைக்கார் தெரு* **M.K. செய்யிது**

**இபுறாகீம்** ஆகிய ஐவரின் கையொப்பத்துடன் “சிறப்புடையோர்களே சிந்தியுங்கள்” என்ற தலைப்பில் 6 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கை வெளியானது.

அறுபதுக்கு மேற்பட்ட பக்கங்களை கொண்ட ஒரு நூலை ஈராண்டுகளாக அலசி ஆராய்ந்து விரிவான முறையில் தரப்பட்ட மறுப்புரை மொத்தம் ஆறு பக்கங்கள் எனினும் அந்த மறுப்புரைகளில் தப்லீக் இயக்கத்தின் மீது நம்மால் எழுதப்பட்ட வினாக்களுக்கு தகுந்த பதில் தரப்பட்டிருக்கிறதா? என்றால் அதுவும் இல்லை.

நாம் எடுத்துவைத்த குற்றச்சாட்டுகளுக்கு விளக்கங்களோ அல்லது குற்றச்சாட்டுகளுக்கு மேற்கோளாக காட்டப்பட்ட அவர்களின் தலைவர்களின் நூல் ஆதாரங்களை , பேச்சுக்களைப்பற்றிய மறுப்போ ஏதுமில்லாமல் ஒரு விசித்திரமான ஆராய்ச்சி செய்துள்ளனர்.

எனவே அவர்களால் வெளியிடப்பட்ட இரண்டு பிரசுரங்களுக்கும் சேர்த்து எங்கள் ஷெய்குனா அவர்கள் “அறிவாளர்களேஆராய்ந்து பாருங்கள்” என்றதொரு மறுப்பினை எழுதினார்கள். அதனையும் இந்நூலில் இணைத்து தந்துள்ளோம்.

ஸுன்னத்து வல்ஜமாஅத் பெருமக்களே! “தப்லீக் ஜமாஅத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள்” என்ற நூலும் “அறிவாளர்களே ஆராய்ந்து பாருங்கள்” என்ற மறுப்பும் ஒருசேர இணைந்த இந்நூலை படித்துணர்ந்து தப்லீக் எனும் தீய வழி விடுத்து ஈமானைப்பாதுகாத்துக் கொள்ள அன்போடு அழைக்கிறோம்.

இவண்

**ஹிஸ்புல்லாஹ் ஸபை**

ஸூபி மன்ஸில்

காயல்பட்டணம்.

## அறிவாளர்களே ஆராய்ந்து பாருங்கள்!

அல்லாஹ்வையும், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையும் அதிகம் நேசம் வைத்த அறிவாளர்களே அருமைச் சகோதரர்களே, தற்காலத்தில் புதிதாகத் தோன்றியுள்ள இல்யாஸி தப்லீகு இயக்கம் வஹ்ஹாபிகளாலேயே தோற்றுவிக்கப்பட்டது. அது வெளிக்கு தப்லீகு ஜமாஅத்து என்ற அழகிய போர்வையை போர்த்திக்கொண்டு அந்தரங்கத்தில் வஹ்ஹாபிஸத்தைப் பரப்ப வந்திருக்கிறது. அதற்குள் வஹ்ஹாபிய நச்சுக்கிருமிகள் இருக்கின்றன; ஸுன்னத்து ஜமாஅத்து மக்கள் அதில் சேரலாகாது என “தப்லீகு ஜமாஅத்தில் வஹ்ஹாபிய்யத்தின் விஷக்கிருமிகள்” என்ற ஒரு நூல் வெளிவந்ததை நீங்கள் அறிவீர்கள். அதில் தற்ாகல தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் அதைக்கூட்டிக் கலைப்பவர்கள் அத்தனைபேர்களும் வஹ்ஹாபிக் கொள்கையுடையவர்கள் என்பதாக அவர்கள் அந்தக் கெட்டகொள்கைக

ளை எழுதியுள்ள நூல்களின் பெயர்கள் பக்க நம்பர்கள் உள்பட அந்த வாசகங்களை யும் அப்படியே எடுத்துக்காட்டி இக்கொள்கைகள் நம் ஸுன்னத்து ஜமாஅத்துக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது என்பதாக குர்ஆன் ஹதீது இமாம்கள் உலமாக்களின் கித்தாபுகளிலிருந்து ஆதாரங்கள் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த நூலுக்கு மறுப்பாக சுமார் 2 வருடங்களுக்கு முன் ''தப்லீகு ஜமா அத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள் என்னும் புத்தகத்தைப் பற்றிய ஆராய்ச்சி'' என்று ஒரு நோட்டீஸ் தென்காசி முஸல்மான் பத்திரிகை ஆசிரியர் மீ.இ. முஹம்மது அப்துல் காதிர் அவர்களால் வெளிவந்தது பின்னால் உலமா பெருமக்களின் கை ஒப்பங்களுடன் விரிவான ஒரு மறுப்பு வெளியிடுவதாகவும் அதில் குறிக்கப்பட்டிருந்தது.

அந்த ஆராய்ச்சி எனும் நோட்டீசைப் பார்த்து பள்ளி மாணவர்களும் கூட இஃது ஒரு பத்திரிகை ஆசிரியருடைய ஆராய்ச்சியாவென்று எள்ளி நகைக்கக்கூடிய விதத்தில் அத்தனையும் அறிவுச் சூனியமாகவே இருந்தது. அதில் ஆசிரியர் அவர்கள் விஷக்கிருமிகள் என்ற நூலில் வஹ்ஹாபியாக்களுடைய கொள்கைகளைப் பற்றி எழுதி இருப்பதையும், அது நம் ஸுன்னத்து ஜமாஅத்து கொள்கைகளுக்கு விரோதமானது என்பதற்குக் காட்டப்பட்ட ஆதாரங்களையும் அப்படியே ஒப்புக்கொள்வதோடு இந்தக் கெட்ட கொள்கைகளை ஒரு பித்தம் பிடித்தவனுங்கூடச் சொல்லமாட்டான் என்றும் இவைக ளெல்லாம் வஹ்ஹாபிக் கொள்கைகளானால் இதைப் பற்றி வஹ்ஹாபிகளிடம் கேட்டுக்கொள்ள வேண்டும். தேவுபந்திகளுக்கோ தப்லீக்குக் காரர்களுக்கோ இந்தக் கொள்கையைப்பற்றி எந்தவிதமான சம்பந்தமுமில்லை. இவர்கள் சுத்தமான சுன்னத் ஜமாஅத் கொள்கையுடையவர்கள் என்றும் எழுதி இருக்கிறார். என்ன இவரின் அறியாமை!

கெட்ட கொள்கைகளைத் தங்கள் நூல்களில் எழுதிய முஹம்மது காஸீம் நானூத்தவி, றஷீது அஹ்மது கொங்கோஹி கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி இவர்கள் எல்லாம் யார்? தேவுபந்து தாறுல் உலூம் மத்ரஸாவின் ஸ்தாபகரும் அதின் பிரதான ஆசிரியர்களும் தேவு பந்திகளால் ஹகீமுல் உம்மத் ஷெய்குல் ஹிந்து என்றும் கொண்டாடப்படுகிறவர்களு மில்லையா? தப்லீக்கின் ஸ்தாபகர் இல்யாஸ் அவர்களிடம் கல்வி படித்து இரவு பகலாக அவர்களின் சகவாசத்திலிருந்து அவர்களிடம் முரீதுமாகி அவர்களை வலி குதுபு என்றும் இவர்களெல்லாம் என்னுடைய உடலிலும், உயிரிலும் குடிகொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லவில்லையா? இந்த தப்லீக்கின் போதனை அவருடையது பிரச்சாரம் என்னுடையது என்றும் இல்யாஸ் சொல்லவில்லையா? அப்படியானால் அவர்களால் சொல்லப்பட்ட கெட்ட கொள்கைகளை இல்யாஸ் சரிகண்டு ஆமோதித்தவர் தானா இல்லையா?

சோதரீர், இன்னும் கனம் தெ.மு.ப. ஆசிரியர் அவர்களின் விசித்திர ஆராய்ச்சியை பாருங்கள் ''நீங்கள் சொல்வது போல் அஷ்ரப் அலி தானவியும், மற்றவர்களும் காபிர்கள் முறதத்துகளானால் அவர்களின் உஸ்தாது ஹாஜி இம்தாதுல்லாஹ் அவர்களும் அவர்களுடைய இதர முரீதீன்களும் அப்படித்தானே அவர்களை ஒப்புக் கொண்ட

உங்களையும் அப்படித்தானே சொல்லவேண்டும்'' என்று கேட்டு எழுதி இருக்கிறார். ஆஹா! இதென்ன விசித்திரமான ஆராய்ச்சி ஒரு பித்தம் பிடித்தவனுடைய மூளையிலாவது இந்த யோசனையும் ஆராய்ச்சியும் வருமா? நபி நூஹ¬ (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகன் கண்ஆன் என்பவன் காபிராகிப் போனதினால் நபி நூஹ¬ (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கென்ன குறைவு? இக்ரிமா(றலியல்லாஹ¬ அன்ஹ¬) அவர்களின் தகப்பன் அபூ ஜஹ்லு காபிராகிப் போனதினால் இக்ரிமா (றலியல்லாஹ¬ அன்ஹ¬) அவர்களுக் கென்ன குறைவு? ஒருவர் கெட்ட கொள்கையுடையவராகிக் காபிராகிப் போனதினால் அவரின் தகப்பனையோ, ஞான ஆசிரியரையோ மகனையோ, சீடரையோ மற்றவர்களையோ கெட்டவர்கள், காபிர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும். ஆனால் அந்தக் கெட்ட கொள்கையை இவரும் ஒப்புக்கொண்டால் அல்லது அவரின் கெட்ட குப்ரியத்தான கொள்கையைத் தெரிந்திருந்தும் அவரை முஸ்லிம், வலி குதுபு என்று சொல்லுவானேயானால் இவன் அந்தக் கெட்ட குப்ரியாத்தான் கொள்கையை ஒப்புக்கொண்டவன் தான் என்றும் அவனைப் போலவே இவனும் வழிகெட்டவன் காபிர் என்றும் தான் சொல்லப்படும். இல்யாஸையும் இதற்காகத் தான் கெட்டவர் என்றும் அவரால்தோற்றுவிக்கப்பட்ட இந்த இல்யாஸித் தப்லீகு இயக்கமும் வழிகெட்ட வஹ்ஹாபி இயக்கம் என்றும் சுன்னத் ஜமாஅத் மக்கள் அதில் சேரக் கூடாது என்றும் சொல்கிறோம். நம்முடைய இந்தக் கருத்து உண்மையானது தான் என்பது ஒவ்வொரு அறிவாளி களுக்கும் நன்றாய் விளங்கும். ஆகையினால் தான் தெ. மு.பத்திரிகை ஆசிரியரின் இத்தகைய விசித்திர ஆராய்ச்சிக்கு மறுப்பு எழுதத் தேவையில்லை என்று விட்டு விட்டோம். ஆனாலும் அவரின்ஆராய்ச்சி நோட்டீஸில் பின்னால் உலமா பெருமக்களுடைய ''கை'' ஒப்பத்தோடு விரிவான மறுப்பு வெளிவரும் என்று எழுதி இருந்த பிரகாரம் வரக்கூடிய மறுப்பாகிலும் அறிவோடு கூடியதாக இருக்குமாவென்றுதான் இது காலம்வரை அதை வழிபார்த் திருந்தோம்.

சுமார் இரண்டு வருடங்களுக்குப்பிறகு வெகு சிறமத்தோடு சில தினங்களுக்கு முன்னர் உலமா பெருமக்களாகிய மி.சு. முஹம்மது அப்துல் காதிர் ஆலிம், இன்னும் நால்வர்கள் கை ஒப்பத்தோடு 6 பக்கங்கள் கொண்ட ''சிறப்புடையோர்களே சிந்தியுங்கள்'' என்று ஒரு நோட்டீஸ் வெளிவந்தது இந்த நோட்டீஸிலாவது விஷக்கிருமிகள் என்ற நூலில் தப்லீக் ஸ்தாபகர் இல்யாஸைப் பற்றியும் அவருடைய குருமார்களைப் பற்றியும் இவர்களெல்லாம் வஹ்ஹாபிக் கொள்கையுடையவர்கள் அந்த கொள்கயை ஆதரித்தவர்கள் என்பதற்கு அவர்களின் நூல்களிலிருந்து காட்டப்பட்ட ஆதாரங்கள் எதையுமே மறுக்கவோ அல்லது அவர்கள் அந்த கெட்ட கொள்கையைவிட்டு பின்னால் தௌபாச் செய்து இன்ன நூலில் எழுதியிருக்கிறார்களென்றோ ஒரு ஆதாரமும் காட்டப்படவில்லை. ஆனால் விஷக்கிருமிகள் என்ற நூல் முதல் பதிப்பில் ஏற்பட்ட ஒரு அச்சுப்பிழையை பிரமாதமாக எடுத்து உண்மைக்கு மாற்றமாகக் காட்டி அதனால் ஏதோ மறுப்பு எழுதிவிட்டதாகப் பொதுமக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள் பொதுமக்கள் இவர்களின் விபரீத ஏமாற்று வார்த்தைகளை கண்டு ஏமாற மாட்டார்கள். ஆனால் இவர்களின் இந்த அறிவீனத்தைப் பார்த்து இது தனா உலமா பெருமக்க

ள் கோஷ்டியின் அறிவு என்று தெ.மு.ப. ஆசிரியரின் விசித்திர ஆராய்ச்சியைப் பார்த்து நகைத்தது போல், இதையும் பார்த்து எள்ளி நகைப்பார்களென்பதில் ஐயமில்லை.

வழிகெட்ட கொள்கையுடையவர்களான முஹம்மது காஸிம் நானுத்தவி, றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி குலாம் அஹமது காதியானி இவர்களெல்லாம் தங்கள், தங்கள் நூல்களின் கெட்ட கொள்கைகளை எழுதியதினால் இவர்களும் இவர்களைச் சரிக்கண்டவர்களும் காபிர் முற்தத்துகள் என்று ஹிஜ்ரி 1324-ல் மக்கா மதீனாவிலுள்ள 35 உலமாக்கள் பத்வா (மார்க்கத் தீர்ப்பு) கொடுத்தார்கள். அத்தீர்ப்பு நூலுக்கு அப்ஜது கணக்குப்படி தீர்ப்புக் கொடுத்த ஆண்டைக் குறிக்கக்கூடிய விதத்தில் "ஹுஸாமுல் ஹறமைன் அலாமன்ஹரில் குப்ரி வல்மைன்(குப்ரு அசத்தியத்தின் கழுத்திற்கு இரு புண்ணியஸ்தலங்களின் வாள்) என்று பெயரும் வைக்கப்பட்டது. அந்த பத்வாகிதாபை உருதுவில் மொழிபெயர்த்து ஒருபக்கம் அரபியும் மறுபக்கம் உருதுவுமாக ஹிஜ்ரி1328-ல் அச்சிட்டு வெளியாக்கப்பட்டது. அந்த பத்வாக்களில் ஒரு பத்வாவின் சுருக்கத்தை தமிழில் மொழிபெயர்த்து வி
க்கிருமிகள் எனும் நூலில் சேர்த்திருந்தோம். அதில் அந்த பத்வாவை எழுதிய பெரியார் தங்களின் கை ஒப்பத்திற்குப் பதிலாக அவர்களின் பேர் பொறிக்கப்பட்ட ஸீலை ஒப்பமாக வைத்திருந்தார்கள். அந்த ஸீலில் அவர்கள் ஸீல் செய்த ஆண்டான ஹிஜ்ரி 1291 எனும் இலக்கணமும் பொறிக்கப்பட்டிருந்ததினால் அவர்கள் பெயருடன் அந்த ஆண்டும் விழுந்திருந்தது. தமிழில் மொழிபெயர்த்து அவர்கள் பெயரோடு அந்த ஆண்டையும் போடப்பட்டுவிட்டது. நாலுபக்கமும் கட்டம்போட்டு அதற்குள் பெரியாருடைய பெயரையும் அந்த ஆண்டையும் போடவேண்டும் அல்லது பெயரையும் அந்த ஆண்டையும் எழுதி இது அவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட ஸீல் என்று எழுத வேண்டும். தவறாக விஷக்கிருமிகள் முதல் பதிப்பில் விடுபட்டுவிட்டது.

இதைப்பற்றி முதல் பதிப்பு வெளிவந்த உடனே கண்ணியம் மிக்க இந்த உலமாக்கள் கோஷ்டிகளால் கேட்கப்பட்டதற்கு இது அவர்களின் ஸீலில் உள்ள ஆண்டு, பத்வாக் கொடுத்த ஆண்டல்ல பத்வா அச்சடிக்கப்பட்ட ஆண்டை ஹிஜ்ரி 1328 என்று குறித்திருக்கின்றோம். மேலும் இந்த பத்வா ஹிஜ்ரி 1324-ல் கொடுக்கப்பட்டது. அந்த ஆண்டைக் கணிக்கக் கூடிய "ஹுஸாமுல் ஹறமைன் அலாமன்ஹரில் குப்ரி வல்மைன்" என்று பெயரும் இதற்கு வைக்கப்பட்டது என்று சொல்லி அந்த பத்வாக் கிதாபையும் அவர்கள் பார்வைக்குக் கொடுத்தனுப்பினோம். பார்வை செய்து அனுப்பிவைத்தார்கள். பின்னர் விஷக்கிருமிகள் இரண்டாம் பதிப்பிலும் மூன்றாம் பதிப்பிலும் அந்த ஸீலிலுள்ள ஆண்டு போடப்படவில்லை. இது தான் உண்மை விஷயம்.

அறிவாளிகளே உ.பெ.ம கோஷ்டிக்கு விஷக்கிருமியில் சொல்லப்பட்ட ஆதாரங்கள் எதையுமே மறுக்க வழியில்லாது போக்குமுட்டி அச்சில் ஸீல் என்று எழுதத்தவறி விடுபட்டதை பிரமாதமாக எடுத்துக்காட்டி (ஸீலில் உள்ள ஆண்டாகிய) ஹிஜ்ரி 1291-ல் அஷ்ரப் அலிக்கு 4 வயது தான். 4 வயது குழந்தைக்குத்தானா காபிர் முர்த்தத்து

என்று பத்வாக் கொடுத்திருக்கிறார்கள். என்றும் இதனால் விஷக்கிருமிகள் நூலில் சொல்லப்பட்ட அத்தனையும் பொய் என்று எழுதினார்கள். அந்த இதுதானா உ.பெ.ம. கோஷ்டியின் அறிவு, விஷக்கிருமிகள் நூலில் மக்கா மதீனாவிலுள்ள 35 உலமாக்களால் கொடுக்கப்பட்ட ஹுஸாமுல் ஹறமைன் எனும் பத்வா கிதாபு ஹிஜ்ரி 1328-ல் அச்சிட்டு வெளிவந்தது என்று எழுதியிருப்பது இந்த உ.பெ.ம. கோஷ்டிகளின் கண்ணுக்குத் தென்படவில்லையா? மேலும் விஷக்கிருமிகள் நூலின் வழி கெட்ட கூட்டங்களான அஷ்ரப் அலி தானவி வகையறாக்கள் தங்கள் நூற்களில் அந்தக் கெட்ட கொள்கைகளை எழுதியிருப்பதை எல்லாம் எழுதிக்காட்டி இந்த விதமான கெட்ட கொள்கைகளை இவர்கள் தங்கள் நூல்களில் எழுதியதினால் மக்கா மதீனாவிலுள்ள 35 உலமாக்களால் இவர்களையும் இவர்களைச் சரி கண்டவர்களையும் காபிர்கள் முற்றத்துகள் என்று பத்வாக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றும் எழுதியிருக்கிறோம். இந்த உ.பெ.ம. கோஷ்டிகள் சொல்வது போல அஷ்ரப் அலி தானவிக்கு 4வயதாக இருந்தால் நாலு வயதாக இருக்கும்போது தானா இவர் இந்த கெட்ட கொள்கையை அதாவது "ஹிப்ளுல் ஈமான்" எனும் நூலில் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மறைவான சங்கதிகள் தெரிவதுபோல ஒவ்வொரு மதளைக்கும், பைத்தியக்காரனுக்கும் மிருகத்திற்கும் கூடத் தெரியுமே. இதில் நாயகத்திற்கு என்ன விஷேசமிருக்கிறது என்று எழுதினார் என்று சிறுபிள்ளைகள் தானும் கேட்பார்களே என்றுங்கூடவா இந்த உ.பெ.ம. கோஷ்டிக்கு விளங்கவில்லை அந்தோ உ.பெ.ம. கோஷ்டியின் அறிவீனம்.

சகோதரர்களே! கவனித்து பாருங்கள். விஷக்கிருமிகள் என்ற நூலில் தற்கால தப்லீக் ஜமாஅத்தை ஸ்தாபித்தவர்கள் அதைக்கூட்டிக் கலைப்பவர்களெல்லாம் கெட்ட வஹ்ஹாபிகள், வஹ்ஹாபிக் கொள்கையை ஆதரித்தவர்கள் என்பதற்கு உதாரணமாக றஷீது அஹ்மது கொங்கோஹி என்பவர் முதன் முதலாக வஹ்ஹாபிக் கொள்கயை பரப்பிய முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாபையும் அவருடைய ஆபாச நூலாகிய கிதாபுத் தௌஹீதை உருதுவில் மொழிபெயர்த்துத் தன்கையிலிருந்தும் கொஞ்சம் சேர்த்து அதற்கு தக்வியத்துல் ஈமான் என்று பெயர் வைத்து இந்தியாவில் முதன் முதலாக வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்பிய இஸ்மாயீல் திஹ்லவியையும் நல்லவர்கள் என்றும் ஒலியென்றும் இவருடைய ஆபாசக் களஞ்சியமான தக்வியத்துல் ஈமான் என்ற நூலைப் பார்ப்பதும் அதை வீட்டில் வைத்திருப்பதும் அதன் படி அமல் செய்வதும் ஐனுல் இஸ்லாம் (இஸ்லாம் தானாகும்) என்றும் வாயாறப் புகழ்கிறார். இந்த றஷீது அஹ்மது தான் தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் இல்யாஸின் பிரதான ஆசிரியரும் ஞான குருவுமாவார் இவரைதான் குதுபு என்றும் இவரைக் காணாமலிருந்தால் எனக்கு நிம்மதியே இல்லை தூக்கத்திலிருந்துங் கூட விழித்து அவருடைய முகத்தைப் பார்த்துவிட்டு வந்து திரும்பவும் தூங்குவேன் என்றும் இல்யாஸ் சொல்கிறார். இந்த இல்யாஸால் உண்டாக்கப்பட்ட தப்லீகு இயக்கம் (எட்டி வைக்கும் இயக்கம்) றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தையும் அவர்களும் அவர்களின் ஸஹாபாக்களும் எந்தக் கொள்கை நடத்தையிலி

ருந்தார்களோ அதை எட்டி வைக்கக் கூடிய இயக்கமில்லை. இவர்கள் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடையவும் சங்கையான அவர்களின் ஸஹாபாக்களுடையவும் கொள்கைக்கு மாற்றமான 72 கூட்டங்களில் ஒரு கூட்டமான வழிகெட்ட வஹ்ஹாபியாக்களுடைய கொள்கைகளைத்தான் எட்டி வைக்கும் கூட்டமாகுமென்றும் “வழிகெட்ட கூட்டத்தார்கள் கிட்டவும் போகாதீர்கள். அவர்களை உங்கள் கிட்டவும் வர விடாதீர்கள். அப்படியானால்தான் அவர்கள் உங்களை வழிகெடுக்கவோ குழப்பத்திலாக்கவோ மாட்டார்கள்.” என்ற திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவசனபடி சுன்னத் ஜமாஅத் மக்கள் இந்த இல்யாஸி தப்லீக்கில் சேரக்கூடாது என்று தக்க ஆதாரத்தோடு எழுத்து மூலம் ஒரு நூல் 1,2,3-வது முறையாகவும் இன்னொரு நூல் முதன் முறையாகவும் அச்சிட்டு எல்லா ஊர்களிலும் வெளிப்படுத்தி இருக்கிறோம். எல்லாவூர் பொதுமக்களும் பார்த்திருப்பார்கள் இந்த நூல் வெளிவந்தும் சுமார் ஏழரை வருடங்களுக்கு மேலாகும். இந்த நிலையில் இந்த உ.பெ.ம. கோஷ்டிகள் நமது நூல்களில் காட்டப்பட்ட ஆதாரங்கள் எதையுமே மறுக்கமுடியாமல் (உண்மையை எப்படி மறுக்கவோ மறைக்கவோ முடியும்) “நெஞ்சு உரமுள்ளவர்கள் யாரும் என்னிடம் தப்லீகு ஜமாஅத்தைப் பற்றி கேட்டால் நான் ஜவாபு சொல்லத் தயார் சவால் விடுகிறேன்.” என்று எழுதுவதானது எவ்வளவு மதியீனம் பேடித்தனம்.

சோதரீர் சிந்தித்துப் பாருங்கள் ! மார்க்க ஞானம் கொஞ்சங்கூட இல்லாதிருந்தாலும் பணக்காரர்களாக மட்டும் இருந்தால் போதும் அவர்களைக் கொண்டு மற்றவர்களையெல்லாம் எளிதாக தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற குபாட நோக்கத்துடன் இந்த இல்யாஸி தப்லீகுப் பார்ட்டிகளால் எல்லா ஊர்களிலேயும் அந்த அந்த ஊரிலுள்ள பணக்காரர்களையே அமீர்களென்று ஏற்படுத்தி பாவம் அந்தப் பணக்காரர்கள் பதவிமோகத்தில் மயங்கி ஏமாந்து தங்கள் கையிலுள்ள பணத்தையும் சிலவு செய்தார்கள். இவர்களைப் பார்த்து மற்றவர்களும் ஏன் உலமாக்களுங்கூட நிர்பந்தமாய்ச் சேரவேண்டியதாகி எங்கு பார்த்தாலும் தப்லீக் நல்ல இயக்கம் இதுதான் ஸஹாபாக்களுடைய வேலை மற்ற உலமாக்கள் முன்னோர்களெல்லாம் இந்த வேலையை விட்டு விட்டார்கள். தப்லீக்காரர்கள் தான் அந்த வேலையை செய்கிறார்கள். இதில் எல்லோர்களும் சேரவேண்டுமென்று பிரமாதமாகப் பிரசாரம் செய்து மக்கள் எல்லாம் ஏமாற்றமாக கும்பல் கும்பலாகச் சேர்ந்து கொண்டிருந்த காலத்தில் (இன்றைக்குச் சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன்னால்) இந்த இல்யாஸி தப்லீகு இயக்கம் றஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடையதும் அவர்களின் ஸஹாபாக்களுடையதுமான நல்ல கொள்கைகளையும் நடத்தைகளையும் எட்டி வைக்கும் இயக்கமில்லை அதற்கு மாறாக வஹ்ஹாபிகளுடைய கொள்கைகளை எட்டி வைக்கும் இயக்கமாகும். இதற்குள் வஹ்ஹாபியத்தின் நச்சுக்கிருமிகள் இருக்கின்றன என்று ஆதாரத்தோடு மக்கள் இதில் சிக்குண்டு மோசம் போகாது விழிப்படைவான் வேண்டி “தப்லீகு ஜமாஅத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள்” எனும் பெயருடன் நூல் வடிவமாக அச்சிட்டு ஊரெங்கும் வெளியாக்கியது நெஞ்சு உ

*ரமா? அல்லது ஆதாரத்தோடு எழுதப்பட்ட அந்த நூல் வெளிவந்து சுமார் இரண்டரை வருடமாகியுங்கூட அதில் சொல்லப்பட்ட ஆதாரங்கள் ஒன்றையாவது மறுக்கத்தக்க ஆதாரம் காட்ட முடியாமல் பேடித்தனமாக "தப்லீக் விஷயமாக என்னிடம் கேட்டால் பதில் சொல்லத்தயார் சாவல் விடுகிறேன்" என்று மட்டும் எழுதிப் போடுவது நெஞ்சு உரமா? தப்லீக் பற்றிய ஆட்சேபணைகளைத் தானே எழுத்து மூலம் நூல் வடிவமாக அச்சிட்டு ஆயிரக்கணக்கான பிரதிகளை பொதுமக்கள் மத்தியில் பரப்பியிருக்கிறோம். வேறு ஏதும் ஆட்சேபணை செய்தால் அல்லது கேள்விகள் கேட்டால் ஜவாபு சொல்லலாம் என்பது தான் இந்த உ.பெ.ம. கோஷ்டிகளின் வாசகத்திற்கு பொருளா?*

*அறிவாளர்களே ஆராய்ந்து பாருங்கள். தப்லீகுஜமா அத்தோடு நான் பல ஊர்களுக்கும் சென்றிருக்கிறேன். அவர்கள் வாயிலிருந்து எந்தவிதமான கெட்ட கொள்கைகளும் வரவில்லை அவர்களிடம் மருந்துக்குங் கூட வஹ்ஹாபிக் கொள்கை இல்லை என்றும் இந்த உ.பெ.ம கோஷ்டிகள் சொல்கிறார்கள். என்ன அறிவீனம் தப்லீக்காறர்கள் எந்த விதமான கொள்கைகளையும் சொல்லவில்லை என்றே வைத்துக் கொண்டபோதிலும் வஹ்ஹாபிக் கொள்கைகளையுடைய அக்கெட்ட கொள்கைகளை நூல்களில் எழுதிய பூதங்களை அதாவது "றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மவுத்தாகி மண்ணோடு மண்ணாகிவிட்டார்கள்" என்றும் "தொழுகையில் வேசயை ஜினாச் செய்கிற நினைப்பும் சொந்த ஜிமாஉ செய்கிற நினைப்பும் வருவது நல்லது ஷெய்கு அவர் போன்ற பெரியோர்கள் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களானாலும் சரியே இவர்களின் ஞாபகம் வருவதாகிறது தனது கழுதை, மாடு உடைய ஞாபகத்தில் மூழ்குவதைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு கெட்டது". என்றும் இன்னும் இதுபோன்ற கணக்கிலடங்கா ஆபாசங்களை எழுதிக் கிறுக்கிய பித்தம் பிடித்தவனை (இஸ்மாயில் திஹலவியை) நல்லவர் வலி என்றும் அவருடைய ஆபாசக்களஞ்சிய நூலான தக்வியத்துல் ஈமானை வீட்டில் வைப்பதும் பார்ப்பதும் அதன்படி அமல் செய்வதும் இஸ்லாம் தானாகும். (ஐனுல் இஸ்லாம்) என்றும் சொல்வதோடு றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அறிவை இப்லீஸ்லஈனுடைய அறிவைவிடக் குறைந்தது. இப்லீஸுக்கு அதி அறிவுண்டென்பது ஈமானிலுள்ளது. றஸூலுல்லாவுக்கு அதிக அறிவு இருப்பதாகச் சொல்வது ஷிறுக்கு என்று சொன்ன தேவுபந்து பெரிய பூதம் றஷீது அஹ்மது கொங்கோஹியை வலி, குத்பு என்றும் அவரைக் காணாது எனக்கு மன நிம்மதியே இல்லை என்றும் சொல்லக்கூடிய இல்யாஸ் காந்திலவியை (தப்லீகு ஜமாஅத்து ஸ்தாபகரை) முஸ்லிம் என்றும் பெரியார் என்றும் வலி என்றும் சொல்லி அவருக்கும் மற்ற பூதங்களுக்கும் "றஹ்மத்துல்லாஹி" என்று (ஆசீர்வாதம்) துஆ கேட்கிறார்களா இல்லையா? இப்போது றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏசியவர்களைச் சரி கண்டவர்களை இவர்களும் சரிகண்டு விட்டார்களா இல்லையா? றஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஏசியவன் காபிராகி விட்டான். ஏசியவனுக்கு வேதனையுண்டு என்பதிலோ அவன் காபிர் என்பதிலோ சந்தே*

தகம் வைப்பவனும் காபிர் ஆகிவிடுவான் என்பதாக முஸ்லிம்களெல்லோரும் ஏகோபித்துச் சொல்லியிருப்பதாக ஷிபா எனும் கிதாபிலும் மற்றக் கிதாபுகளிலும் சொல்கிறார்கள். இன்னும் இமாம் இப்னுஹஜர் (றலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தங்களின் அஃலாம் எனும் கிதாபில் இமாம்களெல்லோர்களும் ஏகோபித்து எதைக்குப்ரு என்று சொல்கிறார்களோ அதுகளைப் பேசக்கூடிய பாடத்தில் சொல்கிறார்கள். எவனாகிலும் குப்ரிய்யத்தான் வார்த்தைகளைச் சொல்வானேயானால் அவன் காபிராகி விடுவான். அதைச் சரிகண்டவனும் அதைப் பொருந்தியவனும் காபிராகிவிடுவான். (நவூது பில்லாஹி மின்ஹா)

சகோதரர்களே! வழிகெட்ட கொள்கையுடைய றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப்அலி தானவி முதலியவர்கள் தங்கள் தங்கள் நூல்களில் இன்னின்ன விதமாக எழுதியிக்கிறார்கள் என்று நூலின் பக்கம் வாசகத்தோடு குறித்து ஆதாரம் காட்டியிருக்கும்போது அந்த ஆபாச வாசகங்கள் அவர்களால் எழுதப்படவில்லையென்றோ (அந்த நூல்கள் அவர்களாலேயே எழுதப்பட்டதாக அவர்கள் கம்பெனிகளில் அச்சிட்டு இன்று வரையும் விற்பனை செய்து கொண்டிருக்கும் போது எப்படி சொல்லமுடியும்) அல்லது அவைகளின் அந்த வாசகங்களுக்கு நல்ல பொருள்படும்படியாக வலிந்துரையாகிலும் செய்து (துலாம்பரமான தெளிவான பொருள்படும் வாசகத்திற்கு எங்ஙனம் வலிந்துரை-தாவீல் செய்ய முடியும்) அவர்கள் குப்ரைவிட்டுப் பரிசுத்தமானவர்கள் என்றோ அல்லது அவர்கள் அந்த கொள்கைகளை விட்டும் தவுபாச் செய்து இன்ன நூலில் எழுதிஇருக்கிறார்கள் என்றோ றுஜூவாகாமல் அவர்களெல்லாம் தங்கள் சீவியமெல்லாம் அந்தக் கெட்ட குப்ரியத்தான கொள்கைகளிலேயே இருந்து அக்கொள்கையிலேயே மரணத்திருக்கும்போது அவர்களை ஆலிம், அல்லாமா பெரியார் என்பதும் "றஹ்மத்துல்லாஹி அலைஹி" என்று அவர்களுக்கு துஆக் கேட்பதும் ஆகுமா? அறிவாளர்களே ஆராய்ந்து பாருங்கள் "முஷ்ரிகீன்கள் அவர்கள் நரகவாதிகள் என்பது தங்களுக்கு விளங்கிய பின்னர் அவர்கள் தங்களுக்கு சொந்தக்காரர்களாகவே இருந்த போதிலும் அவர்களுக்கு பிழைபொறுக்கும்படி தேடுவது நபியவர்களுக்கும் ஈமான் கொண்டவர்களுக்கும் தகுமானதல்ல."

(திருக்குர்ஆன்9-113)

சகோதரர்களே! தப்லீக்காரர்கள் காதியானிகளுக்கு தக்க மறுப்புக் கொடுத்தார்கள் முஸ்லிம்களை அந்தக் கெட்ட காதினியாக் கொள்கையை விட்டும் காப்பாற்றினார்கள் என்றும் இந்த உ.பெ.ம. கோஷ்டிகள் எழுதுகிறார்கள். நாமும் அதை ஒப்புக் கொள்கிறோம்.காதியானிகளுக்கு ஸுஜ உலமாக்கள் மறுப்பு எழுதியதுபோல் இந்த தப்லீக்கின் மூதாதைகளான தேவுபந்திகளும் நல்லவிதமாகத் தான் மறுப்பு கொடுத்தார்கள். காதியானிகளை காபிர்கள் முற்தத்துக்கள் என்று (பத்வா) மார்க்கத் தீர்ப்புத்தான் கொடுத்தார்கள் ஆனாலும் காதியானிகளைப் போன்று இவர்களும் குப்ரியத்தான கொள்கைகளைத் தங்கள் நூல்களில் வெளியாக்கியதும் நீங்கள் எழுதிய கொள்கைகள் குப்ரியத்தானது என்று ஸுஜ உலமாக்கள் மறுப்பு எழுதித் தெரியப்படுத்தியும் பல முறை அந்தக் கொள்கையையே அச்சிட்டு வெளிப்படுத்தினாலும் அவர்கள் காதியா

*னிகளுக்கு மறுப்புக் கொடுத்தார்கள் என்பதற்காக அவர்களை காபிர், முற்தத்து, வழி கெட்டவர்கள் என்றும் சொல்லக்கூடாதோ? அறிவாளிகளே ஆராய்ந்து பாருங்கள். இவர்களுடைய குப்ரியத்தான கொள்கைகள்பற்றி "காதியானி தேவுபந்தி சம்பாசணை" என்று பின்னால் வரக்கூடிய நோட்டீஸையும் பாருங்கள்.(இந்த நோட்டீஸ் அச்சில் வந்துள்ளது.)*

*இறுதியாக "கெட்ட கொள்கைக்காரர்களுடன் சேராதீர்கள். அவர்களை உங்கள் கிட்டவும் வரவிடாதீர்கள். அப்படியானால் தான் அவர்கள் உங்களை வழிகெடுக்கவோ குழப்பத்திலாக்கவோ மாட்டார்கள்." என்ற திருநபி வாக்கிற்கிணங்க வழிகெட்டவர்களால் உண்டாக்கப்பட்ட இந்த இல்யாஸி தப்லீகு ஜமாஅத்தில் சேராதீர்கள். "தூதரே உமது ரட்சகனிடமிருந்து உம்மளவில் இறக்கப்பட்டதை எட்டிவையும்." (திருக்குர்ஆன் 5 :67) என்ற திருமறைப் பிரகாரமும் "என்னைத் தொட்டும் ஒரு வாக்கியத்தை யானாலும் எட்டி வையுங்கள்". என்ற திருநபி வாக்கியப்பிரகாரமும் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறங்கியதும் அவர்களும் சங்கையான அவர்களின் ஸஹாபாக்களும் எந்தக் கொள்கை நடத்தையிலிருந்தார்களோ அதை(அதுதான் ஸுன்னத்து ஜமாஅத்துக்காரர்களின் கொள்கை) எட்டிவையுங்கள். அந்த உண்மையான தப்லீக்கில் ஈடுபடுங்கள். அதற்கு குழுவொன்று அமைக்க வேண்டும். அதற்கு இன்ன பெயர்தான் வைக்கவேண்டும் என்ற அவசியமில்லை. எப்படியும் செய்யலாம். சங்கையான ஸஹாபாக்கள் காலமுதல் இதுகாலம் வரையிலும் இந்த உண்மையாக தப்லீக்குப் பணியில் மக்கள் ஒருவரில்லாது போனால் இன்னொருவராகிலும் ஈடுபட்டுக் கொண்டுதானிருந்தார்கள். இருக்கிறார்கள். குர்ஆன் ஓதிக்கொடுத்தவர்களும் குர்ஆனைப் பிழையில்லாது ஓதுவதற்காக தஜ்வீது கித்தாபு எழுதியவர்களும் அதன்படி படித்து கொடுத்தவர்களும் குர்ஆனுக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்ளும் அவர்களின் ஸஹாபாக்களும் சொல்லிய வியாக்கியானத்தைத் தழுவீ தப்ஸீர் (விரிவுரை) எழுதியவர்களும் ஹதீதுகளைத் தேடியெடுத்துச் சேர்த்து நூல்வடிவமாக எழுதியவர்களும் இன்ன ஹதீது ஸஹீஹானது இன்னது ளஈபானது என்று விபரம் கூறியவர்களும் ஹதீதுகளுக்குவியாக்கியானம் எழுதியவர்களும் தொழுகை நோன்பு போன்ற அனுஷ்டானக் கடமைகளை எப்படி நிறைவேற்றுவது அவைகளில் என்னென்ன அம்சங்கள் இன்றிமையாததும் அதின் உறுப்பும் போன்று அமைந்தது (பற்ளு) இன்னும் அதற்கு உறுப்பு போன்று இல்லாது புறம்பாக இருந்தும் இன்றி அமையாதது (சற்துகள்) இன்னும் அதைப் பழுதாக்கக்கூடியது (முப்தில்) இன்னது இருந்தால் விஷேசமாகுவது(ஸுன்னத்து) இன்னது என்பனவற்றை குர்ஆன் ஹதீது ஸஹாபாக்களால் ஏகோபிக்கப்பட்டது. (இஜ்மாவு) களிலிருந்து எடுத்து மக்கள் எளிதாக விளங்கிக் கொள்வான் வேண்டி நூல் வடிவமாக பிக்ஹு கிதாபு எழுதியவர்களும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களின் ஸஹாபாக்களும் கொண்டிருந்த கொள்கைகள் இன்னின்னதுதான் என்று அகீதா கிதாபு எழுதியவர்களும் வழிகெட்ட கொள்கைக்காரர்களுடைய கெட்ட கொள்கைகளை விட்டு மக்களை காப்பாற்றுவான் வேண்டி அவை இன்னின்னதுகள் என்றும் அ*

வைகள் குர்ஆன் ஹதீதுகளின் போதனைகளுக்கும் ஸஹாபாக்களின் கொள்கைகளுக்கும் முற்றிலும் விரோதமானது என்றும் ஆதாரங்காட்டி மறுப்பு கொடுத்தவர்கள். நூல்கள் எழுதியவர்களும் இந்த உண்மையான தப்லீக்கையே (எட்டி வைக்கும் பணியையே) தான் செய்தார்கள் செய்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தப்லீக் செய்து வருவது போல் கூட்டு முறையாக ஒரு கூட்டமாக சேர்ந்தும் அந்த வேலையைச் செய்தால் நல்ல பலன் உண்டாகும் என்ற நல்நோக்கமிருந்தால் அப்படியும் செய்யலாம். இத்தகைய கூட்டத்திற்கு ஒரு பெயர் வைத்துக்கொள்ளவேண்டு மென்றிருந்தால் எந்தப் பெயரையும் வைத்துக்கொள்ளலாம். ஆனால் வேலையின் நோக்கம் தான் உண்மையானதாக இருக்க வேண்டும். கெட்ட நோக்கத்தோடு கெட்ட கொள்கையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அவர்களின் சங்கையானஸஹாபாக்களும் எந்தக் கொள்கை நடத்தையிலிருந்தார்களோ அதற்கு மாற்றமான வழிகெட்ட 72 கூட்டங்களுடைய கொள்கையைப் பரப்புவதற்காக எட்டி வைப்பதற்காக கெட்டவர்களால் உண்டாக்கப்பட்ட இயக்கமாக இருந்தால் ஒருபோதும் அதில் சேரக்கூடாது அவர்களின் அழகான தப்லீகு ஜமாஅத்து என்ற போர்டை (வெளிவேசத்தைக்) கண்டு ஏமாந்து விடக்கூடாது.

தப்லீகு ஜமா அத்தை உண்டு பண்ணியவர்கள் அதைக் கூட்டிக் கலைத்தவர்களெல்லாம் வழிகெட்டவர்களாகவே இருந்தபோதிலும் இப்போது தப்லீகு செய்கிறவர்கள் எந்தவிதமான கெட்ட கொள்கைகளையும் சொல்லவில்லையே என்றும் ஏமாந்து விடாதீர்கள். இவர்கள் கெட்ட கொள்கையைச் சொல்லாது போனாலும் கெட்ட கொள்கையைச் சொன்னவர்களை நல்லோர்கள், பெரியோர்கள் என்று தான் மதிக்கிறார்கள். அவர்களைப் புகழவும் அவர்களுக்கு துஆக் கேட்கவும் தான் செய்கிறார்கள். கெட்டவர்களால் உண்டாக்கப்பட்ட இயக்கத்தில் அவர்களின் கெட்ட கொள்கையின் நச்சுப் புகைப்பட்டு அது வி
ம் நிறைந்ததாகவேதான் இருக்கும். அந்த இயக்கத்தில் சேர்ந்தவர்களிலெல்லாம் அந்த நஞ்சுக் கிருமிகள் சிறுகச் சிறுக ஊடுருவிப்பாய்ந்து இறுதியாக இவர்களும் பூரணமாக அந்தக் கெட்ட கொள்கைக்காரர்களைப் போலவேதான் ஆகிவிடுவார்கள் இதற்காகத் தான் எம்முடைய நன்மை தீமைகளை எம்மைவிடவும் அதிகம் தெரிந்தவர்களும் எம்மீது அளவுகடந்த கிருபையுள்ளவர்களுமான றவூபுற் றஹீம் றஹ்மத்துன்லில் ஆலமீன் எம்பிரான் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வழிகெட்ட கூட்டத்தார்கள் கிட்டவும் போகாதீர்கள். அவர்களை உங்கள் கிட்டவும் வரவிடாதீர்கள். அப்படியானால் தான் அவர்கள் உங்களை வழிகெடுக்கவோ குழப்பத்திலாக்கவோ மாட்டார்கள் என்று எமக்கு முன்னறிவிப்பாக உபதேசித்து எச்சரிக்கையும் செய்திருக்கிறார்கள்.

சகோதரர்களே! கூட்டமாகச் சேர்ந்து உண்மையான மார்க்க சேவை செய்யவேண்டுமென்ற நன் னோக்கமிருந்தால் இந்த இல்யாஸி தப்லீக் ஸ்தாபகர் அதன் தலைவர்களோடுண்டான தொடர்பை அறுத்துவிடுங்கள். அதற்கு ஒரே வழியானது தப்லீக் ஜமா அத்து என்ற பேரை மாற்றி ஜமாஅத் தே இற்ஷாது உபதேசக் குழு பிரசாரக் கூட்டம் அல்லது வேறு எந்தப் பெயரையாவது வைத்துக்கொண்டு குர்ஆன் ஹதீது இமாம்க

ள் நல்லோர்களுடைய நற்போதனைகளை எடுத்துரைத்து மக்களுக்கு நேரான பாதையைப் போதியுங்கள். கிருபையுள்ள நாயன் நம் அனைவர்களையும் வழிகெட்டவர்களின் வழிகேடான பாதையை விட்டும் காப்பாற்றி நல்லோர்களின் நேரான வழியைக் காட்டி சீராக நடக்க நல்லருள் புரிவானாக ஆமீன்.

**விவேகமில்லா விவாத மாநாடும் வீணான தீர்ப்புகளும்**

"**தப்லீக் ஜமாஅத்து விவாத மாநாடு மாத்தறை**" என்ற நோட்டீஸைப் பார்த்தோம். அதில் மாத்தறையில் நடந்த தப்லீக் விவாத மாநாட்டின் நடவடிக்கைகளை தப்புத் தவறுமாக எழுதி வீணான தீர்ப்புக்களும் எழுதப்பட்டிருக்கிறது. மாநாட்டுக்கு நாங்களும் போய் கடைசிவரை இருந்து கவனித்து வந்திருக்கிறோம். மாநாட்டு நடவடிக்கைகளை டேப் ரெக்கோடும் எடுக்கப் பட்டிருக்கிறது.

"தப்லீக் ஜமாஅத்தை உண்டாக்கிய இல்யாஸ் காந்திலவி வஹ்ஹாபி; அவர் வஹ்ஹாபியத்தை பரப்புவதற்காகவேதான் இந்த இயக்கத்தை உண்டாக்கியிருக்கிறார்" என்ற வாதியின் விவாதத்தைப் பரிசீலனை செய்வதற்காகவே தான் மாநாடு நடத்தப் பட்டது.

**பிரதிவாதி தரப்பினர்:** இல்யாஸின் உஸ்தாதுமார்கள் வஹ்ஹாபிகளாக இருந்ததினால் இல்யாஸ் வஹ்ஹாபி யாகிவிடுவாரா? அவரால் உண்டாக்கப்பட்ட இயக்கத்தில் சேரக்கூடாதா? அலியுல் ஜுபாயி வஹ்ஹாபி முஃதஜலியாக இருந்தும் அவரின் மாணவர் அபுல்ஹஸன் அஷ்அரியுடைய கொள்கையை ஸுன்னத்து வல் ஜமாஅத்து மக்கள் பின்பற்றியிருக்கிறார்களில்லையா? என்றார்.

**வாதிதரப்பார்:** இமாம் அஷ்அரி அவர்கள் வஹ்ஹாபி ஜுபாயிடம் படிக்கத்தான் செய்தார்கள். அவரைத் தனது குருவாக ஏற்று அவர் கொள்கையை சரிகாணவில்லை. அவரின் கொள்கை சரியில்லை என்று சொன்னார்கள். (துஹ்பதுல் முரீது 62-ம் பக்கம் பார்க்க) இல்யாஸ் வஹ்ஹாபிகளிடத்தில் படித்தார்; அவர்களை நல்லவர்கள் என்று, அவர்களின் கொள்கையை சரிகண்டு அவர்களைத் தனக்கு குருவாக்கி அவர்களிடம் முரீதானார். அவர்களை வலி, குதுபு என்றும் சொன்னார். அவர்களைப்பின்பற்றினார். வஹ்ஹாபியைப் பின்பற்றிய இவரும் வஹ்ஹாபி; அவரின் குருமார்கள் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் திட்டி ஏசி அவர்களின் நூல்களில் எழுதியிருக்கிறார்கள்; அந்த நூல்களெல்லாம் இதோ எங்களிடமும் இருக்கிறது இப்படி எழுதியதினால் அவர்கள் காபிர்கள் என்றும் அவர்களைக் காபிர்கள் என்று சொல்ல சந்தேகித்தவனும் தயங்கியவனும் கூட காபிர் என்றும் மக்கா, மதீனாவிலுள்ள உலமாக்கள் பத்வா கொடுத்திருக்கிறார்கள்; அந்த பத்வா கிதாபுக்கு "**ஹுஸாமுல் ஹறமைன்**" என்று பெயர். அதுவும் இதோ எங்களிடமிருக்கிறது என்றார்.

**பிரதி வாதி தரப்பினர்:** மக்கா, மதீனாவிலுள்ள உலமாக்களே தான் அவர்களை முஸ்லிம்கள், நல்லவர்கள் என்றும் பத்வா கொடுத்திருக்கிறார்களே என்று கலீல் அஹ்மது அம்

*பேட்டியால் எழுதப்பட்ட "அல்முஹன்னது" என்ற பத்வா கிதாபிலிருந்து ஷெய்கு முஹம்மது ஸஊது பாபஸீல் அவர்கள் எழுதியதாக காட்டப்பட்ட பத்வாவை வாசித்துக் காட்டச் சொல்லி வாசிக்கப்பட்டது.*

**வாதி தரப்பினர்:** *இது கள்ள பத்வா; கலீல் அஹ்மது அவரே சுவாலும் ஜவாபும் எழுதி , அப்படியானால் நீங்கள் நல்லவர்கள், முஸ்லிம்கள் என்றும் அவரே எழுதி, இந்தியா, தேவுபந்தி உலமாக்களின் கைஒப்பங்களுடன் மக்கா, மதீனாவிலுள்ள உலமாக்களுடைய கை எழுத்துக்களென்று அவரே கற்பனையாக எழுதி வைத்திருக்கிறார் என்றார்.*

**பிரதி வாதி தரப்பினர்:** *இல்யாஸ் வஹ்ஹாபியோ காபிரோ ஆகட்டும்;அவர் மவுத்தாகிவிட்டார், இலங்கையில் நடக்கிற தப்லீகில் வஹ்ஹாபியத்து இருக்கிறதாவென்று கேட்டார்.*

**வாதி தரப்பினர்:** *அதைப்பற்றி இங்கு பிரச்சனை இல்லை தப்லீக் ஜமாஅத்தை உண்டாக்கினது வஹ்ஹாபியத்தைப் பரப்புவதற்காகத்தான் என்றானால்; அது எங்கு நடந்தாலும் வஹ்ஹாபியத்து பரவத்தான் செய்யும் என்றார்.*

**பிரதிவாதி தரப்பினர்:** *நேரமாகிவிட்டது; மாநாட்டை முடித்து விடுங்கள் என்றும், "மக்கள் முடிவு சொல்லிவிட்டுப் போங்கள்" என்றும் கூச்சல் போட்டுக்கொண்டுமிருக்க, முடித்துவிட்டு ஆளுக்கொரு பக்கமாக ஓடிவிட்டார்கள்.*

*"மாநாட்டில் தப்லீக் ஜமாஅத்தை உண்டாக்கிய இல்யாஸ் வஹ்ஹாபி; வஹ்ஹாபியத்தைப் பரப்புவதற்காகவே தான் இந்த இயக்கத்தை உண்டாக்கியிருக்கிறார்" என்ற வாதியின் விவாதத்தைப் பிரதிவாதி தரப்பினர் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இருக்கிறதா? என்று கேட்க, அதைப்பற்றி இங்கு பிரச்சனை இல்லை என்று வாதி சொல்லிவிட்டார். இது தான் மாநாட்டில் நடந்தது.*

*"தப்லீக் ஜமாஅத்து விவாத மாநாடு" மாத்தறை என்ற நோட்டீஸில் வாதியிடம் "இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இருக்கிறதா"? என்று கேட்கப்பட்டதற்கு வாதி தரப்பார் பதில் சொல்லவில்லையென்று தவறாக எழுதிக்கொண்டு, அதனால் "இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இல்லை; அதில் எல்லா மக்களும் சேரவேண்டும்" என்று தீர்ப்புக் கூறியிருப்பதாகிறது. இவன் கள்ளன்; களவெடுக்கும் நோக்கத்திலேயே வந்திருக்கிறான்". என்று வாதிப்பவருடைய விவாதத்தை பரிசீலனை செய்வதற்காக மாநாடு கூடி வாதியிடம் "இவன் என் வீட்டில் களவெடுத்திருக்கிறானா"? என்று கேட்டோம். "*

*அவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை" என்று சொல்லி, ஆகையினால் "கள்ளனோடு அண்டிப் பழகுங்கள்; சேர்ந்து இருங்கள்". என்று தீர்ப்புக் கூறுவது போலாகிறது. இது விவேகமான தீர்ப்பா? அல்லது வீணான தீர்ப்பா? கள்ளன் தானா? களவெடுக்கும் நோக்கத்தோடு தானா வந்திருக்கிறான் என்பதைப் பரிசீலனை பண்ண சபை கூடினீர்களா? அல்லது உங்கள் வீட்டில் களவெடுத்திருக்கிறானா என்பதைப் பரிசீலனை செய்ய கூடினீர்களா? இதுவா இப்போதுள்ள பிரச்சனை? கள்ளன் களவெடுக்கும் நோக்க*

*த்திற்காகத்தான் வந்திருக்கிறான் என்றானால் உங்கள் வீட்டில் இப்போது களவாடா திருந்த போதிலும் எப்போதாவது களவெடுக்கத்தானே செய்வான். நோக்கத்திற்குப் புறம்பானதைப் பற்றி தீர்ப்புக் கூறுவது நேர்மையான தீர்ப்பாகுமா?*

*மாநாட்டில் இமாம் அஷ்அரி அவர்களின் உஸ்தாது யார்? என்று கேட்டதற்கு, வஹ்ஹாபி அலியுல் ஜுபாயி என்று சொல்லப்பட்டிருக்க, நோட்டீஸில் அஷ்அரி இமாம் அவர்களுடைய ஷெய்கு யார்? என்று கேட்டதற்கு ஜுபாயி வஹ்ஹாபி என்று சொன்னதாகவும் எழுதி இருக்கிறது. (அஸ்தஃபிறுல்லாஹ்) எங்கள் இமாம் அஷ்அரி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஜுபாயி வஹ்ஹாபியுடைய கொள்கையை நல்லதென்று சரிகண்டு அவரிடம் முரீதாகி, அவரையா தங்களுக்கு ஷெய்காக (குருவாக) ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்? இப்படித்தானா இமாம் அவர்களைப் பற்றி நீங்கள் நம்பியிருக்கிறீர்கள்? இப்படித்தானா மாநாட்டில் கேட்கப்பட்டது? ஏன் இப்படி இமாம் அவர்கள் பெயரில் பொய் சொல்கிறீர்கள்.*

*நோட்டீஸில் 3 நீதிபதிகளும் தீர்ப்புக் கொடுத்ததாக எழுதியிருக்கிறது. இது சுத்தப் பொய்யாகும். நீதிபதிகளில் ஒருவரான மவுலவி பாஜில் முஹம்மது கவுஸ் பாகவி அவர்கள் தாங்கள் அப்படி தீர்ப்புக் கொடுக்கவில்லை என்றும், தனது ஒப்பத்தை புளொக் செய்து கள்ளத்தனமாக தீர்ப்பில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது; அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சொல்லி, தாங்கள் சபைத் தலைவருக்கு ஏற்கனவே ரிஜிஸ்டரில் அனுப்பி வைத்திருக்கிற தங்களின் தீர்ப்பின் நகலையும் தந்தார்கள். அதையும், அவர்கள் ஸூபி ஹஜ்ரத் அவர்களுக்கு எழுதிய தபாலையும் இதனுடன் இணைத்திருக்கிறோம்.*

*மேலும் தீர்ப்பில் ஸூபி ஹஜரத் அவர்களை வீண் துஷ்பிரசாரம் செய்யாது விட்டு விடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது என்றும் எழுதியிருக்கிறது. ஸூபி ஹஜ்ரத் அவர்கள் துஷ் பிரசாரம் செய்கிறார்களா? அல்லது ஆலிம், மவுலவி, பாஜில், அதிபர், ஜேபீ, என்று வைத்துக்கொண்ட தப்லீக் அபிமானிகளா? ஸூபி ஹஜரத் அவர்கள் நம் ஸுன்னத்துவல் ஜமா அத்து மக்களில் வஹ்ஹாபியத்து பரவி, மக்களிடையில் குழப்பம் உண்டாகக் கூடாது என்று, இப்போது வந்திருக்கிற தப்லீக் ஜமாஅத் என்ற இயக்கம் வஹ்ஹாபியத்தை பரப்புவதற்காக வந்திருக்கிறது; அதன் ஸ்தாபகரும் அவரின் குருமார்களும் வஹ்ஹாபிகள்; அவர்களின் கெட்ட வஹ்ஹாபிக் கொள்கைகளை அவர்களின் நூல்களில் எழுதியிருக்கிறார்கள்; றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இப்லீஸை விடவும் அறிவில் குறைந்தவர்கள்; அவர்களுக்கு தெரிகிற அறிவைப் போல பேயன், பைத்தியக்காரன், மதளை, மிருகங்களுக்குக்கூட தெரியும் என்றும் அவர்கள் ஒரு அற்ப அணுவுக்கு கூட சமமாக மாட்டார்கள்; செம்மானை விடவும் குறைந்தவர்கள்; அவர்களின் நினைப்பு வருகிறதானது, கழுதை மாட்டினுடைய நினைப்பில் மூழ்குவதை விடவும் கெட்டது; என்றும் அவர்கள் மவுத்தாகி மண்ணோடு மண்ணாகிவிட்டார்கள் அவர்கள் தேவுபந்தி உலமாக்களிடத்தில் உருது பாஷை கற்ற மாணவர் என்றும் இன்னும் பலவாறாக ஏசி திட்டி, அவர்களின் இன்னின்ன நூல்களில் இன்னின்ன விதமாக எழுதி இருக்கிறார்கள் என்று அவர்கள் எ*

*புதிய நூலின் பக்க நம்பர் வாசகத்தோடு எடுத்துக்காட்டி, அவர்களின் சீடர் இந்த இயக்கத்தின் ஸ்தாபகர் இல்யாஸ் அவர்களை எல்லாம் தனக்கு குருமார்களென்று ஏற்றுக்கொண்டு, அவர்களை வலி, குதுபு என்றும் அவரின் இன்னின்ன நூல்களில் சொல்லியிருக்கிறார்; அவரின் நோக்கம் தொழுகைக்கு அழைப்பதில்லை என்று சத்தியம் செய்து சொல்லி, அவரின் நோக்கம் அவரின் குருமார்களுடைய வஹ்ஹாபிக் கொள்கையை பரப்புவதுதான் என்றும், அவர் வாயாலேயே சொல்கிறார்; ஆகையால் இந்த இயக்கத்தில் சேராதீர்கள். சேர்ந்தால் உங்களுடைய ஈமானுக்கு ஆபத்து உண்டாகும் குறைந்தது அதன் ஸ்தாபகர் இல்யாஸையும் அவரின் குருமார்களான கொங்கோஹி, தானவி, அம்பேட்டி, நானுத்தவி இவர்களையெல்லாம் முஸ்லிம்கள், நல்ல மனிதர்கள் என்றாவது மனதில் நம்பிக்கை வரும் ; இவர்களையெல்லாம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏசியவர்கள்; றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏசியவன் காபிர்; அவனை காபிர் என்று சொல்ல சந்தேகித்தவனும், தயக்கம் கொண்டவனும் காபிராவான் என்றால் அவனை முஸ்லிம், நல்ல மனிதன் என்று சொன்னவன் யாராகும்? ஆகையால் அதில் சேராதீர்கள் என்று பிரச்சாரம் செய்து கொண்டேயிருக்கிறார்கள் அவர்களின் பிரச்சாரத்தினால் அநேக மக்கள் அந்த இயக்கத்தின் மர்மத்தைத் தெரிந்து அதைவிட்டும் நீங்கிவிட்டார்கள். அவர்களின் தளராத பிரச்சாரமில்லாதிருந்தால் இன்று முழு இலங்கையிலும் வஹ்ஹாபியத்து பரந்து இருக்கும்.*

*நீங்கள் மவுலவி, பாஜில், அதிபர், ஜேபீ இன்னும் என்னென்னமோ பெயர்களுள்ள பெரியார்களாக இருந்தும், ஸூபி ஹஜரத்தால் இல்யாஸ், அவரின் குருமார்களைப் பற்றி எழுதிக்காட்டிய குற்றச்சாட்டுகளில் ஒன்றையாவது இல்லையென்று மறுக்க முடிந்ததா? (உள்ளதை எப்படி மறுக்கவோ மறைக்கவோ முடியும்) மக்கள் எப்படி கெட்டுப்போனாலும் சரி; நாம் பிடித்ததை விடக்கூடாது என்ற பிடிவாதத்தோடு எப்படி வேண்டுமானாலும் சொல்லத் தயங்குகிறீர்களில்லை. இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இல்லை; கொழும்பு தப்லீகில் வஹ்ஹாபியத்து இல்லை; என்று எப்படியாவது சாக்குப் போக்கு சொல்லி குழப்பிவிட்டு மக்களை வழிகேட்டில் இழுபட வைக்காதீர்கள். நீங்கள் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்ளுடைய அனந்தரக்காரர்கள் என்று சொல்கிறீர்கள்; றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏசியவனுடைய இயக்கத்தில் மக்களை சேரும்படி சொல்கிறீர்களே, உங்களுக்கு உரோசமில்லையா? உங்கள் தாய் தகப்பன் உறவினர்களை ஏசியவனோடு யாரையாவது அண்டிப்பழகச் சொல்வீர்களா? இலங்கை தப்லீகில் வஹ்ஹாபியத்து இல்லை; சேருங்கள் என்று சொல்கிறீர்கள்; இலங்கை தப்லீக் வேறே இல்யாஸ் தப்லீக் வேறேயா? இல்யாஸ் தப்லீக்கைத்தானே செய்கிறோம் என்றும் சொல்கிறீர்களே; இலங்கை தப்லீக் வஹ்ஹாபியத்தைப் பரப்புவதற்காக உள்ளதில்லை; தொழுகைக்கு கூப்பிடுவதும் ஏவல் விலக்கல் செய்வதும் தான் இதன் நோக்கம் என்றால் இதற்கு "தப்லீக்" என்ற பெயர் தான் சொல்லலாமா? வஹ்ஹாபிக் கொள்கையை அது எட்டாத ஸுன்னத்து ஜமா அத்து மக்களிடத்தில் அதை எட்டி வைப்பதற்காகவல்லவா இல்யாஸ் "தப்லீக் ஜமா அத்து" என்று பெயர் வைத்து இருக்கிறார்? தொழுகைக்கு கூப்பிடுவதற்கு "தொழுகைக்கு அழைப்பது" என்றல்லவா சொல்ல வேண்டும்? எட்டிவைப்பது என்றா சொல்வது? மாத்தறை மாநாட்டில் எத்தனை பேர்கள் இல்யாஸுக்கு "றஹ்*

*மத்துல்லாஹ் என்று சொன்னார்கள்? தெரியாதவர்கள் தானா சொன்னார்கள்? மவுல விகளுந்தானே சொன்னார்கள். றஹ்மத்துல்லாஹ் என்று முஸ்லிமுக்கல்லவா சொல்வது ! இல்யாஸுக்கு றஹ்மத்துல்லாஹ் என்று சொன்னால் அவரை முஸ்லிமென்று ஒப்புக்கொண்டதாகிறது. றஸூலுல்லாஹ்வை ஏசியவன் காபிர் அவனைக் காபிர் என்று எல்லா உலமாக்களும் சொல்லியிருக்கிறார்கள். ஏன்? நீங்களும் தான் இந்த மாநாட்டில் அப்படிச் சொன்னீர்கள்; அப்படியானால் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை ஏசியவனை ஒலி குதுபு என்று சொன்னவன் யார்? அவனை முஸ்லிம் என அவனுக்கு "றஹ்மத்துல்லாஹ்" என்று சொன்னவர்கள் எப்படியாவார்கள் (நவூது பில்லாஹி மின்ஹா) தவுபா செய்யுங்கள் அம்பேட்டின் "அல்முஹன்னது" என்ற கற்பனை பத்வாவில் இல்யாஸின் குருமார்களை அவர்கள் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை திட்டி ஏசி எழுதியதினால் அவர்களைக் காபிர்கள் என்று பத்வா கொடுத்த அதே உலமாக்கள் அவர்களை எல்லாம் முஸ்லிம்கள் நல்லவர்கள் என்று பத்வா கொடுத்திருப்பதாக சொல்வதை நம்பாதீர்கள். அது சுத்தப் பொய்யான கற்பனையான பத்வாவாகும். ஒருவரைக் காபிர் என்று சொல்வது இலேசான காரியமில்லை. மரண தண்டனைத் தீர்ப்புக் கொடுப் பதைவிடவும் கடினமானது. பொறுப்பில்லாது சும்மா இலேசாகத் தீர்ப்பு கூறிவிட முடியாது சரியான காரணமில்லாது ஒரு முஸ்லிமை காபிர் என்று பத்வா கொடுத்தால் கொடுத்தவன் காபிராகிவிடுவான். மக்கா, மதீனாவிலுள்ள பெரும் உலமாக்களும் முப்திமார்களுமாக 35பேர்களும் இந்தியாவில் பலபாகங்களிலுமுள்ள 268 உலமாக்களும் சரியான காரணமில்லாது பொறுப்பில்லாமல் ஒருவர் பேரில் குப்ரு பத்வா கொடுப்பார்களா? அவர்கள் என்ன காரணத்தைப் பொறுத்து இல்யாஸின் குருமார்களை காபிர்கள் என்று பத்வா கொடுத்தார்களோ அதே காரணங்களான குப்ரியத்தான வாசகங்கள் அவர்களின் கிதாபுகளில் அச்சாகி உலகமெல்லாம் வெளியாகி இருக்கும் போது அந்த கிதாபுகள் எங்களிடத்திலுமிருக்கிறது. இப்படி இருக்கும்போது காபிர்களென பத்வா கொடுத்த அதே உலமாக்கள் திரும்ப காபிர்களில்லை. உண்மையான முஸ்லிம்கள் என்று பத்வா கொடுப்பார்களா? ஒருபோதும் அப்படிச் செய்யவே மாட்டார்கள்.* **அல்முஹன்னது என்ற பத்வா சுத்தப் பொய்யான கற்பனை.** *அதைப் பற்றி "***அல்முஹன்னதின் அண்டப்புளுகு***" என்ற நாமத்தோடு ஒரு கட்டுரை சீக்கிரமாக வெளிவரும். (கட்டுரை புஸ்தகம் இப்போது வெளியாகிவிட்டது.)*

*இந்த மாத்தறை மாநாட்டில் இல்யாஸுக்கு "றஹ்மத்துல்லாஹ்" என்று சொன்னது இலங்கை தப்லீகிலுள்ளவர்களும் அதன் அபிமானிகளும்தானா? அல்லது வேறெங்குமுள்ளவர்களா?*

*ஆகவே, நம் ஸுன்னத்து ஜமாஅத்து சகோதரர்களை வேண்டிக்கொள்கிறோம். நீங்கள் இந்த இயக்கத்தில் சேராதீர்கள். இந்த இயக்கத்தில் சேர்ந்தால் நம்மிடமிருந்து திருடப்படத்தான் செய்யும். எதை? பொருளையல்ல எங்கிலும் பொருளிலும் உயிரிலும் பிரதானமாகிய ஈமானை, ஏன் திருடுதல் என்றால் தெரியாதபடி எடுப்பது தானே? இந்த இயக்கத்தில் சேர்ந்தால் நமக்குத் தெரியாமல் நமது ஈமான் பறிக்கப்படத்தானே செய்யும். ஏன் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏசியவர்களின் உகப்பு நம் மனதில் வரத்தானே செய்யும். வந்தால், றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உகப்பு பறிக்கப்பட்டுத் தானே போகு*

*ம்; ஈமான் பறிக்கப்பட்டுத்தானே போகும். ஆகையால் நீங்கள் இதில் அறவே சேரா தீர்கள். அல்லாஹ் உங்களுக்கும் எங்களுக்கும் றஹ்மத்து செய்வானாக ஆமீன்.*

1. **ஏ.ஸீ.எம். கலீல்**
   *இக்பாலிஸ்டான் தர்கா டவுண்.*
2. **மவுலவி எம்.ஏ.எம். நஈம்**
   *கஹட்டோவிட்ட, ருக்கஹவில.*
3. **எம்.ஏ. ஆமிர்**
   *9 சக்வீதி லேன் கொழும்பு-5.*
4. **ஏ.எல்.எம். முகம்மது**
   *54/1 கிறிப்ஸ் றோட், காலி.*
5. **எ.எச்.எம். ஹுஸைன்**
   *23/1 கட்டுக்கொடை, காலி.*
6. **பி.எம். ாஹுல் ஹமீது**
   *6/1 றிச்மன் ஹில்றோட், காலி.*
7. **அல்ஹாஜ் எம்.ஏ. எம் நிலாம்**
   *30, விவேகானந்த ரோட், கொழும்பு-6.*
8. **எம்.ஐ.ஏ.ரஹ்மான்**
   *புதிய தெரு, வலிகாமம்.*
9. **எம். எல். ஏ. ரஹீம்**
   *கெட்டப்பிட்டிய, அக்குறஸ்ஸ.*
10. **ஏ.எம். ஸஹீத்**
    *மதுரகொட, வலிகாமம்*

786

MOULAVI FAZIL

A. L. M. GHOUSE [BAKAVI]

Panchikawatte Road,
COLOMBO-10

DATE 10th August 1965.

[illegible]

2

786

MOULAVI FAZIL

A. L. M. GHOUSE [BAKAVI]

(2)

Panchikawatte Road
COLOMBO-10

DATE ............19

[illegible]

A.L.M. Ghouse Bakawi

10 . 8 . 65

3

786

**MOULAVI FAZIL,**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

2, BADRIYA LANE
Panchikawatte Road,
COLOMBO-10

DATE 20th August 1965

M. N. M. Liyaudeen Alim J.P.

[illegible]

---

786

**MOULAVI FAZIL,**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

(2)

2, BADRIYA LANE
Panchikawatte Road,
COLOMBO-10

DATE ........ 19

[illegible]

---

5.

786

**MOULAVI FAZIL,**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

(3)

2, BADRIYA LANE
Panchikawatte Road,
COLOMBO-10

DATE ........ 19

[illegible] 10. 8. 65 [illegible]

A. L. M. Ghouse Bakavi

20 . 8 . 65

---

6

786

**MOULAVI FAZIL,**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

2, BADRIYA LANE
Panchikawatte Road,
COLOMBO-10

DATE 23 . 8 . 1965

M. N. M. Liyaudeen Alim J.P.

[illegible] 8 8 1965 [illegible]

A. L. M. Ghouse Bakavi

22 . 8 . 65